
KALKI
11-11-84. ரூ.1-50
கல்கி



ரஸ்னா

"நானே இன்னைக்கு தயார் பண்ணிட்டேன்"

ரஸ்னா என்றால் குழந்தைகளுக்கு கொள்ளை விருப்பம். ரஸ்னா தயாரிப்பது மிகவும் சுலபம். குழந்தைகள்கூட ரஸ்னாவை அருமையாக தயாரித்து விடுவார்கள்!

சர்க்கரை மற்றும் நீருடன் ரஸ்னாவைக் கலக்குங்கள். நிமிடங்களில் பானம் தயார். 32 டம்ளர் சுவைமிக்க பானம் தயாரிக்க 2 பாட்டில்கள் சிரப் போதும்.

அதோடு, ரஸ்னாவின் விலையை இதர எந்த சிரப்/ஸ்வாகுஷின் விலையுடன் ஒப்பிட்டால், ரஸ்னாவின் விலை பாதியே ஆகும். இது மட்டுமா, ரஸ்னா நா—சப்புக் கொட்டும் 8 நறுமணங்களில் கிடைக்கிறது.

இப்போது! ஒரு புதிய சர்வதேச பாக்கிங்கிலே.



ரஸ்னா

ஸாஃப்ட் ட்ரிங்க் கான்ஸன்ட்ரேட்

சுவையானது!
சிக்கனமானது!

தயாரிப்பவர்கள்: பயோமா இண்டஸ்ட்ரீஸ், அசர்வா, அஹமதாபாத்-380 016
இவ்விடங்களிலும் கிடைக்கிறது: குவைத், துபாய், பேஹ்ரின், மொரீஷியஸ், கெய்ரோ, கார்டூம், லுஸாகா, நெய்ரோபி, ஜெத்தா, ஓஸ்லோ, லண்டன்.

Mudra: A: PI: 1525 T



○ கண்ணீருக்கு அணைகட்டி துயரை முகத்தில் தேக்கிய நிலையில் ராகுல் காந்தி

மனிதாபிமானம் மடிந்த நாட்கள்

வாஸந்தி

வழக்கமான அறியாத்தன மெத்தனத்துடன் 31-ம் தேதி விடிந்தது. ஆரம்பித்துவிட்ட குளிரை லட்சியம் செய்யாத வேகத்துடன் குழந்தைகள் பள்ளிக்குப் போனார்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்துக்குச் சென்றார்கள்— அன்றைய தினம் தன்னுள் தேக்கி வைத்திருந்த பயங்கர சதியை உணராமல்...

பத்தரை மணிக்கு டெலிபோன் வந்தது. ஒரு சிநேகிதியிடமிருந்து. "இந்திராகாந்தியை யாரோ சுட்டு விட்டார்கள். ரொம்ப ஸீரியஸ்ஸாம்!"

கையும் காலும் பதறிப் போகிறது எனக்கு. இங்கும் அங்கும் பல இடங்களுக்கு டெலிபோன் செய்கிறேன். செய்தி ஊர்ஜிதமாகிறது, விவரங்களுடன்.

இந்திராகாந்தியை, அவருடைய வீட்டுக் காம்பவுண்டுக்குள் அவருடைய சொந்தப் பாதுகாவலர்களே இரண்டு பேர்கள் மெஷின் கன்னினால், 36 ரவுண்டு வயிற்றிலும் மார்பிலும் சுட்டார்கள் என்று. 18 புல்லட்டுகள் உடம்பில் பாய்ந்திருக்கிறது என்று—

AIIMSக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஆபரேஷன் செய்கிறார்கள் என்று—

நான் அதிர்ந்து போகிறேன். இத்தனை குண்டுகள் அந்த 66 வயது சரீரத்துக்குள் பாய்ந்தபின் இன்னும் உயிர் இருக்குமா என்று அனுமானிக்கிறேன். பதினொன்றரை மணிக்குப் பத்திரிகை நண்பர் ஒருவரிடமிருந்து செய்தி வருகிறது. சுருக்கமாக—

"முடிந்து விட்டது!"

எனக்கு மூளை இயங்க மறுக்கிறது. வார்த்தைகள் எழவில்லை. அதிர்ச்சியுடன் போனை வைத்துவிட்டு அவசரமாக ரேடியோவைத் திருப்புகிறேன். இந்திய நிலையங்களில் 'சுகம் சங்கீத்' வருகிறது. பாகிஸ்தான் நிலையங்களில் கிரிக்கெட் காமெண்டரி வருகிறது. பன்னிரண்டு மணிக்கு காமெண்டரி தடைப்பட்டு முக்கிய அறிவிப்பு. "இந்திய பிரதமர் சுடப்பட்டு அபாய நிலையில் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்" என்று.

ஆனால் சில நிமிஷங்களில் ஆட்டமும், காமெண்டரியும் நின்று போகின்றன.

சில அரசாங்க அலுவலக நண்பர்களுக்கும், கணவருக்கும் டெலிபோன் செய்கிறேன். அவர்களுக்கு மரணத்தைப் பற்றிச் செய்தியில்லை. ஆனால் எல்லார் குரலிலும் பீதியும், சந்தேகமும், சோகமும், வருத்தமும்... ஜனாதிபதியும் ராஜீவும் ஊரில் லாத சமயத்தில் செய்யப்பட்ட சதி என்கிற பீதி... இந்திராவின் பிரத்தியேக பாதுகாவலரே தீர்த்து விட்டார்கள் என்கிற கோபம்...

இந்தக் கோபம்தான் கேட்பவர்கள் நெஞ்சையெல்லாம் அதிர்ச்சியுடன் தாக்குவதை நான் என்னைச் சுற்றி உணருகிறேன். என்னுடைய நேபாள வேலைக்காரனும், அவன் மனைவியும் செய்தி கேட்டு அதிர்ந்து பொங்குகிறார்கள்.

"ரக்ஷன் கர்னே வாலே பக்ஷண்



○ இந்நாட்டின் கோடானு கோடி ஏழைகளின் துயர் களைப் போக்கிய சகோதரி



○ ராஷ்டிரபதியின் அஞ்சலி அருகில் ராஜீவ்

கார்தியா?'' என்று ஆத்திரப்படுகிறான். (காக்க வேண்டியவர்களே அழித்து விட்டார்களா?) மூன்று மணிக்கு வரும் என் சின்னப்பையன் ஒரு மணிக்கு வந்து விட்டான். பதினொன்றரை மணிக்குப் பள்ளி மூடிவிட்டார்கள் என்கிறான். பள்ளித்தலைவி —சர்தாரிணி. ''இந்திராகாந்தி இறக்கவில்லை ஆஸ்பத்திரியில் தான் இருக்கிறார்' என்று என்னிடம் சண்டை போடுகிறான். இருவருமாக ஒன்றரை மணிக்கு B. B. C. News Service கேட்கிறோம். தெளிவாக அறிவிக்கிறார்கள். பி. டி. ஐ. செய்திப்படி இந்திராகாந்தி காலமாகி விட்டார்கள் என்கிறார்கள் — பிரதமரின் சரித்திரம் சொல்கிறார்கள், புகழ் பாடுகிறார்கள் அக்கம்பக்கத்தவர்கள் எல்லாம் நான் சொன்ன செய்தியை நம்புவதாக இல்லை. இந்திய ரேடியோவில் சொல்லவில்லையே என்று என்னையே சந்தேகத்துடன் பார்க்கிறார்கள்.

பெரிய பிள்ளை யூனிவர்ஸிட்டியிலிருந்து திரும்புகிறான். அவன் நம்புகிறான். சம்பவத்தைப் பற்றிய செய்தி காட்டுத்தீயாய் எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறது. சம்பவத்தை விட அதனால் ஏற்படப்போகும் விளைவுகள் அதிக அதிர்ச்சியானவை என்று பிள்ளை சொல்கிறான். மிகப் பெரிய கலகம் ஏற்படும் என்கிறான் தீர்க்கதரிசியைப் போல். சின்னப் பையன் அவன் சொல்வதையெல்லாம் வாயைப் பிளந்துகொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறான்...

ஒரு கையாலாகாத்தனமும், ஏமாற்றமும் துயரமும் கோபமும் என்னுள் பொங்கிப் பொங்கி எழுவதை அடக்க முடியாமல் தவிக்கிறேன்...

இன்னும் அரசு செய்தியை வெளியிடவில்லை. ஜனாதிபதிக்கும் ராஜீவுக்கும் காத்திருக்கிறது. இந்திராகாந்தியின் சடலம் இருக்கும் ஆஸ்பத்திரி வாயிலில் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் செய்தி தெரியாமல் புலம்பிக் கொண்டும், பிரார்த்தித்துக் கொண்டும் இருப்பதாகப் பத்திரிகைநண்பர் போனில் சொல்கிறார். அன்றைக்கு நான் செல்ல வேண்டிய மீட்டிங் ஒன்று இருந்தது. வெளியிலே தலைகாட்டாதே என்று நண்பர்கள் எச்சரித்ததில் வீட்டில் முடங்கியிருக்கிறேன்.

'இந்த மாதிரி ஒரு செய்திக்குப் பின் என்றால் வீட்டில் இருக்க முடியாது. வெளி நிலவரம் தெரிய வேண்டும்' என்று பெரிய பிள்ளை பிடிவாதமாக வெளியில் போகிறான்.

கணவர் அலுவலகத்திலிருந்து வருகிறார். இரண்டு காவலர்கள் ஒருவர் பின் ஒருவராக எப்படிப் பிரதமரை விடாமல் சுட்டு வீழ்த்தினார்கள் என்று விவரிக்கிறார். எப்படிப் பட்ட நம்பிக்கைத் துரோகம் பார்த்தாயா? என்கிறார். இதே காவலர்கள் சந்தேகத்துக்குரியவர்கள் என்று தில்லி போலீஸ் எச்சரித்தும் பிரதமர் அதை ஏற்காமல் இவர்களை நம்பி வைத்துக் கொண்டிருந்தார் என்கிற தகவல் சொல்கிறார்.

ஆறு மணிக்கு ரேடியோவும், டீ. வி.யும் மரணச் செய்தியை அறிவிக்கின்றன. சில நிமிஷங்களுக்குப் பிறகு திரு. ராஜீவ் காந்தி பிரதமராகி விட்ட செய்தி அறிவிக்கப் படுகிறது. நான் எதிர்பார்த்தது. (Woman's"instinct.?')

நான் செல்லாத மீட்டிங்குக்குச் சென்றிருந்த நண்பர் வீடு திரும்புகிறார். கலவரம் ஆரம்பித்து விட்டது. வழிநெடுகிலும் ஆட்டோ ரிக்‌ஷாக்களும் பஸ்களும் கடைகளும் அங்கங்கே தீ வைக்கப்பட்டு எரிந்து கொண்டிருக்கின்றன என்கிறார்.

என் பெரிய பிள்ளை இன்னும் வீடு திரும்பவில்லை. எட்டரை மணிக்கு டெலிபோன் செய்கிறான். அவன் சென்றிருக்கும் இடத்தில் ஏகக் கலவரமாம். 'நண்பன் வீட்டில் தங்குகிறேன். வெளியில் தலை காட்ட முடியாது. நாளை முடிந்தால் வீட்டுக்குத் திரும்புவேன். கவலைப்படாதே' என்கிறான்.

நான் புதிய கவலையுடன் படுக்கச் செல்கிறேன்.

காலை. மௌன சோகத்துடன் எல்லோரும் கரிய சட்டம் போட்ட செய்தித்தாள்களில் மூழ்கியிருக்கிறோம்.

டெலிபோன் ஒலிக்கிறது. கல்கி ஆசிரியரின் குரல் சென்னையிலிருந்து. துயரமும், ஆற்றாமையும் தொனிக்கும் குரல். 'தில்லி ஜனங்களின் பொதுவான மனநிலையைப்பற்றி ரிப்போர்ட் அனுப்புவீர்களா?'' என்கிறார்.

''கண்டிப்பாக'' என்கிறேன். வெளியில் போகாமல் என்றால் எந்த ரிப்போர்ட்டையும் எழுத முடியாது என்று கணவரிடம் உணர்த்திக் கிளம்புகிறேன். தீன் மூர்த்தி பவனில் வைக்கப்பட்டிருக்கும் பிரதமரின் சடலத்தைப் பார்க்க ஜனங்கள் சாரிசாரியாகச் சென்று கொண்டிருக்கிறார்கள் தயக்கமில்லாத தீவிரத்துடன். வெகு தொலைவிலேயே வண்டிகள் நிறுத்தப்பட்டு வி. ஐ. பிக்கள் உள்படக் கையில் மலர் வளையங்களை ஏந்தி நடந்து செல்கிறார்கள். பணக்காரர்களும், ஏழைகளும் முக்கியஸ்தர்களும் பாமரர்களும் புறச்சிந்தனை ஏதுமில்லாத துயரப் பார்வையுடன் நடக்கிறார்கள். தீன் மூர்த்தி பவனின் கேட்டுக்கப்பால் முண்டியடிக்கும் ஜனத்திரள். க்யூ பல மைல்களுக்கு நீண்டிருக்கிறது. பொறுமையிழந்த ஜனத்திரளிலிருந்து வரும் ஓசை சமுத்திர ஓசையைப் போல் இருக்கிறது. ஒரு பக்கம் கட்டுப்பாட்டுடன் வரிசை வரிசையாக ஜனங்கள் நடக்கிறார்கள் முழக்கங்களுடன்.

'ஜப்தக் ஸூரஜ் சாந்த் ரஹேகா இந்திரா, தேரா நாம் ரஹேகா' (சூர்ய சந்திரர் இருக்கும் வரை, இந்திரா, உன் பெயர் இருக்கும்!') இதைத் தவிர அங்கங்கே முழக்கங்கள் 'இந்திரா காந்தி அமர் ரஹே! இந்திராகாந்தி ஜிந்தாபாத்!'

இப்போதிருக்கும் கூட்டம் உள்ளே சென்று வருவதற்குக் குறைந்தது ஐந்து மணி நேரமாவது ஆகும் என்று தோன்றுகிறது. கூட்டத்திற்கு நடுவே புகுந்து மலர் வளையங்களுடன் திரு. நம்பூதிரிபாதும், வயது முதிர்ந்து சுருங்கிப் போன என். ஜி. ரங்காவும் தங்கள் நண்பர்களுடன் விரைகிறார்கள். முகத்தில் ஒரு நிரந்தர சோகமும் கையில் மலர் வளையமுமாக நாட்டியக் கலைஞர்கள் ராஜா, ராதாரெட்டி... அயல்நாட்டுக்காரர்கள் கேமராக்களைத் தூக்கிக் கொண்டு அலைகிறார்கள். ஒரு ஓரமாக ஒருவர் மலர் மாலைகளை விற்றுக் கொண்டிருக்கிறார். சின்னஞ்சிறு பாலகர்கள் அம்மாமார்களின் கைகளைப் பிடித்தபடி, பல நூறு கேள்விகளைக் கேட்டபடி...

ஒரு பக்கம் சேலத்தைச் சேர்ந்த தென்னிந்தியர்கள் தமிழும், கன்னடமும் கலந்த மணிப் பிரவாளத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தனை கூட்டத்தைக் கடந்து எப்ப தரிசனம் கிடைக்கப் போகிறதோ என்று பிரலாபிக்கிறார்கள்.

நான் பேச்சுக் கொடுத்ததும் பொல பொலவென்று பேச்சும் கண்ணீருமாக ஒரு பெண்மணி உருக்கிறார்.

'இந்திரபுரியிலேர்ந்து வர்றோம். அந்தம்மா இடம் கொடுத்ததிலே தான் வீடு கட்டிக்கிட்டோம். ஏழைங்ககிட்ட, பொம்பளைங்க கிட்ட அந்தம்மா மாதிரி யாருங்க இனிமே கருணை காட்டப் போறாங்க?''

''சேதி கேட்டதிலேர்ந்து நாங்க யாரும் சோறு தின்னலீங்க...?''

''ராத்திரி முழுதும் கருப்புத் துணி விரிச்சு, அம்மா படம் வெச்சு எல்லாரும் பிரார்த்தனை செய்துக்கிட்டிருந்தோம்'' என்கிறார்கள், அவர்களைச் சேர்ந்த பெருமாளும், ராமசாமியும்.

கூட்டத்தில் நின்றிருந்த ஐ. ஐ. டி. யில் படிக்கும் சில தமிழ் மாணவர்கள் என்னை அடையாளம் கண்டு பேச வருகிறார்கள்.

தஞ்சாவூரைச் சேர்ந்த தாயுமானவனும், அன்பழகனும், மதுரையைச் சேர்ந்த ஜீவன் தாஸும் உற்ற உறவினரை இழந்த சோகத்தைப் பிரதிபலிக்கிறார்கள். சாலையி

● ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவிப் பிரமாணம் ஏற்கிறார்



லேயே வந்து உள்ளே சென்று சடலத்தை நமஸ்கரித்து விட்டுத் திரும்பியிருக்கிறார்கள்.

'நேற்று காலை பத்தரை மணிக்கு விஷயம் தெரிஞ்சு போச்சு. காம்பஸ் முழுவதும் ஸ்தம்பிச்சிடுச்சி.''

''நம்பிக்கை துரோகங்க இது! நம்பிக்கை துரோகம்!'' என்று வெடிக்கிறார், அன்பழகன்.

அருகிலிருக்கும் ஒரு வடக்கத்தியர் ரகசியக் குரலில் ஹிந்தியில் சொல்கிறார்.

''தெற்கு தில்லியில் கண்ணில் அகப்பட்ட சீக்கியரையெல்லாம் ஜனங்கள் அடித்துப் புடைத்துக் கொண்டிருக்கிறார்கள். குருத்வாராக்களுக்கு நெருப்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்...''

அவர் மேலும் மேலும் விவரிக்கையில் எனக்கு வயிற்றைக் கலக்குகிறது.

திடீரென்று ஒரு விஷயம் தாக்குகிறது. அந்த மாபெரும் கூட்டத்தில் ஒரு சீக்கியர் இல்லை! தில்லியில் எந்தக் கூட்டத்திலும் இதுவரை கண்டிராத அனுபவம் இது.

கூட்டத்தில் பெரிய சலசலப்பு ஏற்படுகிறது. கூட்டத்தின் ஆர்ப்பரிப்பைச் சமாளிக்க போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தது. நான் வண்டிக்கு விரைந்தேன்.


பிரதான சாலைகளாக அவுரங்கஜீப் ரோட், ஷாஜஹான் ரோடியெல்லாம் ஈ காக்காய் இல்லை. ஜன் பத்தும் கன்னாட்பிளேஸும் (ஜே ஜே என்றிருக்கும்) காலியாக நீண்டிருக்கின்றன. அதைத் தாண்டி கஸ்தூரிபா காந்தி மார்க்கில் இருக்கும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் ஆபீஸ் கட்டிடத்திற்குச் சென்று அதன் பிரதான ஹிந்தி வெளியீட்டின் ஆசிரியரின் அறைக்குள் நுழைகிறேன்.

அவருடைய முகமும் அவருடன் இருந்த அலுவலக அன்பர்களின் முகமும் பேயறைந்தாற்போல் இருக்கின்றன. அவ்வப்போது நியூஸ் ரூமில் வந்து சேரும் செய்திகளின் தாக்குதல்களைத் தாங்கிக் கொள்ளத் திணறுபவர்கள் போல் தெரிகிறார்கள். பிரதமரின் மரணத்தைப் பற்றிய துக்கத்திற்கு மேல் அதற்குப் பிறகு ஏற்பட ஆரம்பித்துவிட்ட விளைவுகளைப் பற்றியே அவர்களுக்கு அதிகக் கவலை என்று எனக்குப் புரிகிறது.

ஒரே தெருவில் பன்னிரண்டு ஸ்கூட்டர்கள் (ஆட்டோரிக்ஷாக்கள்) எரிவதைத் தாமே கண்ணால் பார்த்ததாகச் சொல்கிறார் பத்திரிக்கை ஆசிரியர். ஆளுக்கு ஆள் பல பயங்கர செய்திகளைத் தெரிவிக்கிறார்கள். ஒரு ஊழியர் அவசரமாக ஓடி வருகிறார். ''மேல் மாடியில் சென்று பாருங்கள். கண்ணால் பாருங்கள்!'' என்று படபடக்கிறார். நாங்கள் 18—ம் மாடிக்கு லிஃப்டில் விரைகிறோம்.

கண்ட காட்சி என்னைத் திடுக்கிட வைக்கிறது. கண்ணுக்குத் தெரிந்த நாலா பக்கத் தொலைவுகளிலும் தில்லி எரிவது தெரிகிறது. கரிய புகை மண்டலங்கள் வானை நோக்கி எழும்பிக் கொண்டிருக்கின்றன!

''அது பஹாட்கஞ்ச்! அது கரோல்பாக்! அது சக்கர்பூர்! அது...!''



''குடிப் பழக்கத்தை யார் முதலில் விடறதுன்னு நானும் இவரும் பந்தயம் கட்டியிருக்கோம்.''

''என்ன பந்தயம்?''

''அரை பாட்டில் விஸ்கிதான்.''

எனக்கு இதயம் நெஞ்சுக் குழியில் சிக்கிக் கொள்கிறது.

''நான் என்னை ஜோன் ஆஃப் ஆர்க்காக சிறுமியாக இருந்த போது கற்பனை செய்து கொள்வேன்!'' என்று இந்திரா காந்தி சொல்லியிருக்கிறார்.

''ஜோன் சிதையில் எரிந்தது போல் நானும் எரிவதாகக் கற்பித்துக் கொள்வேன்.''

கண்ணில் தெரியும் கரிய புகைத் தூண்களைக் கண்டதும் என்னைச் சுற்றிப் பல ஜோன் ஆஃப் ஆர்க்கள் எரிவது போல் எனக்குப் பிரமை ஏற்படுகிறது.

இதற்குமேல் தாங்கிக் கொள்ள முடியாது என்கிற துக்கத்துடன் வீட்டுக்குத் திரும்புகிறேன்.

என் பிள்ளை இன்னும் வீடு வந்து சேரவில்லை.

எதுவும் செய்யத் தோன்றாமல் அவனிடமிருந்து செய்தி வருவதற்காகக் காத்திருக்கிறேன்.

இரவு எட்டு மணிக்குச் செய்தி வருகிறது.

''சௌக்கியமாயிருக்கிறேன். கவலைப் படாதே'' என்கிறான்.

''ஆனால் வெளியில் வர முடியாது'' என்கிறான்.

''வராதே. வீட்டுக்குள்ளேயே இரு'' என்று நான் பதில் சொல்கிறேன். டில்லியின் பல பாகங்களில் கர்ஃப்யூ போட்டிருப்பது தெரிந்து, கனத்த மனதுடன் கட்டுரை எழுத ஆரம்பிக்கிறேன்.

சம்பவங்களை நினைவில் கோக்கும் முயற்சியில் தடுமாறுகிறேன்! நினைக்க நினைக்க சம்பவத்துள் மறைந்திருக்கும் பயங்கர பரிமாணங்கள் நெஞ்சைக் கலக்குகின்றன. நம்பிக்கை என்கிற வார்த்தைக்கு இனிமேல் அர்த்தமுண்டா? மனித நேயம் என்பதற்கு அர்த்தமுண்டா? எல்லோரும் ஓர் இனம், ஒரு குலம் என்று நம்பி வழி நடக்கும் பிறவிகளை இனம் கண்டு கொள்ளும் பக்குவம் எப்பொழுதாவதும் வருமா?

ஒவ்வொரு இந்தியனும் தலை குனிய வேண்டிய மரணம் இது என்று என்னுள் அவமான உணர்வு ஏற்படுகிறது.

நவம்பர் 2

நடு இரவு இரண்டரை மணிக்கு டெலிபோன் அலறுகிறது. ஒரு சிநேகிதி பதற்றத்துடன் சொல்கிருர். ''குழாயில் வரும் தண்ணீரை நாளை உபயோகிக்காதீர்கள். விஷம் கலந்து விட்டார்களாம்!''

தூக்கம் கலைந்து விட்டது. ஓ. இது வீண் புரளியாக இருக்க வேண்டும் என்று அடிமனத்தில் தோன்றினலும் என்ன ஆகி விட்டது ஜனங்களுக்கு என்கிற ஆற்ருமையும் துக்கமும் மனத்தைக் கவ்வுகின்றன. சகோதரன் சகோதரனைச் சந்தேகிக்கிருன். துவேஷிக்கிருன். துவேஷம் மனத்தோடு நிற்கவில்லை. நீரிலும் காற்றிலும், நெருப்பிலும் கலந்து விட்டது.

காலை எழுந்ததும் தேநீருக்கு நீரை வைக்கவே பயமாக இருக்கிறது. நல்ல வேளையாக ரேடியோவில் அறிவிக்கிருர்கள். நீரில் எந்தக் கலப்படமும் இல்லை, அரைமணிக்கொருதரம் சோதனைகள் நடத்தப்படுகிறது என்று.

''பால் வரவேயில்லை'' என்று காலி பாட்டில்களோடு வருகிருன் வேலைக்காரன். நான் முன் ஜாக்கிரதையாக முந்தையதினத்தின் பால் நிறைய மிச்சம் வைத்திருக்கிறேன். அவனுடைய குடும்பத்துக்காகப் பால் கொடுக்கும்போது பீதியுடன் சொல்கிருன்:

ஏழு நாடுகளில்
எட்டு வாரங்கள்

-அடுத்த வாரம்

''பஞ்சாபிலிருந்து ஒரு ட்ரக் நிறைய ஹிந்துக்களின் சடலங்கள் வருகிறதாம் மேம்சாப்!''

'இந்த வதந்திகளையெல்லாம் நம்பி நீ துவேஷத்தை வளர்த்துக் கொள்ளக்கூடாது' என்று கண்டிக்கிறேன். ''ஒருத்தன் கொலை செய்தான் என்ருல் அவன் இனத்தைச் சேர்ந்த எல்லோரும் கொலைகாரர்களா?''

''யாரையும் நம்புவதற்கில்லை மேம் ஸாப்!'' என்கிருன் பிடிவாதமாக. ''எட்டு வருஷம் உப்பைத் தின்று இந்திராஜியின் கையிலிருந்து 'தீவாளி'யன்று மிட்டாயையும் 101 ரூபாயையும் வாங்கிக்கொண்டவன் குடல் வெளியே விழும்படி விடாமல் சுட்டான் என்ருல் யாரை நம்புவது இனிமேல்?''

பால் பூத்தில் இவர்கள் எல்லாம் விவாதித்திருக்க வேண்டும்.

என்னுள் கலவரம் ஏற்படுகிறது. மதத்தை விட மனித நேயத்தை, நம்பிக்கைகளை, விசுவாசங்களை அதிகமாக மதிக்கும் இவனைப் போன்ற பல்லாயிரம் மக்களின் கோபத்தைத் தணிப்பது சாத்தியமில்லை என்று தோன்றுகிறது. இந்த என் பயம் பத்திரிகை நண்பர்கள் டெலிபோனில் தெரிவிக்கும் செய்திகளிலிருந்து ஊர்ஜிதமாகிறது.

''சீக்கியர்கள் வசிக்கும் காலனிகள் எல்லாவற்றிலும் தீப்பற்றி எரிகிறது. தில்லியை நோக்கி வரும் ரயில்களிலிருந்து சீக்கியர்களை இழுத்துக் கொன்று போடுகிருர்கள். அக்கிரமத்தை அடக்குவார்கள் யாருமில்லை...''

''கர்ஃப்யூவுக்குப் பின் என்ன அர்த்தம்? போலீஸ் என்ன செய்கிறது?'' நான் பதறுகிறேன்.

''கர்ஃப்யூ ஒரு முழு தோல்வி. யாரும் அதை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. இஷ்டத்துக்கு ஜனங்கள் நடந்து கொள்கிருர்கள். சீக்கியர்கள் பதுங்கியிருக்கிருர்கள். வெறியர்கள் வீடுகளிலெல்லாம் நெருப்பு வைக்கும்போது என்ன செய்வது?''

''போலீஸ் எங்கே போய் விட்டது?''

''அதுவும் பதுங்கியிருக்கிறதுஅல்லது செயல்பட மறுக்கிறது. கலவரப் பகுதிகளிலெல்லாம் ஒரு போலீஸைக் காணும். போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்தால் பதில் சொல்பவர் யாருமில்லை. மேலிடத்திலிருந்து ஒவ்வொரு சின்ன விஷயத்துக்கும் உத்தரவை எதிர்பார்த்துப் பழகிப் போன ஒரு ஸிஸ்டத்தில் யாருக்கும் பொறுப்பேற்கத் தைரியமில்லாமல் போய் விட்டது. அதுவும் இப்பொழுது தலைவனில்லாத படை மாதிரி.''

நான் அதிர்ந்து போகிறேன். நண்பர் சமாதானப்படுத்துகிருர்:

''போலீஸ் செயல்படாத நிலையில் அந்தந்தப் பகுதி ஹிந்துக்களே, படித்த நாகரிக ஹிந்துக்களே சீக்கியர்களைப் பாதுகாக்கும் முயற்சியில் இருக்கிருர்கள். ஆனல் இன்று வெளியில் போகாதே. தெருவில் பஸ் இல்லை. ஆட்டோ டாக்ஸி இல்லை, ஒரு ப்ரைவேட் வாகனம் இல்லை. கவர்ன்மெண்ட் ராணுவ வாகனங்கள் தான் போகின்றன'' என்கிருர்.

எங்கேயோ மாட்டிக் கொண்டு வீட்டுக்கு வரத் தவிக்கும் என் பிள்ளையை மீட்டுவரும் முயற்சிகளில் நான் இறங்குகிறேன். கடமை தவருமல் அலுவலகத்துக்குச் சென்றிருக்கும் என் கணவருக்கு டெலிபோன் செய்கிறேன். எப்படியாவது அவனை அழைத்து வரும்படி.

இருவரும் வீடு வந்து சேரும் வரை உயிரைக் கையில் பிடித்தபடி...

இரண்டு நாள் அஞ்ஞாதவாசத்தில் இருபது வயது கூடிவிட்ட முதிர்ச்சி என் மகனின் முகத்தில் தெரிகிறது. துயரமும் நிராசையும் பார்வையில் பதிந்திருக்கின்றன. பலர் கொல்லப்படுவதைக் கண்ணல் பார்த்ததாகச் சொல்கிருன். இதன் நினைவு அவனைப் பல ஜன்மங்களுக்குத் துரத்தப் போகிறது என்று நான் கலங்குகிறேன்.

அன்று எங்கும் செல்ல முடியவில்லை. பக்கத்து வீட்டு நண்பர் திரு. லைட்டி. ஹார்டி கல்ச்சர் டைரக்டர். மூன்று நாட்களாக வீட்டிலேயே இல்லாமல் நின் மூர்த்தி பவனுக்கும் நம்பர் 1, ஸஃப்தர் ஜங்குக்குமாக அலைந்து கொண்டிருக்கிருர்.

நவம்பர் 3

தில்லிநகரில் நடக்கும் எந்த விசேஷத்திற்கும் மலர் ஜோடனை அவர்பொறுப்பு. அந்திமக் கிரியைகள் நடக்கவிருக்கும் சாந்தி வனத்திற்கு ஏற்பாடுகளைக் கவனிக்க அவர் செல்வதைப் பேச்சுவாக்கில் அறிந்த கையுடன் நான் அவருடன் கிளம்புகிறேன். பஞ்சாப் ஸிந்துக்களான அவருடைய குடும்பத்தினர் அனைவரும் மிகுந்த துயரத்தில் இருக்கிறார்கள். தூக்கமின்மையினாலும் துக்க அதிர்ச்சியினாலும் திரு. ஸட்டியின் கண்கள் சிவந்திருக்கின்றன. போகும் வழியில் சொல்கிறார்:

''31-ம் தேதி காலை செய்தி பராபரியாகக் காதில் விழுந்ததுமே ஆட்களிடம் ரூ.5000 கொடுத்து மார்க்கெட்டிலிருக்கும் பூக்களை வாங்கி வரச் சொன்னேன். மாலை அலுவலகத்தை விட்டுக் கிளம்பி இந்தியா கேட்வரை வந்து விட்டேன். அப்பொழுதுதான் என்னுடைய அஸிஸ்டெண்ட் ஒரு சீக்கியர், அவருக்கு ஆபத்து நேரலாம் என்று நினைவுவந்து வண்டியைத் திருப்பி அவரை அழைத்துக் கொண்டு அவர் வீட்டில் கொண்டுவிட்டுத் திரும்பினேன்.''

நம். 1. ஸப்தர்ஜங்கிலும் தீன்மூர்த்திபவனிலும் வேலைக்காரர்கள் மிகுந்த துயரத்தில் இருப்பதாகச் சொன்னார். நமது 'Intellig:nce Bureau வைப்பற்றியும் ஸெக்யூரிட்டி ஆபீஸர்கள் மேலும் மிகுந்த கோபத்துடன் இருப்பதாகவும் சொன்னார்.

''இவர்கள் சந்தேகத்துக்குரியவர்கள் என்று தெரிந்த பிறகு பிரதமரிடம் தெரிவிக்க வேண்டுமா? அவர்களாகச் செயல்பட்டு நீக்கியிருக்கக் கூடாதா?'' என்று நான் ஆத்திரப்படுகிறேன்.

ஸட்டி தூரப் பார்வை பார்க்கிறார். ''ஒவ்வொன்றுக்கும் பிரதமரின் அனுமதி எதிர்பார்த்துச் செயல்படும் கையாலாகாத்தனம் நமது ஸிஸ்டத்தில் புகுந்து ரொம்ப நாளாகி விட்டது. it is a cancerous growth. அதன் விளைவு இந்த பலி. நீங்கள் என்ன செய்ய முடியும்?'' என்கிறார்.

''சாந்தி வனத்தில் அந்திமக் கிரியை நடக்கும் இடத்தைப் பிரதம மந்திரி அப்ரூவ் செய்த பிறகுதான் வேலையைத் துவக்க முடியும் என்றதில் ஒரு நாள்போய் விட்டது. இந்த மாதிரி தருணத்தில் பிரதமருக்கு இதையெல்லாம் பார்வையிட நேரமிருக்குமா? இப்பொழுது 30 மணி நேரமாக ஓய்வில்லாமல் C.P.W.D. ஊழியர்கள் சாந்தி வனத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பன்னிரண்டு மணிக்குத்தான் வேலை முடியும். அதற்குப் பிறகு மலர் அலங்காரங்கள் செய்ய வேண்டும். மூன்று மணிக்கு சவ ஊர்வலம் உள்ளே வந்து விடும்.''

சாந்திவனம் ஏகச் சுறுசுறுப்பாக இருக்கிறது. ஆ. இ. ரேடியோ, டி. வி. பூத்கள் காட்சியளிக்கின்றன. சடலம் எரிக்கப்படும் இடத்திற்குப் படிக்கட்டுகளுடன் ஒரு 30 அடி சதுரப் பரப்பைக் கட்டி அதற்கு மேல் 7 அடி உயரத்திற்கு மேடை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். C.P.W.D.யின் டைரக்டர் ஜெனரல் ராமராவ் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருக்கிறார். பல சீஃப் என்ஜினீயர்கள், ஸூப்பரின்டெண்டிங் என்ஜினியர்கள் 600 தொழிலாளிகள். உரிய நேரத்திற்குள் கட்டி முடிக்கப்படவேண்டும் என்கிற கடமை உணர்ச்சியே எல்லார் முகத்திலும் தெரிகிறது. ஒரு சீக்கியர் கூட இங்கும் இல்லை. ''நாங்களே அவர்களை வரவேண்டாம் என்று சொல்லிவிட்டோம்'' என்கிறார் ஒரு ஆபீஸர்.

கட்டிட வேலை ஒரு பக்கம் முடிய ஸட்டியின் ஆட்கள் Murraya exot ca பச்சை இலைகளின் மேல் (சீக்கிரம் வாடாதாம்.) சாமந்திப் பூக்களின் மாலைகளை வைத்து அலங்கரிக்கத் தொடங்குகிறார்கள். நான் அங்கங்கே தென்பட்ட வெளிநாட்டுப் பத்திரிகைக் காரர்களுடன் பேச்சுக்கொடுக்கிறேன். Simons என்ற அமெரிக்கர் டோக்கியோவிலிருந்து வந்திருக்கிறார். Knight Ridder என்ற பிரபல 32 செய்திப் பத்திரிகைகள் கொண்ட அமைப்பைச் சேர்ந்தவர். இந்திராகாந்தியைப் பலமுறை பேட்டி கண்டிருப்பதாகச் சொல்கிறார். செய்தி பெரிய அதிர்ச்சியைத் தந்தது என்கிறார். 'எமர்ஜென்ஸி காலத்தில் நான் அவரை மிகவும் தாக்கி எழுதியிருக்கிறேன். ஆனால் அவர் பலம், வீரம், லட்சியங்களில் மன உறுதி ஆகிய வற்றை வியந்து போற்றுகிறேன். இந்திரா இல்லாத இந்தியாவை என்னால் கற்பனை கூட செய்ய முடியவில்லை

Bill Dowell அமெரிக்க ABC செய்திக்காக ஜெனிவாவிலிருந்து வருகிறார். ''உலகத்து மிகச் சிறந்த பெண்மணிகளில் இந்திரா ஒருவர்'' என்கிறார். '' '71ல் அமெரிக்கர்கள் இந்திராதான் உலகத்து மிக விரும்பத்தக்க பிரபல நபர் என்று ஓட்டுப் போட்டார்கள். சர்வாதிகாரியாக இருந்தார் என்று சிலர் சொல்வார்கள். ஆனால் அந்த சர்வாதிகாரம் இங்கு இருந்த சூழலுக்கு வேண்டியிருந்தது என்று நான் நினைக்கிறேன்'' என்கிறார் பில்.

ஜாக் ஆண்டர்ஸன், லண்டன் U.I.B.யைச் சேர்ந்தவர். 'லண்டன் மக்கள் செய்தியைக் கேட்டு அதிர்ந்து போனார்கள்' என்கிறார். ''முக்கியமாக அது நடந்த விதம் கேட்டு! சமீபத்தில் தான் எங்கள் பிரதமருக்கு இந்த மாதிரி ஆபத்து ஏற்படவிருந்தது. நாங்கள் எல்லோரும் இந்திய அரசியலை வெகு உன்னிப்புடன் கவனித்து வருகிறோம். இந்த மாதிரி ஒரு முடிவு நிச்சயம் ஏற்பட்டிருக்கக் கூடாது. கொலைகளிலும் இதுபடு மோசமான கொலைச் செயல்!''

இந்திராகாந்தியின் மிக நெருங்கிய தோழிகளில் ஒருவரான திருமதி தோக்ரா வேலை நடக்கும் இடத்தை மேற்பார்வை பார்க்க வந்திருக்கிறார். அவருடன் பேசுகிறேன். அவர் கண்களில் நீர் நிறைந்து போகிறது.

''எனக்குத் தாங்கவில்லை — இந்தப் பிறவியில் எனக்குச் சமாதானமாகாது. அவளையா, மனிதருள் வேறுபாட்டைக் கனவிலும் நினைக்காத, மிகமிக உயரத்தில் நம் மனசிலிருந்த அவளையா இப்படிக் கொன்றார்கள்

என்று நினைக்கத் தாங்கவில்லை. அவள் மனத்தில் கொஞ்சமும் சின்னத்தனம் இடையாது. தன் உயிரைப் பற்றி அவள் நினைத்ததே இல்லை. பாதுகாப்பு ஏற்பாடுகளை அறவே வெறுத்தார் ராஜாங்க. அரசியல் சம்பிர தாயங்களையும் வெறுத்தார். மக்களின் மத்தியில் இருந்த போதுதான அவருக்கு மகிழ்ச்சி. ஒரு தாய் தன் சுகங்களைப் புறக்கணித்துத் தன் குழந்தைகளைக் கவனிப்பது போல் அவள் வாழ்ந்தாள்.''

கிட்டத்தட்ட இதேமாதிரியான உணர்ச்சி அங்கிருந்த திரு. மெல்வில் டிமெல்லோ பிரதிபலித்தார். ''இரண்டு தலைமுறைகளாக நேரு குடும்பத்தினருடன் எனக்குத் தொடர்பு. இந்திராகாந்தியை மிக அருகிலிருந்து கவனித்து வருகிறேன். பல விஷயங்களில் நேருவை விட மேலானவர். ஒரு தேசத்துச் சரித்திரத்தில் காந்தி, இந்திரா போன்றவர்கள் மிக (Unique) அபூர்வமாகத் தோன்றக் கூடியவர்கள். எந்த இடத்தில் கஷ்டம் என்று தெரிந்தாலும் அந்த இடத்தில் மக்களிடையே இந்திரா இருப்பார். மக்களின் morale லை உயர்த்த. ஒரு முகத்தையோ பெயரையோ அவர் மறந்ததில்லை. அவர் கொல்லப்பட்ட விதத்தை நினைத்து நினைத்து என்னுள் கோபம் பொங்குகிறது. இந்தப் பாதுகாவலர் சந்தேகத்துக்குரியவர்கள் என்று அறிவிக்கப்பட்டும், அவர்களை நீக்கினால் மதச்சார்பற்ற அரசு என்பதற்கு அர்த்தமில்லாமல் போய்விடும் என்று கொள்கைக்காகத் தன் உயிரைத் திருணமாக மதித்தவரை இத்தனை ராட்சஸத் தனத்துடன் கொன்றார்கள் என்றால் யாருக்குத் தான் கோபம் வராது? தில்லி இன்று பற்றி எரிகிறது என்றால், மக்களுக்கு இந்திரா மேல் இருக்கும் பிரியத்தின் பிரதிபலிப்பு அது...''

நான் துப்பறியும் பிரிவினர் ஏன் சுதந்திரத்துடன் செயல்பட்டிருக்கக் கூடாது என்று கேட்கிறேன். அவர் ஜாக்கிரதையாகப் பதில் சொல்கிறார். ''விதியை யாரால் தடுக்க முடியும்? காந்தியை பட்டேல் எச்சரித்தார். அவரது சாவைத் தடுக்க முடிந்ததா?''

நான் சமாதானமில்லாமல் கிளம்புகிறேன். என் தலைமுறையைச் சேர்ந்த யாருக்கும் சமாதானமாகாது என்று தோன்றுகிறது. நேரு இறந்த போது தில்லி தெருக்களில் கால் வைக்க இடம் இருக்காது. போலீஸின் இயலாமையைக் கவனித்து நேற்று இரவிலிருந்து இராணுவத்திடம் தில்லியைப் பாதுகாக்கும் பொறுப்பைப் பிரதமர் கொடுத்துவிட்டதில் தெருவெல்லாம் ராணுவத் தலைகள் தான் தெரிகின்றன. ஜனங்களே காணோம். கலவரங்கள் வெகுவாகக் குறைந்திருந்தாலும் தில்லியின் அண்டை அசலில் இன்னமும் கலகங்கள் நடப்பதாகச் செய்தி வருகிறது. எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருக்கின்றன. கவர்ன்மெண்ட் பால் கிடைக்காத நிலையில் பால்காரர்கள் லிட்டர் 16 ரூபாய்க்கும் மேலாகப் பால் விற்கிறார்கள். ஐந்து மைல் தொலைவைக் கடக்க ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் ரூ. 70—ம், 80—ம் வாங்குகிறார்கள். கறிகாயின் விலை 1 கிலோ 15 ரூபாய்க்கு மேல். எனக்கு வெறுத்துப் போகிறது. இந்தியர்கள் ஒட்டுமொத்தமாய் காட்டுமிராண்டிகள் என்று கோபமேற்படுகிறது. இந்த மாதிரி ஒரு மாபெரும் இழப்பின் போது மனிதனை மனிதன் சாப்பிடும் குணம் ஏற்படுமானால், நம்முடைய தேசத்தில் தார்மிகச் சீர்குலைவு எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று துயரமேற்படுகிறது...

நான் வீட்டில் அமர்ந்தபடி டீ.வி.யில் அந்திமக் கிரியைகளைப் பார்க்கிறேன். நூறு பிற தேசத் தலைவர்கள் இந்திராவிற்குத் தங்கள் கடைசி மரியாதையைத் தெரிவிக்க வந்திருக்கிறார்கள். உலகத்துக் கண்களில் எத்தனை உயர்ந்த ஸ்தானத்தை இந்திரா பிடித்திருந்தார், இந்தியாவை உயர்த்தியிருந்தார் என்கிற இந்த நிரூபணத்தை நினைத்து நெஞ்சு விம்முகிறது. அதைப் பொய்யாக்கும் விதத்தில் இந்தத் தருணத்திலும் ஏதும் அசம்பாவிதம் நடக்கக் கூடாதே என்கிற பயம் எனக்குள் தவிக்கிறது.

சிதையிலிருந்து ஜ்வாலை வானைக் கிளம்பும் போது அதன் பின்னணியில் ராஜீவின் இளசான சோக முகம் தெரிகிறது. அவருக்காகவும் அவர் எதிர்பாராமல் அவரது அனுபவமற்ற இளம் தோள்களில் உட்கார்ந்துவிட்ட பாரங்களுக்காகவும் எனக்குக் கவலை ஏற்படுகிறது.




''ஆளுங்கட்சி டில்லியில் உங்களுக்கு எதிராக அமிதாப்பச்சனை நிறுத்தினால் என்ன செய்வீர்கள்?'' என்று ஒரு நிருபர் கேட்டார்.

''ஐயோ! அவரை எதிர்க்க என்னால் முடியாது. நான் அதற்குப் பதிலாக அம் ஜத் கா னை த் தா ன் நிறுத்த வேண்டும்!'' என்று பதில் கூறினார், வாஜ்பாய்!

நன்றி: தினமணி.

—தி. அருள்மணி.


ராஜீவ்




வன்முறை



கல்கி

1984 நவம்பர் 11
மலர் : 43 இதழ் : 15
ரக்தாக்ஷி ஐப்பசி 26



இந்திரா இந்தியா ஆனார்

கனவிலும் எதிர்பாராத கொடுமை நடந்து விட்டது.

அறிவுபூர்வமான சிந்தனையை மிருகவெறி வெற்றி கொள்ள, திட்டமிடப்பட்ட ஒரு கொடூரச் செயல் இட்டு நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தைத் தோற்றுவித்து விட்டது.

பாரத மக்கள் ஒவ்வொருவரும் தத்தமது தாயையோ சகோதரியையோ இழந்ததுபோல் பரிதவிக்கிறார்கள்.

கருத்து மாறுபட்டவரும் கண்ணீர் வடிக்கிறார்கள்.

இந்தியாவைத் தம் உயிரை விட அதிகமாக நேசித்தவர்; முதல்நாள் கூடத் தமது உடலின் ஒவ்வொரு துளி இரத்தமும் நாட்டுக்கு உழைப்பதிலேயே செலவாகும் எனக் கூறியவர்; அந்தச் சொற்கள் நாளிதழில் அச்சான மை காயுமுன்னரே ரத்த வெள்ளத்தில் கிடந்தார். கடமை வீரராக உயிர் நீத்தார்.

''சீக்கியர்கள், உங்கள் மெய்க்காப்பாளராக இருக்க வேண்டாம்'' என்ற எச்சரிக்கைக் குறிப்புடன் வந்த கோப்பில் ''நாம் ஜாதி மத மொழி பேதங்களைக் கடந்து நிற்போம்'' என்று குறிப்பு எழுதித் திருப்பி அனுப்பியவர் அத்தகைய குறுகிய மனப்பான்மைக்கே உயிர்ப்பலியானார்.

இந்தியாவை நேசித்தார் இந்திரா. இந்திய மக்களை, கோடானுகோடி ஏழைகளை நேசித்தார். இந்தியாவின் இயற்கை எழில்களை அவர் காதலித்தார். பாரதத்தின் உயர்ந்த பண்பாடுகளையும் கலைகளையும் போற்றினார். இறைவனை நம்பினார். ஞானிகளை மதித்தார்.

இந்தியா உலக அரங்கில் உயர்ந்துநிற்க வேண்டும் என்று விரும்பினார். இந்நாடு தன்னிறைவு கண்டு சுபிட்சமடைய வேண்டும் என்று ஆசைப்பட்டார். பாதுகாப்புக்கோ, பொருளாதார வளர்ச்சிக்கோ பிற நாடுகளை எதிர்பாராமல் சுயச்சார்புடன் முன்னேற வேண்டும் என்று கருதினார்.

உலக அமைதியை விரும்பினார் இந்திரா. அண்டை நாடுகளுடன் சமாதானத்துக்காகப் பாடுபட்டார். வன்முறைகளை ஒறுத்தார். ஆனால் கோழைத்தனத்தை வெறுத்தார். வீராங்கனையாக விளங்கினார்.

அவர் சாதனைகளைச் சரித்திரம் பட்டியல் போட்டுப் பேசும். சிறப்பியல்புகளை வரலாறு கூறும்.

உன்னதமான அவரது நோக்கங்கள் நிறைவேற என்ன வழிமுறைகளைக் கையாண்டார் என்பதில் கருத்து மாறுபாடுகள் இருக்கவே செய்தன. ஜனநாயகத்தில் இது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் அவரது நாட்டுப்பற்றையோ, விசுவாசத்தையோ, உழைப்பார்வத்தையோ, உயர்நோக்கங்களையோ இந்நாட்டு மக்களிடம் அவருக்கிருந்த பேரன்பையோ யாரும் இம்மியளவும் சந்தேகிப்பதற்கில்லை. அதனால்தான் இந்திரா, இந்தியாவாகிறார். அதன் மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எதிர்காலச் சந்ததியினர் மனங்களிலும் நிலையான இடம் பெற்றுவிட்டார்.

நமக்காக உயிர்துறந்தார் இந்திரா — மறவாதிருப்போம். தேசத்தின் ஒருமைப்பாட்டுக்காக உயிர்ப்பலியானார் — நினைவிலிருத்துவோம்.

இந்தச் சோகம் ஓர் ஆன்ம விசாரணையைத் தூண்டட்டும். இந்தக் கண்ணீர் நம் உள்ளங்களைத் தூய்மைப்படுத்தட்டும்.

ஜாதி, மத, மொழி வெறிகளை நமது கண்ணீர் கரைத்து வெளியேற்றட்டும். சோம்பலை நமது துயரம் விரட்டி அடிக்கட்டும். லஞ்ச ஊழல் மடியட்டும். போலித்தனங்கள் ஒழியட்டும். வன்முறைகள் விடைபெறட்டும்.

இந்திராவின் வயிற்றில் பாய்ந்த ஒவ்வொரு குண்டும் (மொத்தம் 32) நம்மிடையே உள்ள ஒவ்வொரு தீய குணத்தைக் கொன்றுவிடுமானால் நமது கண்ணீர் கங்கை நீராகும், நவபாரதம் உருவாகும், இந்திராவின் ஆன்மா சாந்தி பெறும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

○ அ. கிருஷ்ணன், தஞ்சாவூர்.
? ராஜாஜி சரித்திரம் (1937–72) கல்கியில் தொடராக எப்போது வெளிவரும்?
! கூடியவிரைவில். மொழிபெயர்ப்பு நடந்து கொண்டிருக்கிறது. அற்புதமாய் எழுதியிருக்கிறார் ராஜ்மோகன்காந்தி. நிகழ்ச்சிகள் பல அதி ரசமாகவும், இதுவரை தெரியாதவையாகவும் ராஜாஜியின் குணசித்திரத்தை அப்படியே வரைந்து காட்டுவதாகவும் அமைந்துள்ளன.

○ டி. எல். ரெட்டி, வேலிடுபட்டி.
? நச்சு இலக்கியம் என்றால் என்ன?
! ஒரு பெண் — இள நங்கைதான், வேறென்ன — கிணற்றடியில் குளிப்பதைப் படிப்படியாக சாங்கோபாங்கமாக வர்ணிப்பார்கள்; அப்போது ஓர் இளைஞன் அருகிலிருந்து அவளிடம் பேசிக் கொண்டிருப்பதாகவும் சொல்வார்கள்; கடைசியில் பாரதப் பண்பாட்டைக் காப்பதற்காக அந்த இளைஞன் பார்வையற்றவன் என்று முடித்து விடுவார்கள்! இப்படி செக்ஸுக்காகவோ அல்லது வன்முறை போன்ற வேறு அம்சங்களுக்காகவோ இலக்கிய நயம் சிறிதும் இன்றி எழுதப்படுபவை நச்சு இலக்கியங்கள். ஆனால் ஜனநாயக சோஷலிஸம் என்பது போல நச்சு இலக்கியம் என்பதும் பொருந்தாச் சேர்க்கைதான். நச்சு எழுத்து என்பதே சரி.

○ ரம்யா, கோவை.
? ஸுபின் மேத்தா பற்றி...?
! மேற்கத்திய சாஸ்திரீய இசை எனக்கு ரசிக்காது; புரியவும் செய்யாது. ஆனால் அத்தனை வாத்தியக்காரர்களையும் கச்சிதமாக மேய்த்துக் கட்டுகிற இவர் ஆற்றல் மலைக்க வைப்பதாகத்தான் உள்ளது. உலக அரங்கில் இந்தியாவுக்குப் புகழ் தேடித் தந்திருப்பவர் என்ற அளவில் ஸுபின் நமது மரியாதைக்குரியவராகிறார்.

○ என். உலகநாதன், லால்குடி.
? எம். ஜி. ஆர். ஃபைல்களில் நெடுஞ்செழியன் கையெழுத்துப் போடுவது சரியா?
! முதலில் சரியில்லாமலிருந்தது; பின்னர் ஆளுநர் அங்கீகாரத்தில் சரியாகிவிட்டது..

○ பி. எல். பரமசிவம். மதுரை.
? கல்லில் நார் உரித்த அனுபவம் உண்டா?
! யாரைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்டு விட்டீர்கள்! மத்திய அரசின் நியூஸ்பிரிண்ட் கொள்கைக்கு உட்பட்டுப் பத்திரிகை அச்சடிக்கக் காகிதத்தைப் போராடிப் பெறுவதென்பது அதைவிடக் கஷ்டமான காரியம்!

○ த. சிவாஜி சதாசிவம், கவுந்தப்பாடி.
? நான் செய்த தவறுக்கு மன்னிப்புத் தர மறுக்கும் ஆசிரியையிடம் என் மனக்கஷ்டத்தை எப்படி வெளிப்படுத்துவது?
! இது உமது இரண்டாவது படையெடுப்பு. நாலு தபால் கார்டுகளில் ஒரே கேள்வி. ஸ்ரீராமஜெயம் வேறு. நீர் உண்மையாக மனம் திருந்தி மன்னிப்புக் கேட்டிருந்தால் மனக்கஷ்டம் இராது; அந்த ஆசிரியை மன்னிப்புத் தருகிறாரா இல்லையா என்பது பற்றியும் கவலைப்பட மாட்டீர்.

○ பி. எல். பரமசிவம், மதுரை.
? பிள்ளைப் பேற்றுக்காக மனைவி படும் துன்பத்தைக் கணவன் பார்ப்பதால் பலன் ஏற்படும் என்று நம்புகிறீரா?
! நிச்சயமாக. மனைவியிடமும் குழந்தையிடமும் அன்பும், பாசமும் அதிகரிக்கும் என்பது தவிர அடுத்த குழந்தை பெறுவது தாமதப்படவும் செய்யும். இரட்டிப்புப் பலன்!

நச்சு இலக்கியம்

○ ஜெயவசந்தன், கோவை.
? புதுக்கவிதை எழுதுவீர்களா?
! ரசிப்பதுடன் சரி. அதற்கும் ஆள் வேண்டுமல்லவா?

○ மது ஜெயபால், அத்திமலைப்பட்டு.
? பகல் கனவு, இரவுக் கனவு — எதில் பலன் அதிகம்?
! புத்திசாலியின் பகற்கனவு சாதனையாக மலர்வதுண்டு. அசடனின் பகற்கனவு அல்நாஷயர் கதையாக முடிவதுண்டு. இரவில் கனவு காண்பது அந்நபருக்குப் போதிய அளவு தூக்கமின்றி கிட்டவில்லை என்பதை உணர்த்தும் எச்சரிக்கை.


○ ச. ஜெயக்குமார், நெல்லை.
? சோ நுழைந்த ஜனதா கட்சி எப்படி இருக்கிறது?
! அவருக்குப் பூரணமான கருத்துச் சுதந்திரமும் எழுத்துச் சுதந்திரமும் கொடுப்போம் என்று சொன்னவர்களே, அவருடைய கருத்துக்களுக்காகவும் எழுத்துக்களுக்காகவும் அவரைக் கண்டிப்போம்

○ ஜனதா குரும்பம்...



○ வாழ்க்கை வரலாறு...





நீங்கள் கேட்டவை

தராசு

என்றால் என்ன?



○ மேய்த்துக்கட்டி...



○ முதல்வர் லீலைகள்



○ இருந்தாரா?

என்று கூறும் அளவுக்குக் குழம்பிப் போயிருக்கிறது. தி. மு. க. வுடன் கூட்டணி என்ற பெரிய ஆதாயத்துக் காக சோ என்ற சிறிய ஆதாயத்தைத் துறக்கச் சித்தமாகி விட்ட தேர்தல் தந்திரம் என்றும் கூறலாம்.

○ டி. இராஜேந்திரன், திருப்பூர்.
? உடற்பயிற்சியின் மூலம் உடம்பைச் சீராக வைத்திருந்த நமது முதல்வருக்கு எப்படி இத்தனை நோய்கள் ஏற்பட்டன?
! உடற்பயிற்சி செய்வோரை என்றுமே நோய் தாக்கவே செய்யாது என்று யாருமே உறுதி மொழி அளிப்பதற் இல்லை. ஆனால் அதே நேரத்தில் எம்.ஜி. ஆர். அவரது வயதுக்கு நேற்று வரை மிக ஆரோக்யமாகவும் இளமை மாரு மலும் இருந்தார் என்பதையும் அதற்கு உடற்பயிற்சிதான் உதவியது என்பதை யும் யாரும் மறுக்கவும் முடியாது. இப்போது கூட அம்மாவீரர் எமனுடன் நடத்தும் இதிகாசப் போராட்டம் டாக்டர்களையே வியக்க வைத்துக்கொண் டிருக்கிறது.

○ க. தியாகராஜன், நெய்வேலி.
? தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். நோயுற்றிருக் கிற இந்நேரத்திலும் உட்கட்சிப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் ப. வு. ச., ஜெய லலிதா பற்றி...?
! நமது அரசியலில் உள்ள ஒரு குறைபாட் டையே இது காட்டுகிறது. உட்கட்சி ஜனநாயகம் வளர்க்கப்படாத போது நெருக்கடியான கால கட்டங்களில் உட்கட்சிப் போராட்டங்கள் வெடிக் கவே செய்யும். அ. இ. அ. தி. மு. க. மட்டுமல்ல. வேறு பல கட்சிகளும் இரண்டாவது மூன்றாவது நான்காவது அணித் தலைவர்களை ஜனநாயக ரீதியில் வளர்க்கத் தவறி விடுகின்றன.

○ டி. ஆர். சந்திரசேகரன், சென்னை–44 ★
? தமிழக முதல்வருக்காகத் தமது உயிரைப் பலியாக்கும் அப்பாவி மனிதர்களைப் பற்றி...?
! மூன்று தலைமுறைகளாக மூட நம்பிக்கை களை ஒழிப்போம் என்று பகுத்தறிவு வாதம் பேசுவதையே கடமையாகக் கொண்ட தலைவர்கள் தங்கள் கடமை யைச் சரிவர ஆற்றவில்லை என்பதையே இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன. இவர்கள் நிஜத்தை விட்டுவிட்டு நிழலைத் துரத்திப் போய் ஏமாந்திருக்கிறார்கள்.

○ எஸ். மோகன், மே. மாம்பலம்.
? நல்லவனுக்கு நல்லவன் படத்தில் ரௌடி ரஜினி தொழிலதிபர் ரஜினி – தங்களைக் கவர்ந்தவர் யார்?
! ரௌடியாக இருக்க வேண்டாம் என்று தான் சொன்னேனே தவிர கோழையாக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை என்ற மனைவியின் சொற்கேட்டு மனம் திருந்தியதோடு தெளிவும் பெற்ற ரஜினி.

○ ஆர். சிவராஜ், லால்குடி.
? மனைவி சொல்லைத் தட்டாமல் கேட்பது முட்டாள்தனமா? புத்திசாலித்தனமா?
! அது சொல்லப்படும் சொல்லைப் பொறுத்தது.

○ உ. அசோக்பாபு, மணப்பாறை.
? நல்லவனுக்கு நல்லவனில் கார்த்திக் உங்களைக் கவர்ந்தாரா?
! இருந்தாரா?

○ ஆர். அப்துல்சலாம், திருச்சி.
? இந்திய கிரிக்கெட் யாரை நம்பியிருக்கிறது?
! கடவுளை.

○ வெ. கோபால், மாதேமங்கலம்.
? ஒரு மனிதன் கடந்த காலத்தை எண்ணிப் பார்ப்பது எப்போது?
! மூலக்கனல் அணைந்த பிறகு!

○ ரேவதி பிரியன், ஈரோடு.
? தீபாவளி ரிலீஸில் உங்களுக்குப் பிடித்தது...?
! கல்கி தீபாவளி மலர்!

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

டி. ஆர். சந்திரசேகரன்,

14, நாலாவது குறுக்குத் தெரு,

புருஷோத்தம்நகர், குரோம்பேட்டை.,

சென்னை–600 044.



புதிய பிரதமர்

ஜனநாயகத்தில் நாடாளுமன்றம் உச்ச அதிகாரத்தில் உள்ளது என்னும்போது, அங்கே இ. காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பலம் பெற்றிருக்கும் போது, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ராஜீவ்காந்தியைத் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள் எனில் அதில் ஆட்சேபிப்பதற்கு ஏதுமில்லை. சில நடைமுறைச் சடங்குகளை உரிய கால கட்டத்திற்குள் நிறைவேற்றிக் கொள்ளலாம். அதிலும் சிரமம் இல்லை.

மிக இளைஞரான, அரசியல் அனுபவம் மிகக் குறைந்த அளவே உள்ளவரான ஒருவர் தோள்கள் மீது அனுபவஸ்தர்கள், முதியவர்கள் மிகப் பெரும் பொறுப்புச்சுமையைச் சுமத்தி இருக்கிறார்கள். இந்தச் சுமையைத் தாங்கவும் தேசத்தைத் திறம்பட நிர்வகிக்கவும் அவருக்கு விவேகத்தையும், திடமான மனத்தையும் உடல் ஆரோக்கியத்தையும் அருளுமாறு இறைவனைப் பிரார்த்தித்துப் புதிய பிரதமரை வாழ்த்துகிறோம்.

இந்திராகாந்தியின் மரணத்தையொட்டியே நமது நிர்வாகத்திலும் மக்களிடமும் உள்ள பல குறைபாடுகள் உடைகறிய வெட்ட வெளிச்சமாகியுள்ளன. இந்திரா இறந்து கிட்டத்தட்ட எட்டுமணி நேரத்துக்கு நாடு 'தலைவர்' என்று யாருமற்ற அநாதையாக விளங்கியிருக்கிறது. சம்பவ தினத்தன்று முக்கியஸ்தர்கள் ஒருவர் பாக்கியில்லாமல் தலைநகரை 'அம்போ' என்று விட்டுவிட்டு ஒரே சமயத்தில் வேறு வேறு ஊர்களுக்கும், நாடுகளுக்கும் போய் விட்டிருக்கிறார்கள். முக்கியமான முடிவுகளை எடுக்க யாருமே இல்லை!

இந்திராவைச் சுட்டுக் கொன்ற மெய்க்காவலர் அண்மையில் தான் பஞ்சாப் சென்று திரும்பியிருக்கிறார் — விடுமுறையில். பணியாற்றும் நேரத்தை மாற்றிக்கொண்டும் இருக்கிறார். 'ஏன், எதற்கு?' என்று உரியவர்கள் கேள்விகளை எழுப்பிக் கொண்டு ஆராயப் புகுந்திருந்தால் இந்த அக்கிரமத்தை ஒருவேளை தவிர்க்க முடிந்திருக்கலாம். மெய்க்காவலர்களையே கண்காணிக்க வேண்டிய அளவுக்குப் பிரதமரின் மெய்க்காவலர் படை மிக அதிகமாகி உள்ளதையும் மறுப்பதற்கில்லை.

உலக ரேடியோக்கள் டி.விக்கள் எல்லாம் நம் பிரதமரின் மரணத்தை அறிவித்துப் பல மணி நேரம் சென்றபின், அரசு இலாக்காவின் ஓர் அங்கமாகி சுதந்திரமாகச் செயல்பட முடியாது தவிக்கும் நமது வானொலியும் தூரதர்சனும் நிதானமாக அறிவித்து, மன்னிப்பும் கோர வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளது.

பிரதமரின் மரணம் ஒரு தனி மனிதனின் வெறிச் செயல் என்பதை மறந்து அவன் சீக்கியன் என்பதால் சீக்கிய சமுதாயத்தையே வெறுத்துப் பழி வாங்கும் நோக்கில் வன்முறைச் செயல்களில் மக்கள் இறங்கியுள்ளதானது நாம் இன்னும் உண்மையான கல்வியும், நாகரீகமும், மனமுதிர்ச்சியும் பெறவில்லை என்பதை உணர்த்துகிறது.

பிரதமரின் மரணம் நாட்டின் நிர்வாகத்தையும் அத்தியாவசிய சேவைகளையும் கூட ஸ்தம்பித்துப் போகச் செய்துள்ளது. பஸ்கள், ரயில்கள் ஓடாததால் குழந்தைகள் பெண்கள் உட்பட அனைவரும் பல மைல்கள் நடந்தே வீடு திரும்ப நேர்ந்தது. ஓட்டலில் சாப்பிடுவோர் மூன்று நாள் கட்டாய உண்ணாவிரதமிருக்க நேர்ந்தது. இவையெல்லாம் நம்மை உலகக் கண்ணோட்டத்தில் உயர்த்திக் காட்டவில்லை. இந்திராவின் மரணம் நம்மை இன்னும் சிறந்த மனிதர்களாக்க வேண்டுமேயன்றி மிருக நிலைக்குத் தாழ்த்தக் கூடாது.

புதிய பிரதமர், இத்துயர நிகழ்ச்சியையொட்டி வெளிப்பட்டுள்ள புதிய பிரச்னைகளை மட்டுமின்றி, அபரிமிதமான விளைச்சல் இருந்தும், அபரிமிதமான விலைவாசி உயர்வு போன்ற விசித்திரமான, என்றுமுள்ள பல பிரச்னைகளையும் சந்திக்க வேண்டியவராயிருக்கிறார். மேலெழுந்தவாரியாக உடனடி நடவடிக்கைகளை எடுப்பதோடு பிரச்னைகளை ஆழ்ந்து நோக்கி நிரந்தரப் பரிகாரம் காண வேண்டியவராயும் இருக்கிறார். தமது சொந்தத் துயரை மறந்து அவர் செவ்வனே செயல்பட வேண்டிய தருணம் இது.

புகைப்படம்: சுபா



அஜேய பாரத் யோஜனா

(வெல்ல முடியாத பாரத் திட்டம்)

தேசிய கவச தயாரிப்பு விஜய தசமி முதல் பரிசோதனை ஆரம்பம்

உலக சிந்தனையில் சத்குணத்தை ஆதரிக்கும் உத்தேசத்தால் மகரிஷி மஹேஷ் யோகி அவர்கள் உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட தியானம், புலனடக்கத்தையும் ஆதாரமாகக் கொண்டு ஒரு யோக பரிசோதனை செய்யவிருக்கிறார். அநேக நாடுகள் இப்பரிசோதனையால் வியக்கத்தக்க பயன்கள் பெற்றுள்ளன. இந்த யோக வித்தை பற்றும் ஆன்மீக வித்தையின் அமோக மகிமையால் பாரத நாட்டின் எல்லாத் துன்பங்களைப் போக்கி, அதை ஒரு ஆதரிச தேசமாகவும், அதை வெல்ல முடியாத வல்ல தேசமாக உருவாக்க வேண்டும் என்று மகரிஷியின் அவா.

இவ்வாண்டு விஜயதசமி அன்று அக்டோபர் 4-ம்தேதி அன்று ''அஜேய பாரத்'' முழக்கம் தொடங்கியது. தேசம் எல்லாவித துன்பங்கள் நீங்கப்பெற்று, அஜேயமாக உருவாக வேண்டி விஜயதசமி அன்று தெய்வீக பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது.

பாரதத்தை எவராலும் வெற்றி பெற முடியாததாக உருவாக்குவதற்கு மகரிஷி இயற்கையின் ஆன்மீக, தெய்வீக, பௌதிக எல்லா துறைகளிலும், அஜேய தத்துவத்தை உயிர்ப்பிக்கச் செய்யும் யோக வித்தையை வேத வித்தையால் மேலும் பயன்படச்செய்ய வேண்டும் என்று விரும்புகிறார். யோக வித்தையால் உருப்பெற்ற சத்குணத்தின் மகிமையும், வேத வித்தையின் தெய்வீக தன்மையும் ஒன்று சேர்ந்து பாரதத்தை ஆற்றல் மிக்க நாடாக உருவாக்கும் என அவர் நம்புகிறார்.

தேசிய பாதுகாப்பிற்கு வேத விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட சஸ்திர வித்தை, வேதவித்தை மந்திர வித்தை மற்றும் தெய்வீக பரிசோதனைகளின் கோட்பாடுகள், விதிமுறைகளை நன்கு அறிந்த வித்வத்ஜனங்களுக்கு ஓர் வேண்டுகோள். அவரவர்கள் தனக்கு தெரிந்த வித்தை பற்றி விக்யாபனமோ, அல்லது கட்டுரையோ அனுப்பவும். சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதை வெற்றிகரமாகச செயலாற்றுவார்களா என்று தெரிவிக்கும்படி வேண்டுகிறோம்.

இதுபற்றி —

வேத இலக்கியத்தில் உள்ள தேசிய பாதுகாப்பு மற்றும் வெற்றி கோட்பாடுகளும், தெய்வீக அஸ்திர வித்தை, மந்திரி பரிசோதனை வித்தை, சித்தி 'தந்திர வித்தை இவைகளைப் பற்றி வித்வான்கள் தன் கருத்துக்களையும், கட்டுரைகளையும், கூடிய சீக்கிரம் அனுப்புமாறு வேண்டுகிறோம்.

சிறந்த கருத்து மற்றும் கட்டுரைக்கு, ரூ. 5000 - அனுப்பப்படும். பாரதத்தை அஜேயமாக உருவாக்க வாழ்நாள் முழுவதும் பரிசோதனை, அனுஷ்டானம், ஆராய்ச்சி செய்ய விரும்புவோருக்கு அஜேய பாரதத்தின் ஆக்குனரான கௌரவம் தரப்படும். இதுபோன்ற 7000 அஜேய பாரதத்தின் ஆக்குனர்களுக்காக ஒரு புதிய நகரம், அஜேய் பாரத் நகர் சிருஷ்டிக்க சங்கல்பம். அவர்கள் முடிவுபெற தக்க முயற்சிகள் எடுக்க அனுஷ்டானங்கள் விதிமுறைப்படி முடிவு பெறத் தக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

யோகத்தின் மகிமையால் பாரதத்தின் சிந்தனையில் சத்குணத்தை அதிகரிக்கும் பரிசோதனையை மேன்மேலும் வெற்றிகரமாக நடத்த பாரதத்தின் எல்லாவிதமான வித்தைகளை ஒன்றுசேர்த்து பரிசோதனை செய்ய வேண்டும் என மகரிஷியின் அவா.

தேசத்தில் உள்ள செல்வந்தர்கள் இந்தத் திட்டத்தில் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து உறுதுணை கொடுக்க வேண்டுகிறோம். வேத விதானங்களால் தேசிய சிந்தனையில் ஒருமைப்பாடு ஏற்பட்டு அதனால் தேசத்தில் தர்மம், அர்த்தம் காமம், மோக்ஷம் தரும் க்ரியா சக்தி உறுதி பெற்று எல்லாவித மங்களமும் உண்டாகும்.

நாட்டுப் பற்றுள்ள வேத விஷய வித்துவான்கள், வேத யோக விஷய சித்தர்களும், சாதகர்களும், தெய்வீக சக்தியில் நம்பிக்கை உள்ளவர்களும், மற்றும் மகரிஷியின் அஜேய பாரத போராட்டத்தில் ஈடுபட்டு தன் வித்தையை அர்த்தமுள்ளதாகவும், தன் வாழ்க்கையை பூரணமாக ஆக்க விரும்புவோர் தன் கருத்தைத் தெரிவிக்கலாம்.

இதை கூடிய சீக்கிரம் செய்ய விரும்புகிறோம். ஏனென்றால் சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதற்கேற்ற பரிசோதனை செய்யலாம். மகரிஷி பதஞ்சலியின் யோக சூத்திரம் என்ன சொல்கிறது என்றால்—

' हेयं दुःखमनागतम् ', जो दुःख अभी आया नहीं है,

''ஹேய துக்கமனாகதம்'' வராத துன்பத்தை நிவர்த்திசெய்ய யோக வித்தை சர்வவல்லமை பெற்றது. வேத வித்தை அமோகமானது. அனந்த சக்தி பெற்றது.

வித்வத் ஜனங்களுக்கு ஓர் வேண்டுகோள். எல்லோரும் ஒன்றுபட்டு முயற்சித்து இந்தத் தேசத்தை வலிமை மிக்கதாகவும், ஆற்றல் உள்ளதாகவும் உருப்பெற உழைப்போம். இதன் பயனால் எல்லா தேசங்களும் பயன் பெறட்டும்.

பாரதத்தின் அரசியல், பொருளாதார, ஆன்மீக மற்றும் சமுதாய பிரச்னைகள் தெய்வீக வழிகாட்டிகளை அழைக்கின்றன. ''பலசாலிகளே ஏனிந்த மௌனம்?''

' का चुप साधि रहेहु बलवाना '
' काल्ह करै सो आजकर आज करै सो अब ।
पल में परलय होयगी बहुरि करैगो कब ।

''நாளை செய்வதை இன்று செய். இன்று செய்வதை இப்பொழுதே செய். க்ஷணத்தில் பிரளயம் ஏற்படலாம். பின் எப்போது செய்வாய்?''

பரம்பரையாக தெய்வீகப் பரிசோதனைகளை எழுத்து மூலமாக வைத்துள்ளோர்களுக்கு அதைஉபயோகிக்கும் தருணம் வந்துவிட்டது. தெய்வீக பரிசோதனைபற்றி ஆராய்ச்சி செய்ய விரும்புவோர் எங்களுக்கு தெரிவிக்கவும்.

மகரிஷிக்கு யோகத்தில் கிடைத்த தேர்ச்சியால் ஒன்று நிச்சயமாகச் சொல்ல முடியும். என்னவென்றால் யோகத்தால் தனி மனித வாழ்க்கையையும் சமுதாய வாழ்க்கையையும் பிரச்னைகளற்றதாகச் செய்யலாம். இதை உத்தேசித்துத்தான் மகரிஷி அவர்கள் உலக சாஸனத்தை ஆரம்பித்துவைத்தார் (1975). கூடிய சீக்கிரம் மகரிஷியின் உலக சாஸனத்தின் மகிமையால் பாரதம் தன் புராதனகௌரவத்தை திரும்பப் பெறும். மற்றும் தன் ஜகத்குருத்வத்தை நிலைநாட்டும். நமது நாட்டின் அரசியல் மற்றும் சாஸன ஒழுங்கீனங்கள் கூடிய சீக்கிரம் மறையும். இருள் விலகி ஒளி பரவுவதுபோல்,தேசத்தில் சத்குணத்தைஅதிகரிக்க வேண்டி பாடசாலைகளில்ஒருங்கிணைந்துபாவத்திற்கு அப்பாற்பட்ட தியானத்தை அப்பியாஸம் மூலம் ஆரம்பிக்க உத்தேசம். பாடசாலைகளின் விடுமுறை தினங்களில், இவ்விதமான ஒருமித்த தியானம் இல்லாததால், ரஜ, தமோகுணங்கள் உயிர் பெறுகின்றன. இது அனுபவத்தில் கண்ட உண்மை. அகல் அணைந்ததும் இருள் பரவுகிறது. ஆகையால் தேசத்தின் ஒரு இடத்திலாவது 7000 நபர்கள் ஒன்று சேர்ந்து நிரந்தர பாவத்திற்கு அப்பாற்பட்ட தியானத்தையும், புலனடக்கத்தையும் அப்பியஸித்துக் கொண்டு இருக்க வேண்டும், மற்றும் அஜேய பாரதத்திற்கு வேண்டி தெய்வீக அனுஷ்டானங்கள் செய்து கொண்டு இருக்க வேண்டும். வெற்றிக்கு அமோக தெய்வீக பரிசோதனைகள், ஆக்னேயாஸ்திரம்,பாசுபதாஸ்திரம், பிரும்மாஸ்திரம் மற்றும் தெய்வீக சாஸ்திர விதானங்களை சந்தர்ப்பம் ஏற்பட்டால் பரிசோதனை செய்ய அப்பியாசம் செய்ய வேண்டும்.

இது பிரசாரத்திற்கு எழுத வேண்டிய விஷயம் அல்ல. ஆனால் நாட்டின் மக்களுக்காக விளக்கி எழுத வேண்டி வருகிறது. துன்பங்கள் ஏற்பட்டால், அவர்கள் நிராதரவாக எண்ணி அஞ்ச வேண்டாம் அல்லவா?

வேதத்தின் சத்யம் நித்தியம். ஆகையால் வேதவித்தை இயற்கையில் நிர்மலமானஇடத்தில், அம்பாளின் பவித்ரமான பிராங்கணத்தில், உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட சிந்தனையில் என்றென்றும் இருக்கின்றன.

' यो जागार तमृच: कामयन्ते ' ऋग्वेद—

''யோ ஜாகார் தம்ருச காமயந்தே'' ருக் வேதம்.

பாரதத்தின் பவித்ர சிந்தனையில் வேதவித்தைகள் எப்போதும் உள்ளன. சந்தர்ப்பம் ஏற்படும்போது அவைகளை உபயோகிக்கலாம். அஜேய பாரதத்திற்கு சங்கல்பம் செய்து நாம் தெய்வீக பரிசோதனை செய்யும் தருணம் இதோ வந்துவிட்டது.

அஜேய பாரதத்திற்கு வேண்டி தெய்வீகபரிசோதனை கூடிய சீக்கிரம் செய்ய வேண்டும், ஏனென்றால்நாட்டின்உள்துறையிலும் வெளித்

துறையிலும் ஏற்பட்ட நெருக்கடிகள். நாட்டின் பராமரிப்புக்கும் பாதுகாப்பிற்கும் உபயோகப்படுத்தும் சாதனங்கள் போதா. நவீன பௌதிக விஞ்ஞான அணுசக்தி சாதனங்களால் ஒருநாடும்தன்னை காப்பாற்றிக்கொள்ள முடியும். ஒரு நாடு மற்றொரு நாட்டை அழிக்கலாமே தவிர தன்னை பாதுகாக்க முடியாது. விஜயத்தின் அமோக தெய்வீக பரிசோதனையால் இந்த யுகத்தில் நாட்டின் பாதுகாப்பு வளம் பெறும். வேத இலக்கியத்தில் உள்ள விஜயத்தின் அமோக பரிசோதனைகள்தான் இந்த யுகத்தின் அழிக்கும் சக்திகளை வெல்லும்

'सत्यमेव जयते'

''சத்யமேவ ஜயதே'' இது சனாதன வேதிக சித்தாந்தம். விஜயத்திற்கு அமோகமான சித்தாந்தம். இதை பரவச் செய்யுமுன் தேசிய சிந்தனையை சத்குணமாக ஆக்க வேண்டும். இது தான் தேசிய அஜேயத்தின் சாதனம். ஒவ்வொரு தனி மனிதனும், ஒவ்வொரு குடும்பமும் தன் நித்திய வாழ்க்கையில் இந்தஅமோக சித்தாந்தத்தை பயில வேண்டும். இந்த சித்தாந்தத்தை கடைப்பிடிக்க ஒரு சுலபமான வழி — உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட தியானத்தை தினமும் அப்பியஸிக்க வேண்டும். பகவான் கீதையில் சொல்கிறார்—

— 'निर्द्वन्द्वो नित्य सत्वस्थो निर्योगक्षेम आत्मवान।'

''நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுன'' கீதை— 2/45 அதன் பலனும் சொல்கிறார். ''நிர்த்வந்தோ நித்ய சத்வஸ்தோ நிர்யோகக்ஷேம ஆத்மவான்'' இந்த பாவத்திற்கும் அப்பாற்பட்ட தியானத்தைக் கொண்டுதான் தேசிய சிந்தனையில் சத்குணத்தைப் பெருக்கலாம்— இதுதான் உண்மையில் தேசிய அஜேய சாதனம்.

டெல்லியிலுள்ள மகரிஷியின் ''வேத விஞ்ஞானம் வித்யாபீட ''த்தில் சுமார் 1500 மாணவர்கள், காலை, மாலை ஒருங்கிணைந்து பாவத்திற்கு அப்பாற்பட்ட தியானம் மற்றும் புலனடக்கம் பயிலுகிறார்கள். அடக்கம் செய்யும்போது அவர்கள் ஆசனம் மேலே எழும்புகிறது. இந்த யோகாப்பியாஸத்தால் வாயு மண்டலத்தில் சத்குணம் பரவுகிறது. ஆகையால்தான் பஞ்சாப் மாநிலத்தின் தீ டெல்லியில் பரவவில்லை போலும்!

இந்த பாவத்திற்கு அப்பாற்பட்ட தியானத்தின் அப்பியாஸம் செய்து பல நாடுகள் பயனடைந்து விட்டன. 3—4 வாரங்களிலேயே. பிலிபீன் நாட்டின் உருவே மாறிவிட்டது. அங்குள்ள அரசியல், பொருளாதார நெருக்கடிகள் அகன்று விட்டன. மகரிஷி சொல்கிறார்; தெய்வ சங்கல்பத்தால் எதை தான் சாதிக்க முடியாது?'' இந்த தியானத்தின் மகிமையால் மகரிஷியின் உலக சாஸனத்தின் அருமை வெளிநாடுகளிலும் நாட்டிலும் எல்லோரும் அறிந்ததே.

நமது நாடு பெரியது. ஜனங்கள் ஏராளம். விதவிதமான விருவிருத்கள் தேச சிந்தனையை ஆட்டுவிக்கின்றன. இதற்கெல்லாம் ஒரே உபாயம் — தேசத்தில் எல்லா இடங்களிலும், பாடசாலை, கல்லூரிகளிலும் 15 நிமிடங்கள் பாவத்திற்கு அப்பாற்பட்ட — ஒருங்கிணைந்து செய்யும் தியானத்தை அப்பியஸிக்க வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் காலை மாலை இதை அப்பியஸிக்க வேண்டும். இந்த தியானம் மகரிஷியின் வேத விஞ்ஞானத் துறையின் ஒரு அமோகமான விதானம். இதனால் தனி மனிதனின் வாழ்க்கையையும், சமூக வாழ்க்கையையும் சத்குணமான வாழ்க்கையாக உருவாக்கலாம். தேசத்தை அஜேயமாக்கலாம். ரிக்கு வேதத்தின்

'समितिः समानी'

''ஸமிதிஸ்ஸமானி'' சித்தாந்தம் பாரதத்தை உள்துறை மற்றும் வெளித்துறை பிரச்னைகளை நீக்கி உலக சமாதானத்திற்கு வழி அமைக்கிறது.

சென்ற ஜனவரியில் மகரிஷி 7000 (உலக ஜனத்தொகையில் 1%) தியானம் மற்றும் புலனடக்கத்தில் வல்லமை பெற்ற நபர்களை, ''மகரிஷி அந்தர்ராஷ்டீரிய விஷ்வ வித்யாலயத்தில் காரட்டி உலக சிந்தனைக்காக (17, டிஸம்பர், 1983லிருந்து 6 ஜனவரி, 1984 வரை) 21 நாட்கள் செய்த பரிசோதனையால் உலகத்திலேயே சத்வத்தின் அலை பரவியது. இந்த 7000 நபர்கள் வேத, யஞ்ய, பரிசோதனைகளில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்திருந்தால், இந்த பரிசோதனையும் பாரதத்தில் நடைபெற்றிருந்தால் இந்த சத்வத்தின் மகிமை கூடி இருக்கும். தற்போது பாரதத்தில் நடந்த தீய சம்பவங்கள் நடந்திராது. மகரிஷி சொல்கிறார். ''இப்போது ஆரம்பித்தால் என்ன பாதகம்?

'जबसे चेते तबसे सही।

'बीती ताहि बिसारि दे आगे की सुधि लेहि।

பழையவற்றை மற. ஆக வேண்டியதைக் கவனி.''

இப்போது மகரிஷி பாரதத்தில் யோகவித்தையையும், சாட்சாத் வேத விஞ்ஞான வித்தையையும் சேர்த்து 7000 நபர்களை ஒருங்கிணைத்து பரிசோதனை ஆரம்பிக்க எண்ணுகிறார். யோக வித்தையால் விளைந்த சத்குணமும், வேத வித்தையால் விளைந்த தெய்வீக மகிமையும் சேர்ந்து, பாரதத்தில் சிந்தனையை அஜேயமாக்கி, உலக சிந்தனை புனிதமாக்கட்டும்,

பாரதத்தின் கௌரவம் ஜகத்குருத்வத்தின் கௌரவம் என்று எல்லோரும் அறியவேண்டும். நாட்டில் ஒவ்வொரு தலைமுறையிலும் மகான்கள், வித்துவான்கள், சித்தர்கள் இந்த கௌரவத்தைக் காப்பாற்றி வருகிறார்கள். அவர்கள் செய்யும் தபத்தால், சாதனையால் காலம் கழன்று கொண்டே இருக்கும். ஞான விஞ்ஞான பரம்பரைகள் ஜீவித்துக்கொண்டு இருக்கின்றன. உலகத்திற்கு வழிகாட்டுகின்றன. சென்ற சில நூற்றாண்டுகளில் வேத விஞ்ஞானத்தை பௌதிக விஞ்ஞானம் மறைத்து விட்டது. ஆனால் காலம் மாறிவிட்டது. வேத வித்தை உயிர் பெற்று விட்டது. ஞான யுகத்தின் ஆரம்பம் இது. இனி நாட்டில், மற்றும் உலகமெங்கிலும் சத்குணம் பரவி சர்வ மங்களமும் உண்டாகும்.

பாரதத்திலும், உலகத்திலும் உலக சிந்தனையை சத்குணமாக்க மகரிஷி செய்யும் யோக பரிசோதனையில் யோக வித்தையின் பரம ரகசியமான சித்தாந்தங்களும் உள்ளன. இது நம் வேத இலக்கியத்தில் உள்ளன. வேத விஞ்ஞான பிரயோகத்தால் நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் தேசத்தை அஜேயமாக உருவாக்கலாம்.

யோகதத்துவத்தில் மகரிஷி தேர்ச்சி பெற்றுள்ளார். அதன் பரிசோதனையால் உலக சிந்தனையை சத்குணமாக்கப் படும் பாடுகளால், ஒன்றுமட்டும் நிச்சயம். உலக சிந்தனையை சத்குணமாக்கலாம். வித்வான்களுக்கு ஓர் அறிக்கை. இந்த சித்தாந்தத்தை தான், அரவிந்தர் விரும்பினார். இதை தான் நடைமுறையில் பயில விரும்பினார். Des:ent of Supro mental Power on earth, அம்பாளின் அனந்த சக்தியின் பூமியில் அவதரணம். இந்த தியானமென்பது தான் பரிசோதனை. இதனால் தனி மனிதனின் வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் வெற்றிபெறும். இதனால் இயற்கையின் தோஷங்கள் நீங்கும். இயற்கை ஒருமைப்படும். பாரதத்தை அஜேயமாக்குவதற்கு இந்தப் பரிசோதனை செய்யப்படுகிறது.

இந்த அஜேய பாரத யோஜனையின் ஓர் அங்கமாகும். கல்வி நிலையங்களில் தியானம் அப்பியஸிப்பது. இதற்கு நல்ல பாடசாலைகளில் ஒரு ஆசிரியர் தேவை. இதனால் பாடசாலைக்கு அருகில் இருக்கும் சமூகத்தில் சத்குணத்தை நிலைநாட்டலாம்.

அஜேய பாரதத்தின் மற்றொரு அங்கம் நித்திய நியம யக்ஞானுஷ்டானம். யோக வேத வித்தையில் தேர்ச்சி பெற்ற 7000 யோகாப்பியாஸிகள், வேதவிவசாயிகள் ஒருங்கிணைந்து தன் நித்திய வாழ்க்கையை அனுஷ்டானமயமாக ஆக்கவும் இதனால் அவர்கள் சொந்த வாழ்க்கை பயனடையும். உலக சிந்தனையிலும் சமூகத்திலும் சத்குணம் பரவும். நிச்சயமாக உலக சிந்தனை வேத வித்தையின் மகிமையால் ஒருமைப்படும். பாரதம் வெல்ல முடியாத தேசமாகும்.

இந்த சித்தாந்தம் வேதிக விஞ்ஞானத்திலும், நவீன பௌதிக விஞ்ஞானத்திலும் கண்ட உண்மை— ''அக்னி பூர்வேபிரிஷபிரீட்யே நூதனைருத் ருக்வேதம் 1/1/2.

' अग्निः पूर्वेभिर्ऋषिभिरीड्यो नूतनैरुत । '

ऋग्वेद – १/१/२

சித்தனை ரூப அக்னியின் உபாஸனை பழைய, புதிய தத்துவதரிசிகள் செய்கிறார்கள். இந்த சித்தாந்தத்தை நவீன பௌதிக முறையில் புரிந்து கொள்ள வேண்டுமானால், தியானத்தில் விஞ்ஞான பரிசோதனையால் ஏற்படும் பயன்களைப் பார்க்க வேண்டும். (இதுபற்றி Scientific Research on Transcendental Meditation and Sidhi Programme, Mahrishi Technology of Unified field. பார்க்கவும்.)

பாரதிய முறைப்படி ஒவ்வொரு வருடமும் அஜேய பர்வம் கொண்டாடுகிறோம். அதே அஜேய பாரத் மகாசங்கல்பத்தால் சர்வ மகிமை, வல்லமை படைத்த வேத விஞ்ஞான வித்தையின் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படும். தெய்வீக அருளால், தேசத்தில் மங்களம் உண்டாகும். ஒவ்வொரு வீட்டிலும் மங்களம் பாடட்டும். உலகத்திற்கு பாரதத்தின் வரம் — சுபம் பூயாத்.

— ' शुभं भूयात् '

கவிஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் இதுபற்றி எழுத வேண்டுகிறோம்.

கடிதப் போக்குவரத்து முகவரி:-

1. அஜேய பாரத அபியான்
மகாமகோபாத்தியாய ஆசார்ய
ராமவிலாஸசுகல்

சங்கராச்சார்ய நகர்,
ரிஷிகேஷ் (உ.பி.) - 249 305

2. அஜேய பாரத அபியான்
டாக்டர் ராம்குமார் வர்மா,
ஸாகேத், 4-பிரயாக்ஸ்ட்ரீட்,
அலகாபாத் (உ.பி.) - 211 001

3. அஜேய பாரத அபியான்
மகரிஷி வேத விஞ்ஞான
வித்யாபீடம்,

தபால்பெட்டி நெ. 7020
டெல்லி-110-065.

— (வி-ம்)

''என்ன சார் இது! 16 ரூபா 50காசு கட்டறதுக்கு 17 ரூபாய் நீட்டறீங்க! சில்லறை இல்லையே! ஆபீஸ் திறந்து 9 மணிக்குக் கவுண்டர் ஓபன் பண்ணதும் முதல் ஆளா வந்த நீங்களே இப்படி நோட்டை நீட்டினா எப்படி?'' என்று படபடத்தான் ரகு.

''அவசரமாப் புறப்பட்டு வந்துட்டேன் சார்! நான் வேணா மீதி 50 காசை நாளைக்குக் காலை வாங்கிக்கறேன் சார்! ரசீது பின்னாலே 50 பைசா due–ன்னு எழுதிக் குடுத்துடுங்க!''

''அந்த மாதிரி அதிக பணம் வச்சுக்கக் கூடாது சார்.''

''சார்! அப்புறம் எனக்கு ஆபீஸுக்கு லேட்டாயிடும் சார்! இப்பவே மணி ஒன்பதேகால் ஆயிடுச்சு!'' என்று கண்களால் கெஞ்சினார்.

அவர் சென்ற 10 நிமிடத்துக்கெல்லாம் பணம் கட்ட கும்பல் வந்து சில்லறையும் சேர்ந்து விட்டது. அவருக்குக் கொடுக்க வேண்டிய 50 பைசாவை 5 பத்து பைசா வாகப் பொட்டலம் கட்டி டிராயரின் மூலையில் போட்டு வைத்தான். கலெக்ஷனை முடித்து பேங்கில் பணம் கட்டிவிட்டு வந்து மதிய உணவை முடித்துக் கொண்டான். அரை மணி ஓய்வுக்குப் பிறகு கணக்குகளைச் சரிபார்த்துக் கொண்டிருந்தான்.

''இங்கே யார் சார் ரகுநாதன்?''—என்று கேட்டுக் கொண்டே போஸ்ட்மேன் செக்ஷனுக்குள் நுழைந்தார். ரகுவிடம் ஒரு கவரை வீசிவிட்டு ''40 பைசா ட்யூ குடுங்க! ஸ்டாம்பு குறைச்சலா ஒட்டியிருக்காங்க! சில்லறையாகக் குடுங்க'' என விரட்டினார் போஸ்ட்மேன்.

''சில்லறை இல்லையே'' என இழுத்தான்.

''அப்போ நாளைக்கு வாங்கிக்குங்க! இங்கேயே நின்னுக்கிட்டு இருந்தா எப்போ கட்டை முடிச்சுட்டு வீட்டுக்குப் போறது'' எனப் படபடத்தார் போஸ்ட்மேன்.

பக்கத்தில் சக ஊழியரிடம் கேட்டுப் பார்த்து யாரிடமும் சில்லறை இல்லை. சட்டென்று காலையில் பணம் கட்டிய நாமக்காரர் ஞாபகத்துக்கு வந்தார். 40 பைசா கொடுத்துக் கவரை வாங்கிப் பிரித்தான். போன வாரம் தங்கை ஜெயாவைப் பெண் பார்த்து விட்டுப் போன பிள்ளை வீட்டார் பெண் பிடித்திருக்கிறதென்றும், மேற்கொண்டு ஆக வேண்டிய லௌகிக விஷயம் பற்றியும் பக்கம் பக்கமாக எழுதியிருந்தனர். அவசரத்தில் அதிக ஸ்டாம்பு ஒட்ட மறந்து விட்டனர். அதுதான் அதிகமாக ஒட்ட மறந்த 20 பைசா ஸ்டாம்புக்கு 40 பைசா due வாங்கி விட்டனர், தபால் இலாகாவினர். காலையில் பணம் கட்ட வந்த அவருடைய சில்லறை மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் இந்தச் சந்தோஷமான செய்தியை அறிந்து அம்மாவுடனும் ஜெயாவுடனும் இன்று பகிர்ந்துகொள்ள முடியுமா? வருந்தி மன்னிப்புக் கேட்டுத் தலை குனிந்தான் ரகு. நாளை காலையில் அவருடைய ட்யூ–வான 50 பைசா சில்லறையைக் கொடுத்து, நன்றி சொல்லி, 'ட்யூ' ரெஸ்பெக்டையும் அவருக்குத் தரவேண்டும் என்று எண்ணினான் ரகு.

ட்யூ



சீ. ஆர். நாகராஜன்

நெருப்பு மலர்

இந்துமதி

15

ஆச்சரியமும், அதிர்ச்சியும் சந்தோஷமுமாக அர்ஜுனைப் பார்த்தாள் கிருத்திகா. அவன் சொன்னதை நம்ப முடியாத வகையில் கண்கள் அகன்றன. நேற்றிரவு தான் கல்யாணத்தைப் பற்றிக் கேட்டபோது அவ்வளவு பேசியவனா இவன் என்கிற சந்தேகம் ஏற்பட்டது. இப்போது எப்படி சம்மதிக்கிறான்? ஒருவேளை விளையாட்டிற்குச் சொல்கிறானோ?... ஆனால் இந்த விஷயத்திலெல்லாம் அர்ஜுன் நிச்சயம் விளையாட மாட்டான். என்கிற முடிவில் அவனை மீண்டும் நிமிர்ந்து பார்த்தது.

''நிஜமாகவா சொல்கிறீர்கள்...?'' என்று கேட்டாள்.

''நிஜமாகத்தான் சொல்கிறேன். ஏன், இன்னமும் உனக்கு நம்பிக்கை வரவில்லையா கிருத்திகா... இது என்ன விளையாடுகிற விஷயமா...? நாம் இப்போது உத்திர சுவாமி மலைக்கு மாலை மாற்றிக்கொள்ளத் தான் போகிறோம்...''

''உத்திர சுவாமி மலையா...? சற்றுமுன் மலையமந்திர் என்றீர்களே...?''

''இரண்டும் ஒன்றுதான்.''

''சரி, மாலை மாற்றிக் கொள்ளப்போகிறோம் என்கிறீர்களே, ஆனால் மாலை எதுவும் வாங்கிக் கொண்டு வரவில்லையே...?''

''அதெல்லாம் தயாராக இருக்கும். நீ கவலைப்படாதே... மலையமந்திரில் இருக்கிற கல்யாண குருக்கள் எனக்கு மிகவும் வேண்டியவர். எனக்கு மட்டுமில்லை கீர்த்தி. டில்லியில் இருக்கிற நிறைய பேர்களுக்கு அவர் வேண்டியவர். நல்லவர். காலையிலேயே அவருக்கு டெலிபோனில் விஷயத்தைத் தெரிவித்தாகி விட்டது...''

''என்னவென்று சொன்னீர்கள்...?''

''இரண்டு மாலைகள் வாங்கி வைத்து, அர்ச்சனை பண்ண வேண்டுமென்று சொன்னேன்...''

''அவ்வளவுதானா...? மாலை மாற்றிக் கொள்வதோடு சரியா...? நாம் சேர்ந்திருக்கக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோமா...?''

''அவசரப்படாமல் பொறுத்திருந்து பாரேன் கிருத்திகா...''

அதன் பின்னர் அவள் மலையமந்திர் வருகிற வரை மௌனமாக இருந்தாள். இருநீர் மலை மாதிரி சிறிய குன்றின் மீது கோவில் இருந்தது. அடிவாரத்தில் காரை நிறுத்தி விட்டுப் படியேறி மேலே போய் முதலில் பிள்ளையாரைத் தரிசித்து விட்டு முருகன் சந்நிதிக்குள் நுழைந்த போது கல்யாண குருக்கள் ''வாங்கோ...' என்று முகம் நிறைந்த சிரிப்புடன் வரவேற்றார்.

''எங்கே அப்பாவைக் காணோம்?'' என்று கேட்டார்.

''அப்பா வரவில்லை.'' என்று சுருக்கமாய்த் தெரிவித்த அர்ஜுன் கிருத்திகாவை அறிமுகப்படுத்திவிட்டுக் கடைசியில் சொன்னான்.

''என் வருங்கால மனைவி. பெயர் கிருத்திகா. மதுரையைச் சேர்ந்தவள் தான்''

''அப்படியா, ரொம்ப சந்தோஷம்'', என்று அனுவளியக் கேள்வி, விசாரணை எதுவுமின்றி சந்தோஷம் முகத்தில் தெரிய மீண்டும் புன்னகைத்தார் குருக்கள்.

''பண்டிட்ஜி. நான் உங்களிடம் சொன்ன மாலைகள் வாங்கி வைத்திருக்கிறீர்கள் இல்லையா?''

''ஆஹா, அற்புதமாய் ரோஜா மாலையே வாங்கிவைத்திருக்கிறேன்...''

''அதோடு இதோ இந்தஇரண்டுமோதிரங்களையும் முருகன் காலடியில் வைத்து, அர்ச்சனை பண்ணித் தாருங்கள். நாங்கள் இரண்டு பேரும் முருகனின் அருளோடும், உங்களின் ஆசிர்வாதத்துடனும்



இங்கே மாலையும் மோதிரமும் மட்டும் மாற்றி எங்கள் கல்யாணத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளப் போகிறோம். அப்புறமாகக் கல்யாணத்திற்கு உங்களை நேரிலேயே வந்து அழைக்கிறோம்...''


''ஆஹா... ரொம்ப சந்தோஷம். இருங்கள். முருகன் கழுத்திலும், அம்பாள் கழுத்திலும் மாலைகளை சாற்றி,மோதிரத்தை வைத்து அர்ச்சனை பண்ணிக் கொண்டு வருகிறேன்... இப்படி முன்னால் வந்து நின்று நன்றாகத் தரிசனம் பண்ணிக்கொண்டிருங்கள்...''

முன்னால் போய் அர்ஜுனின் பக்கத்தில் நின்று கைகூப்பி, கண் மூடிய கிருத்திகாவிற்கு இது ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. மனம் முழுவதும் நிறைந்து கிடக்கச் சன்னதியிலிருந்து கரகரவென்று கண்ணீர் வழிய நின்ற அவள் தோளில் கை வைத்து ஆதரவாகக் கேட்டான் அர்ஜுன்:

''என்ன கீர்த்தி...?''

''ம்ஹூம்... மனசு ரொம்ப சந்தோஷமா இருக்கு...'' என்றாள்.

மாலைகளைச் சாற்றி, மோதிரங்களைக் காலடியில் பொட்டிட்டு வைத்து குங்குமக் கிண்ணத்துடன் வந்து அர்ச்சனைக்குப் பெயர், கோத்திரம், நட்சத்திரம் கேட்டுக்கொண்டு போனார் குருக்கள். அர்ச்சனை முடிந்து தீபாராதனை காட்டித் தட்டைக் கொண்டு வந்த போது கிருத்திகாவிடம் ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்துப் போடச் சொல்லி, தானும் ஒரு நூறு ரூபாய் நோட்டைப் போட்டான். பின்னர் குருக்கள் மாலைகளைக் கொண்டு வந்து இரண்டு பேரிடமும் கொடுத்து மாற்றிக் கொள்ள வைத்தார். பின்பு மோதிரங்களை அர்ஜுனிடம் தந்து மந்திரம் சொல்லி அவள் விரலில் அணியச் சொல்லி, அதே போல் அவளை இன்னொரு மோதிரத்தை அவன் விரலில் அணிவிக்க வைத்தார்.



''முருகனுக்கு நமஸ்காரம் பண்ணுங்க... நல்லபடியா கல்யாணம் பண்ணிண்டு தீர்க்காயுசா, தீர்க்க சுமங்கலியா, நன்னா இருங்கோ...'' என்று வாழ்த்தினார்.

சுற்றியிருந்தவர்கள் இவர்களை ஆச்சர்யமாகப் பார்க்க மாலையைக் கழற்றாமலேயே மௌனமாகக் கோவிலைச் சுற்றிவிட்டு, பிரசாதம் வாங்கிக் கொண்டு, குருக்களிடம் விடைபெற்றுக் கீழே வந்தனர். காரினுள் ஏறிக் கிளம்பு முன் கேட்டான் அர்ஜுன்,

''என்ன கீர்த்தி இப்போ சந்தோஷம் தானே...?''

''மனசு நிறைஞ்சிருக்கு அர்ஜுன். இந்த சந்தோஷத்துல இப்படியே உயிர் போயிடக் கூடாதான்னு தோணறது...''

''சீ! பைத்தியம்...'' என்று செல்லமாக அதட்டிய அர்ஜுன் கைநீட்டி அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொஞ்சலாகச் சொன்னான்.

''இந்த நேரத்தில் பேசுகிற பேச்சா இது, கிருத்திகா. இன்னிக்குத்தான் முதல் முதலா வாழ்க்கையை ஆரம்பிச்சிருக்கோம் அதுக்குள்ள இப்படிப் பேசலாமா...?''

''இன்னிக்குத்தான்முதல் முதலா வாழ்க்கையை ஆரம்பிச்சிருக்கோமா...? ஆனால் எனக்கு வாழ்ந்து முடிந்த திருப்தி ஏற்பட்டுப் போயிடுத்து அர்ஜுன்...''

''ம்...?'' என்று மீண்டும் முறைத்த அர்ஜுன்,

''இப்போ எங்கே போகலாம் கிருத்திகா.'' என்று கேட்டான்.

''நீங்களே சொல்லுங்கள்...''

''எங்கேயாவது ப்ரேக்பாஸ்ட் சாப்பிடலாம். லஞ்சிற்கு வீட்டிற்குப் போய் அப்பாவோடு சேர்ந்து கொள்ளலாம். பிரேக்ஃபாஸ்ட் முடிந்து, உன் ஹாஸ்டலுக்குப் போய்ப் பெட்டி, புத்தகங்களை வாங்கிக் கொண்டு வீட்டிற்குப் போனால் சரியாக இருக்கும். என்ன...?''

''சரி...''

''ப்ரேக்பாஸ்ட்டிற்கு எங்கே போகலாம் என்பதைச் சொல்லு...''

''அதையும் நீங்களே சொல்லிவிடுங்கள்''.

''லோதி உட்லெண்ட்ஸ்...?''

''சரி...''

''ஏன், கீர்த்தி இன்று முழுதும் நான் எதைக் கேட்டாலும் சரி சொல்லு வாயா...?''

''அதைத்தானே சொல்லிக் கொண் டிருக்கிறேன்...''

''இனிமேலும் அதே சரிதானே வரும்..?''

''ஆமாம்.''

''அப்படியானால் நான் இப்போது ஒன்று கேட்கப் போகிறேன்...''

''என்ன...?''


''கல்யாணம் முடிந்தபின் இன்னொரு முக்கியமான ஃபங்க்ஷன் நடக்குமே அது எப்போது...?''

ஒரு ஏரி குளமாகிறது?

'ஊட்டி என்றாலே நினைவுக்கு வரு வது அங்குள்ள எழிலான ஏரியும், அதன் படகுத் துறையும் தான். 1825—ல் 65 ஹெக்டேர் பரப்புடைய தாய் இருந்த இந்த ஏரி, 1906—ல் 50 ஹெக்டேராய்ச் சுருங்கி விட்டது. 1970—ல் சுமார் 23 ஹெக்டேராய் இன்னும் சுருங்கியது. 'இப்படியே போனால் 2040—ம் வருடம் இது ஒரு சாக்கடை போல ஆகிவிடும்' என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகி றார்கள். இதைத் தடுக்கச் சுற்றுலாத் துறையும், அரசாங்கமும் உடனடி நடவடிக்கை எடுத்தாக வேண்டியது அவசியம்.

—ஊட்டியில் படகுக்குழாம் அடிக்கல் நாட்டு விழாவில் நீலகிரி மாவட்ட கலெக்டர் குப்தா கூறியது.

கேட்டவர்: எஸ். சந்திரமௌலி.



''என்ன ஃபங்ஷன்?...'' — வேண்டு மென்றே தெரியாத மாதிரிக் கேட்டான் அவன்.

''ஆஹா, குழந்தைக்கு ஒன்றுமே தெரிய வில்லே. சொல்லிக் கொடுக்கலாமென்றால் இடமில்லே. ஏன் கீர்த்தி, அதே லோதியில் ஒரு அறை எடுக்கட்டுமா...?''

''ம்ஹூம்.'' என்று முகம் சிவக்கத் தலைகுனிந்தாள். ''இது வெறும் நிச்சய தார்த்தம் தான். கல்யாணத்திற்கப்புறம் தானே அந்த பங்ஷன் எல்லாம்...''

''பார்த்தியா...? இன்னிக்கு நான் எதைக் கேட்டாலும் சரி சொல்வேன்னு சொன்னாய் இல்லையா...;''

''இப்பவும் சரிதான். ஆனால் வெறும் நிச்சய தார்த்தத்திற்கப்புறம் இல்லே. கல்யா ணத்திற்கப்புறம் தான்...''

அவளின் மன உறுதியும், இடசித்தமும் இன்னமும் கவர அவன் அவள் கையைப் பற்றி உள்ளங்கையில் அழுத்தி முத்தமிட்டுச் சொன்னான்:

''ஐ லைக் யூ மோர் அண்ட் மோர் டியர்... உன்னுடைய உறுதியும், திட்மும் என்னை இன்னமும் ஆகர்ஷிக்கிறது. ஒரு பெண் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கிறாய் நீ...''

''ம்... ஹூம்...''

''ஆமாம் கீர்த்தி. நான் பொய் சொல்ல வில்லே.—''

அவன் மேலே ஏதோ சொல்ல ஆரம் பித்தபோது உட்லண்ட்ஸ் வந்தது. இரண்டு பேரும் உள்ளே போய் முதலில் பாலைத்தி சாப்பிட்டார்கள். பின்னர் இட்லி, வடை, காபி முடிந்து வெளியில் வந்ததும் அர்ஜுன் கேட்டான்:

''ஹாஸ்டலுக்குப் போய் உன் பெட்டி, புத்தகமெல்லாம் எடுத்துக் கொண்டு போய் விடலாமா...?''

''ஓ. கே...''


''ஏன் கீர்த்தி. ஆர்வமாய்ப் படிக்க வந்து இப்படிப் பாதியில் நிறுத்த கஷ்டமாக இல்லே...?''

''இல்லே...''

''இல்லையா...?''

''நிஜமாக எனக்கு எந்தக் கஷ்டமும் இல்லே, அர்ஜுன். இந்த நிமிடத்தில் உலகத்திலேயே மிகவும் சந்தோஷமான மனுஷி நானாகத்தான் இருப்பேன். உங்களின் அன்பு எல்லாவிதமான குறைகளையும் நிவர்த்தியாக்கும். எந்தக் கஷ்டத்தையும் சந்தோஷமாக மாற்றும் என்கிற போது வெறும் படிப்பு நின்று போனதற்கு யாராவது வருத்தப்படுவார்களாஎன்ன...?''

''இவ்வளவு அழகாகப் பேச எங்கே கற்றுக் கொண்டாய்?...'' என்று வியந்த அர்ஜுன் ஹாஸ்டல் வாசலில் வண்டியை நிறுத்தி அவளை உள்ளே போய்ச் சாமான்களை எடுத்து வரச் சொன்னான். யாரிடமும் காரணம் எதுவும் சொல்ல வேண்டாம் என்றும் சொல்லியிருந்தான்.



புதிய

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு

இரண்டு டின்கள் வாங்கும்போது

புதிய ஃபாரெக்ஸ் அதிக சுவையானது
புதிய ஃபாரெக்ஸ் அதிக முழுமையானது

நீங்கள் பாசத்துடன் ஊட்டும் ஒவ்வொரு கவளமும் உங்கள் பாப்பாவின் வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.



இவ்வாய்ப்பு தேர்ந்தெடுத்த சில ஊர்களில் மட்டும் விசேஷ டின்களின்மீது ஸ்டாக் உள்ளவரை வழங்கப்படும்.

உடல் நலத்தின் உறைவிடம்—*கிளாக்ஸோ*

CLARION/B/GX/5/203 TML

ஹாஸ்டலிலிருந்து நேராக வீட்டிற்கு வந்து அப்பாவை நிற்க வைத்து நமஸ்கரித்ததும் பாஸ்கரப்பா அவர்களின் கழுத்து மாலையையும், தோற்றத்தையும் பார்த்து நிதானமாகக் கேட்டார்:

''ஏம்ப்பா, இது என்ன மாலையும் கழுத்துமாக — எங்கேயாவது சொல்லாமற் கொள்ளாமல் கல்யாணத்தை முடிச்சுட்டு வந்துட்டீங்களா...?''

''அப்படிச் செய்வோம்னு நீங்க நினைக்கலாமாப்பா...? மலையமத்திருக்குப் போயிருந்தோம். கல்யாண குருக்கள் மாலை கொடுத்து மாற்றிக்கச் சொன்னார். அவர் பேச்சைத் தட்ட முடியலே. மாற்றிக்கொண்டோம். கிருத்திகா இந்த மோதிரத்தை எனக்குப் பிரஸண்ட் பண்ணினாள். பதிலுக்கு நானும் ஒரு மோதிரம் பிரஸண்ட் பண்ண வேண்டியதாயிடுத்துப்பா...''

''ஆஹா...!'' என்று பெரிதாய்ச் சிரித்தார் பாஸ்கரப்பா... 'எவ்வளவு அழகாகப் பேசுகிறான் இவன்...?' என்று சந்தோஷப்பட்டார். தன் மனத்தையும் புண்படுத்தாமல், நடந்ததையும் மறைக்காமல் சாதுரியமாகச் சொன்ன விதத்தில் உதட்டில் புன்சிரிப்பு மறையாமல் அப்படியே நிலைக்க — ''ராம்சிங்...'' என்று கூப்பிட்டார். ''இவங்க கோவில்லே மாலை மாற்றிக்கிட்டு வந்திருக்காங்க... அதைக்கொண்டாட முதலில் பாயசம் வை. நல்லவிருந்து சாப்பாடாகப் பண்ணு... Let us ஸெலிப்ரேட் இட்...'' என்று சொல்லி முடித்த போது ஹாலில் டெலிபோன் ஒலிக்கப்போய் ரிஸீவரை எடுத்த அர்ஜுன், ''எஸ் ஸார்...'' என்ற போது அவனது முகமும், குரலும் முற்றிலும் மாறிக் கிடந்தது.

''ஐ வில் பி வித் யு இன் அனெதர் ஒன் அவர்ஸ் டைம் சார்...'' என்று சொல்லி ரிஸீவரை வைத்துவிட்டுக் கிருத்திகாவைப் பார்த்தான் அவன்...

(தொடரும்)

வேங்கை வனம்



வாசகர் கருத்து

● ''வேங்கைவனம்'' எனும் தொடர் சரித்திர நாவலை வாரந்தோறும் விரும்பிப் படித்த வாசகிகளில் நானும் ஒருத்தி. எழுத்து நடையும், கதையின் வீரம்செறிந்த போர்க்கும் என்னை வியப்பில் ஆழ்த்திவந்து கொண்டே இருந்தது. இக்கதைக்கு ஏற்றாற் போல் விஜு அவர்களின் தூரிகை நன்றாகவே விளையாடியது!
கும்பகோணம்–1, திருமதி பிரசன்னா ராஜன்.

● வேங்கையென சீறிவந்த வேங்கை மார்பன் என்றும் எங்கள் இதயத்தில் வீற்றிருப்பான். இமயமென இருப்பம் தந்த திருமேனி திருமகளாய் வீற்றிருப்பாள்.
ஸ்ரீரங்கம், ஏ. முருகந்தன்.

● ஆசிரியரின் அழகுத் தமிழும், அதில் தோய்ந்த வர்ணனைகளும் இனித்தன! தமிழ்ச்சங்கம் அழிந்ததற்கு, ஆசிரியரின் கற்பனைக்குக் கதை வடிவம் தந்து வரலாற்று நாவல் படைக்கும் ஆசிரியர் வரிசையில் சிறப்பிடம் பெற்று விட்டார் 'கோவி' அவர்கள்!
மயிலாடுதுறை, இரா. பழம்.

● கோவி மணிசேகரனின் 'வேங்கைவனம்' நிறைவு பெற்றுவிட்டதே என்று ஒருபுறம் மனசு சஞ்சலப்பட்டது. நிறைவு தந்த தொடர்!
நெல்லிக்குப்பம், ரா. ஜோதிராமன்.

● தண்ணிலவாய் ஒளிவீசும் தகத்தகாயத் தமிழ்நடையில், பரவசப்படுத்தும் பாத்திரப் படைப்பில், நெஞ்சை நெகிழ்த்தும் நித்திலக் காவியத்தில், கோவியின் கைவண்ணம் கண்டு மெய்சிலிர்த்தேன்.
காஞ்சிபுரம், எஸ். பாலாஜி.

● 'வேங்கைவனம்' நயமான — மனத்துக்கு இதமான ஒரு சரித்திரத் தொடர். அந்தக் காதல் சுவிதை என்றென்றும் மணக்கும் என்றால் கோவி எழுத்துக்களும் வாசகர்களின் மனத்தில் என்றென்றும் மணம் வீசும்.
பெங்களூர்–21, மூ. நவீன்.

● முடிவு சுபமில்லை என்றாலும் கதையிலே வீரத்தையும், காதலையும் குழைத்துத் தந்த கோவி. மணிசேகரனையும் சித்திரச்செல்வர் 'விஜு' அவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.
சென்னை–40, சி. இரா. குமார்



ஜலதோஷம் பிடித்தால் குழந்தையின் உறக்கம் நாசம்

விக்ஸ் வேப்போரப்பினால் இரவோடிரவாக சுகம்

(அவ் வேலையைச் செய்வது அன்னையின் பாசம்)

ஜலதோஷம்—அதனால் பாதிக்கப் பட்டவரே அதன் தொல்லையை அறியமுடியும். உறங்க முடியாது... மூக்கடைப்பு...சளி...இருமல்...உடல் முழுவதும் வலி...இவ்வனைவையும் பாவம் குழந்தை தாங்க முடியுமா?

மாதாவின் மந்திரக்கரம் அறியுமே ஜலதோஷத்தின் நிவாரணத்தை. அப்பாசக்கரம் தொடுவது விக்ஸ்... அதை குழந்தையின் மூக்கு, தொண்டை, நெஞ்சு ஆகியவற்றில் அன்புடன் இதமாகத் தடவுகிறார் அன்னை ...அதிலும் முக்கியமாய் முதுகிலே! அப்படித் தடவாவிட்டால் அம்முயற்சி முழுதும் அரைகுறை யாகிவிடும். தாயின் பாசம் குழைத்துத் தடவப்படும் விக்ஸ், இரட்டைச் செயல் புரிகிறது: ஒன்று, மருந்து கலந்த (மெடிக்கேட்டட்) இதன் ஆவி மூக்கடைப்பை நீக்குகிறது. இரண்டு, சருமத்தில் தடவப்படுவதால் உடல் வலியைப் போக்குகிறது. அன்பும் பாசமும் இணைந்த அன்னையின் விக்ஸ் சிகிச்சையால், குழந்தை அயர்ந்து உறங்குகிறது. விடியும்வரை...முன் போலவே குழந்தை ஆரோக்கியமும் சுறுசுறுப்பையும் அடைகிறது!



விக்ஸ் வேப்போரப்



சுவாச நிவாரணம் அளிக்கிறது நிவாரண அனுபவத்தை உணரவைக்கிறது.

RHL/VR-6 TAM R

'கிணிங், கிணிங்' என்று அலாரம் மணியடித்தது. கண்ணை விழித்துப் பார்த்தேன். மணி நான்கு.

'இத்தனை சீக்கிரம் யார் அலாரம் வைத்தது?' எரிச்சலுடன் புரண்டு படுத்த என்னை அப்பாவின் குரல் தட்டி எழுப்பிற்று. ''இப்பவே எந்திரிச்சாத்தான் குளிச்சுக் கிளிச்சு கிளம்பச் சரியாய் இருக்கும் சேகர்!''

விசுக்கென்று எழுந்து கிழிந்த பாயைச் சுருட்டி வைத்துவிட்டுக் கொல்லைப் புறத்துக்கு நடந்தேன்.

குளித்து முடித்துவிட்டுத் திரும்பி வரும்போது என் கடைசித் தங்கை கல்யாணி கையில் விரிசல் கண்ணாடியும் உடைந்த சீப்புமாகக் காத்திருந்தாள்.

நான் புறப்படுவதைப் பார்த்து, அப்பா ஈஸிச்சேரிலிருந்து எழுந்து அருகே தள்ளாடி வந்து, ''இந்தாடா அம்பது ரூபா. டிபனை ஹோட்டல்லே சாப்பிட்டுக்க. அவரை ஒரு ஆட்டோ வச்சு வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு வா'' என்று பணத்தை நடுங்கும் கரத்தால் தந்தார்.

என் சொந்தச் செலவுக்கு என்று முழு ஐம்பது ரூபாய்த் தானே வாங்குவது இதுவே முதல் தடவை.

அப்பாவின் பால்ய நண்பர் ஒருத்தர் திருச்சியில் இருக்கிறார். எக்கச்சக்கமாய் நிலபுலன்கள், ஏகப்பட்ட வசதி என்று எல்லா பாக்கியமும் அவருக்கு இருந்தும் குழந்தை மட்டும் இல்லாமற் போயிற்று. 'நல்ல பிள்ளையாய் யாராவது இருந்தால் அவனைத் தத்து எடுத்துக் கொள்ளலாமே!' என்று யோசித்தவர், பால்ய சிநேகிதத்தை நினைவு கூர்ந்து அப்பாவுக்குக் கடிதம் எழுதிக் கேட்க, இவரும் சம்மதித்து உடனடியாகத் தபால் எழுத, முகூர்த்த நாளான நாளைக்குத் தத்து எடுப்பதை ரிஜிஸ்டிரேஷன் பண்ண வக்கீல் மூலம் எல்லா ஏற்பாடும் செய்து கொண்டு, அவர் திருச்சியிலிருந்து மலைக்கோட்டை எக்ஸ்பிரஸில் புறப்பட்டு எழும்பூர் ஜங்ஷனில் இறங்குகிறார் இன்றைக்கு. அவரை வரவேற்று அழைத்து வரத்தான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

''மகாராசனா இருப்பே சேகர்! அருணாசலத்தைக் கிட்டிப்புள்ளு விளையாடற வயசில நான் பார்த்தது. அப்புறம் மேல்படிப்பு, உத்தியோகம், கல்யாணம்னு நான் இந்த மெட்ராஸிலேயே செட்டில் ஆயிட்டேன். அவனும் வரப்பு வயலு தொழிற்சாலைன்னு திருச்சியை விட்டு வர முடியலே. கடிதப் போக்குவரத்துக் கூடப் பத்து வருஷத்துக்கு முன்னாலே நின்னு போச்சு. இருந்தும் என்னையும் நம்ப குடும்ப கஷ்டத்தையும் நினைவு கூர்ந்து இப்போ உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கான்... உனக்கு அதிகமா நான் சொல்ல வேண்டியதில்லே. உன்னோட அறிவுக் கூர்மையும் பதவிசான குணமும் அவனுக்குப் பிடிச்சுப் போகும். இருந்தாலும் நீயும் பக்குவமா அவன்கிட்டே நடந்துக்க... எக்மோர் ஜங்ஷன் மெயின் கேட்லே என் பையன் நிப்பான்னு அவனுக்குக் கடிதம் எழுதி இருக்கேன். இன்ன கலர் சட்டை போட்டிருப்பான்னும் நான் எழுதியிருக்கிறபடியால் ரயிலிலிருந்து டி-2 பர்த்தை விட்டு இறங்கியதும் அவனுவே நேரடியா உன்கிட்டே வந்து நீதான் சேகரான்னு கேப்பான்.''


'சரி' என்கிற தினுசில் தலையை அசைத்து விட்டு வீட்டை விட்டுவெளியே வந்தேன்.



ரிஜிஸ்டிரேஷன் முடிந்து அவரது சட்டபூர்வமான வாரிசாக நான் திருச்சிமண்ணை மிதித்ததும் பக்குவமாக அவரது அனுமதியை வாங்கி அம்மாவை நம்பர் ஒன் நர்ஸிங்ஹோமில் சேர்த்து டிரீட்மெண்ட் தருவது தான் முதல் வேலை.

அப்புறம் மெல்ல மெல்லத் தங்கைகள் சுசீலா, நளினி, கல்யாணி மூவரையும் கரை ஏற்ற வேண்டியதுதான். 'அதெல்லாம் என் பொறுப்பு' என்று எழுதியிருக்கிறார் அருணாசலம். அத்துடன் என்னைத் தத்தாகத் தாரை வார்த்துத் தந்ததற்குப் பரிசாக, அம்மாவும் அப்பாவும் கடைசிவரை கஷ்டமில்லாமல் வாழக் கணிசமான தொகை தருவதாகவும்





கடிதத்தில் வாக்களித்திருக்கிறார் அந்த நல்ல மனிதர்!

ஆகவே அவரையும் அவரது மனைவியையும், என்னை ஈன்றவர்களாகவே நினைத்துக் கடைசிவரை அவர்களுக்குச் சேவை செய்வதே இனி எனது கடமை.

மனம் அசைபோட்டுக் கொண்டிருக்க, தன்னிச்சையாக நடந்த கால்கள் அந்தக் குறிப்பிட்ட இடம் வந்ததும் பழக்கத்தின் காரணமாக அனிச்சையாக நின்றன. அது தான் உஷாவின் வீடு! . .

உஷாவுக்கும் எனக்கும் இரண்டு ஆண்டுகளாகப் பழக்கம். அன்றைக்கு ஒருநாள் ரேஷன் கடையில் பெண்கள் வரிசையில் எக்கச் சக்கமாய்க் கூட்டம் இருந்ததால், உஷாதான் துணிச்சலாக என்னிடம் வந்து அறிமுகப்படுத்திக் கொண்டு தனது கார்டைத் தந்து, ''கொஞ்சம் எனக்கும் சேர்த்து வாங்கிடுங்களேன் ப்ளீஸ்!'' என்றாள். அப்புறம், எந்த வரிசையில் கூட்டம் குறைவாக இருக்கிறதோ, அங்கேயே இரண்டு பேருக்கும் சேர்த்து வாங்க ஆரம்பித்தோம். அத்துடன் குடும்பக் கார்டுகளைப் பரிமாறிக் கொண்டமாதிரியே மனங்களையும் பரிமாறிக் கொண்டோம்.

சாயந்திரமானால் கபாலீஸ்வரர் கோவிலுக்கு என்னைக் கொண்டு வருவாள் உஷா. அப்படியே பிராகாரத்தில் கூட்டம் இல்லாத இடமாய்ப் பார்த்து உட்கார்ந்திருக்கும் என்னிடம் வந்து அமர்ந்து நான் சொல்லும் புதுக் கவிதைகளை ரசிப்பாள்.

புதுக்கவிதையின் மேல் எனக்கு எப்படிப் பித்தோ, அப்படியே உஷாவுக்குப் பைத்தியம் பரத நாட்டியத்தின் மேல். அவளது அப்பா ஸெக்ரடேரியட்டில் டெபுடி கலெக்டர் அந்தஸ்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது ஆசிரியை ஒருத்தியை வீட்டுக்கே வரச் சொல்லி நட்டுவாங்கம் கற்றுத் தர ஏற்பாடு செய்திருக்கிறார். அவளுக்குச் சிறந்த நாட்டிய ராணியாக வர ஆசை. அதற்கு என்னாலான உதவியைச் செய்ய வேணும்!

இனி வளர்ப்பு அப்பாவிடம் சொல்லுகிற விதத்தில் சொல்லி, வளர்ப்பு அம்மாவிடம் கெஞ்சுகிற விதத்தில் கெஞ்சினால், உஷா என் மனைவி ஆவதும், அப்புறம் உலகத்தாருக்கு நாட்டியப் பேரொளி ஆவதும் நடக்கக் கூடியவைகளே!

இதோ எக்மோர் ஜங்ஷன். மத்திய சர்க்கார் கடிகாரம் மணி இப்போது ஐந்து தான் என்று அறிவித்தது. மலைக் கோட்டை எக்ஸ்பிரஸ் வர இன்னும் நிறைய நேரம் இருக்கிறது.

அதுவரை என்ன செய்யலாம்? அருகில் இருந்த ஏ.வி. ரெஸ்டாரெண்டுக்குள் நுழைந்தேன்.

கல்கிதாசன்

போட்டிக்கதை 11

காலியாய் இருந்த சோபாவில் சாய்ந்து, 'இந்த மாதிரி ஹோட்டலில் சாப்பிட்டு எத்தனை நாளாயிற்று!' என்று சந்தோஷப் பட்டவாறு சர்வரிடம் இரண்டு இட்லிக்கும் ஒரு மசால் தோசைக்கும் ஆர்டர் தந்து விட்டுக் காத்திருந்தேன்.

கடையில் சர்வர் என் மீதும் கொஞ்சம் இரக்கம் காட்டிக் கொண்டு வந்த இட்லியைச் சாம்பாரில் குளிப்பாட்டும் போது எனக்கு எதிரே ஒரு பெரியவர் வந்து உட்கார்ந்தார். வெள்ளை வெளேரென்று தூய கதராடை. கண்களில் கருணை மழை. எவரையும் பேசத் தூண்டும் முகம்.

என்னைப் பார்த்ததும் புன்னகைத்து, ''தம்பியை எங்கோ பார்த்த மாதிரி இருக்குதே'' என்றார் அவர்.

ஆச்சரியப்பட்டேன் நான். ''உங்களை இதுக்கு முன்னாடி நான் பார்த்தது கிடையாது!''

பெரியவர் வாஞ்சையுடன் சிரித்தார். ''சில பேரை முன்னே பின்னே பார்த்திருக்காட்டியும் கூட எங்கேயோ பார்த்த மாதிரி மனசுக்குள்ளே தோணும். அப்படி இருக்குமோ என்னவோ?''

''அதுக்காக என்னையே பார்த்துக்கிட்டு டிபன் சாப்பிடறதைக் கோட்டை விட்டுடாதீங்க'' என்று புன்னகைத்தேன்.

அவரும் சிரித்தார். சர்வரிடம் டிபனுக்கு ஆர்டர் தந்தார். அப்புறம் என் பக்கம் திரும்பி, ''நான் டிபனைக் கோட்டைவிடறது கிடக்கட்டும். நீங்க என்கிட்டே பேசிக்கிட்டே டிரெயினைத் தவற விட்டுடாதீங்க'' என்றார்.

''நான் ரயிலுக்குப் போக வரலிங்க. மலைக் கோட்டை எக்ஸ்பிரஸ்லே திருச்சியிலிருந்து ஒருத்தர் வர்றார். அவரை அழைச்சுக்கிட்டுப் போகத்தான் வந்திருக்கேன்.''

''அப்படின்னா ரொம்ப நல்லதாப்போச்சு'' குதூகலமாய்ச் சொன்னார் அவர். ''நானும் மலைக்கோட்டை எக்ஸ்பிரஸைப் பார்க்கத்தான் வந்திருக்கேன். என்னைச் சந்திக்க என் மகன் வர்றான். அவனை அழைச்சுக்கிட்டுப் போகத்தான் நான் வந்திருக்கேன்.''

தேவை!

''22 வயதுள்ள மாநிறம், செவ்வாய் தோஷம், ரேவதி நட்சத்திரத்தில் பிறந்த தென்கலை லேடி டைப்பிஸ்ட் பக்கத்தில் டைப் செய்ய ஆண் டைப்பிஸ்ட் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்க!''

—எம். பூங்கோதை.



''அப்போ ரெண்டு பேரும் சேர்ந்தே ஜங்ஷனுக்குப் போகலாம்'' என்றவன் என்னையறியாமலே 'களுக்' என்று சிரித்து விட்டேன்.

''ஏன் சிரிக்கறீங்க தம்பி?'' என்று கேட்டு விட்டார் அவர்.

''ஒண்ணுமில்லீங்க. நான் அழைச்சுக்கிட்டுப் போக வந்திருக்கிற நபர் திருச்சியிலேயே பெரிய பணக்காரர். அவருக்கு இருக்கிற வசதிக்கு ஃப்ளைட்டைப் பிடிச்சு சில மணி நேரத்திலேயே மெட்ராஸுக்கு வரலாம். அதை விட்டுட்டு டிரெயின்லே செகண்ட் கிளாஸ் பர்த்தில் ராத்திரி முச்சூடும் டிராவல் பண்ணிக்கிட்டு வர்றார். அதை நினைச்சுத்தான் சிரிச்சேன்.''

''அந்தக் காலத்து ஆளுங்களுக்குத்தான் காசோட அருமை தெரியும் தம்பி. அப்படிச் சிக்கனமாச் செலவழிச்சு மீதி வச்சுட்டுப் போனாத்தானே பின்னாடி அவரோட பிள்ளை குட்டிகள் சந்தோசமா வாழும்?''

''அவருக்குப் புள்ளையாவது குட்டியாவது!'' புன்னகையுடன் தொடர்ந்தேன். ''அப்படி ஒண்ணும் இல்லாததால் தான் தன்னோட அளவற்ற ஐஸ்வர்யத்துக்கு வாரிசா என்னைத் தத்து எடுக்க வர்றாருங்க.''

''அப்படின்னா கங்கிராஜுலேஷன்ஸ் தம்பி'' என்றவாறு அவர் டிபனைச் சாப்பிட்டார்.

எனது பில் வந்தது. ஐம்பது ரூபாய்த் தாளை தட்டில் போட்டு, ''இதோ இவருக்கும் சேர்த்து எடுத்துக்க சர்வர்!'' என்று சொல்லி வந்த மிச்சத்தில் ஒரு ரூபாயை டிப்ஸாகத் தந்தேன்.

''என்ன தம்பி, வல்லிசா ஒரு ரூபாயை அவனுக்கு இனாமாகக் கொடுத்துட்டீங்க'' பதறினார் பெரியவர்.

''அப்படிக் கொடுத்தால்தான் நாளைமறு நாள் வந்தா நம்மை அந்த சர்வர் மதிப்பாருங்க'' என்று புன்னகைத்தேன்.


பெரியவர் இன்னமும் சமாதானம் ஆகாமல், ''நீங்க சொல்ற மாதிரி ஊர்லே உலகத்துலே இருக்கிறவன் கிட்ட எல்லாம் மரியாதை வாங்கணும்னு — அதுவும் துட்டு கொடுத்துத்தான் வாங்கணும்னு — நம்மகிட்டே கோடி கோடியா பணம் இருந்தாலும் போதாது தம்பி!'' என்றவாறு வெளியே வந்தார் என்னுடன்.

மனம் பூராவிலும் உற்சாகமும் சந்தோஷமும் பொங்கியதால், 'இன்றைக்கு ஒரு சிகரெட் பிடித்தால் என்ன?' என்று தோன்றவே பெட்டிக்கடைக்குச் சென்று ஒன்றை வாங்கிப் புகைத்தவாறு, ''உங்களுக்கு?'' என்று பெரியவரைப் பார்த்துச் சம்பிரதாயத்துக்காக விசாரித்தேன்.

''ஊஹூம். புகை, வெற்றிலை, இப்படி எந்தக் கெட்ட பழக்கமும் எனக்குக் கிடையாது'' அவர் வெள்ளைப் பற்கள் வரிசையாய்த் தெரியச் சிரித்தார். ''அதான் இந்த அம்பத்தஞ்சு வயசிலும் இவ்வளவு ஆரோக்கியமா இருக்கேன்.''

சட்டென்று எனக்கு அந்தப் புதுக்கவிதை ஞாபகத்துக்கு வர, அதையே பதிலாகச் சொன்னேன். ''எதையும் அனுபவிக்காமல்


வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர். பற்சிதைவை எதிர்த்திடுவீர்.



கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர் !

தவறாமல் கோல்கேட் உபயோகிப்பதால்,
உங்கள் குடும்பத்தினரின் பற்களுக்கு ஆரோக்கியம், வலிமை, புத்துணர்ச்சி
தரும் தூய சுவாசம் கிடைக்கிறது.
இதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.


நீங்கள் பல் துலக்கும் ஒவ்வொரு முறையும்
கோல்கேட்டின் நம்பகமான ஃபார்முலா
செயல்படுவது எப்படி என்றும்...



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே
சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும்,
பற்சிதைவையும் உண்டாக்கும்
பாக்டீரியாக்கள் வளருகின்றன.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும்
நுரை ஆழ ஊடுருவிச் சென்று,
துர்நாற்றத்தை ஏற்படுத்தும் உணவுத்
துணுக்குகளையும் சிதைவு ஏற்படுத்தும்
பாக்டீரியாக்களையும் அகற்றுகிறது.



முறையாக கோல்கேட் கொண்டு பல்
துலக்குவதால் புத்துணர்ச்சி தரும்
தூய சுவாசமும், வலிமை மிகுந்த
ஆரோக்கியமும் தருகிறது.

ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட உடன்,
உங்கள் குடும்பத்தினர் தவறாமல் கோல்கேட்
கொண்டு பல் துலக்கட்டும்.
வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்,
கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர்.



GK&E.B84.55 Tam

**கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்
பெப்பர்மெண்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !**

நூறு வரை வாழ்வதை விட, எல்லாவற்றையும் அனுபவித்து விட்டு ஐம்பதில் சாவதே மேல்!''

அவர் புன்னகைத்தபடி என்னைப் பின் தொடர்ந்தார்.

அவருக்கும் சேர்த்து பிளாட்பார்ம் டிக்கெட் வாங்கிக் கொண்டு நான் ஜங்ஷனுக்குள் நுழைவதற்கும், பெண் குரல் ஒன்று மைக்கில் ''திருச்சியிலிருந்து சென்னைக்கு வரும் மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் இன்னும் சில விநாடிகளில் முதல் பிளாட்பாரத்துக்கு வந்து சேரும்.'' என்று ஜலதரங்கம் வாசிப்பதற்கும் சரியாய் இருந்தது.

அப்பா சொன்னபடி மெயின்கேட் அருகே நின்று கொண்டேன்.

மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் 'தடதட' என்று உள்ளே நுழைந்து, 'கிரீச், கிரீச்' என்கிற பிரேக் பெருமூச்சுவிட்டு நின்றது. உடனே போர்ட்டர்களின் இரைச்சலும், இறங்குவோர்களின் ஆரவாரமுமாக பிளாட்பாரம் அமளிதுமளிப்படத் தொடங்கியது.

ஓரமாய் நின்ற என்னையும் பெரியவரையும் இடித்துத் தள்ளிக் கொண்டு மக்கள் வெள்ளம் மெயின்கேட் வழியே வெளியே பாய்ந்தது.

''என்னங்க தம்பி, ஒருத்தரையும் காணலே! நீங்க அழைச்சுக்கிட்டுப் போக வேண்டிய மனிதர் வரலியா?''

கேட்ட பெரியவரை ஏமாற்றத்துடன் பார்த்து, ''ஒண்ணுந் தெரியலீங்க. வேற டிரெயின்லே வர்றதா தந்தி அடிப்பாரோ என்னவோ!'' என்றேன்.

''என் மகனும் வரலே. அதனால் எனக்கும் ஏமாற்றம் தான்'' என்றார் பெரியவர்.

''அப்போ நான் வீட்டுக்குப்போறேங்க'' என்று புறப்பட்டேன்.

''ஒரு உதவி பண்ண முடியுமா தம்பி?'' என்று புன்னகைத்தவர், நான் தலையை அசைக்கவும், ''மத்தியானமா புறப்படுற வைகையில் எனக்கு ஒரு டிக்கெட் திருச்சிக்கு எடுத்துக் கொடுங்க'' என்று பணத்தையும் தனது விஸிட்டிங் கார்டையும் தந்தார்.

கௌண்டருக்குப் போய்த் தான் விஸிட்டிங் கார்டைப் பார்த்தேன்.

'அருணாசலம், நிலக்கிழார் மற்றும் தொழில் அதிபர், திருச்சி' என்று கொட்டை எழுத்தில் அச்சிடப்பட்டிருந்தது.

திடுக்கிட்டேன். 'என்னைத் தத்து எடுத்துக் கொள்ள வருவதாகக் குறிப்பிட்டிருந்த அந்த அருணாசலம் இந்தப் பெரியவர் தானா?'

நடுங்கியவாறு அவரை அணுகி டிக்கெட்டைத் தந்துவிட்டு, ''மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ்லே வர்றதா எழுதியிருந்தீங்களே ஸார்?'' என்று தட்டுத் தடுமாறிக்கேட்டேன்.

''ஆமா. ஆனா அஞ்சு நிமிஷம் லேட்டா போனதால் மலைக்கோட்டை எக்ஸ்பிரஸைத் திருச்சியில் தவற விட்டுட்டேன். அப்புறம் ஆம்னி பஸ்ஸைப் பிடிச்சு அஞ்சு மணிக்கே இங்கே எக்மோருக்கு வந்துட்டேன். டிரெயின் வர்ற நேரத்துக்கு ஜங்ஷனுக்கு உள்ளாற வந்து அங்கே மெயின் கேட்லே நிக்கிற உங்களைப் பிடிச்சுக்கலாம்னு நினைக்க ஹோட்டலுக்கு டிபன் சாப்பிட வந்தேன்.''

பெரியவர் புன்னகைத்தார். ''அப்படி வந்ததும் நல்லதாப் போச்சு. இல்லேன்னு எல்லாக் கெட்ட பழக்கங்களும் கொண்ட ஒரு ஊதாரிப் பையனைப் போய் என் வாரிசா தத்து எடுத்து ஏமாந்திருப்பேன் இல்லையா?''

எனது சர்வாங்கமும் ஒடுங்கி நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

இனி இவரிடம், யார் எதைச் சொல்லி எப்படிக் கெஞ்சினாலும் எதுவும் எடுபடாது.

எனது ஒளிமயமான எதிர்காலம்; அம்மாவின் சிகிச்சை, தங்கைகளின் கல்யாணம், 'உஷாவின்' நாட்டியப் பேரொளி' கனவு அத்தனையும் இப்போது பாழாகி விட்டது.

எதனால்?

'அவராய் இவர் இருக்க முடியாது' என்று நான் நினைத்ததனால்தான்.

மாறாக, 'ஏன் முடியாது?' என்று எனக்குள் சந்தேகப் பொறி தட்டியிருந்தால், அசந்தர்ப்பமான பேச்சுக்களைத் தவிர்த்திருப்பேன். என்றைக்கும் சிக்கனக்காரனான நான் இன்றைக்கும் சிக்கனக்காரனாக இருந்திருப்பேன். என்றைக்கோ ஒருநாள் பிடிக்கிற சிகரெட்டை இன்றைக்குப் புகைக்காமல் இருந்திருப்பேன்.

இது இந்த நிமிடத்தில் என்னைப்பொறுத்த வரையில் காலங்கடந்த ஞானோதயம்! தள்ளாடி நடக்கிறேன் வெளியே.




கடிதங்கள் காணாமற்போகும் காரணம்!

இங்கிலாந்தில் பள்ளி ஒன்றில் பணி புரிந்து கொண்டிருந்த எட்டில்மேன் என்பவர் எழுதும் கடிதங்கள் அவர் நண்பர்கள் யாருக்கும் போய்ச் சேருவதில்லை. இது அவருக்கு விசித்திரமாக இருந்தது. ஆராய்ந்தபோது வீட்டிற்கு வெளியில் இருந்த தபால் பெட்டியில் இரண்டு பறவைகள் கூடுகட்டியிருந்தது தெரிய வந்தது. கடிதத்தைப் பெட்டியில் போட்டவுடன், அவை அதை வெளியில் எடுத்துக் கொண்டு போய், அருகாமையில் இருந்த குப்பைத் தொட்டியில் போட்டுவிடுமாம்! தாங்கள் குடியிருக்கும் வீட்டில் அந்நியப் பொருள்கள் தலைநீட்டிக் கொண்டிருப்பதை அவை விரும்பவில்லை!

ஆதாரம்: ''டிட்பிட்ஸ்''
தகவல்: கந்தசாமி



எலுமிச்சை மணம் கமழும் முக சவரம்!



இப்போது! முக சவரத்தைப் புத்துணர்ச்சிகரமாக்குகிறது கோத்ரெஜ்.

எலுமிச்சை தரும் தளதளவென்ற புத்துணர்ச்சி. மென்மை மற்றும் இதம். அத்துடன் செழுமையான க்ரீம் கொண்ட நுரை. தினந்தோறும் காலையில் முகத்திற்கு ஓர் இன்பகரமான அனுபவம். ஒவ்வொரு நாளும். ஒவ்வொரு முறை சவரம் செய்யும்போதும்.



புத்தம்புது எலுமிச்சையின் நறுமணம். அத்துடன் நீங்கள் விரும்பித்தேர்ந்தெடுக்க சிஃபோம் மற்றும் மென்தால் மிண்ட்.

கோத்ரெஜ்
ஷேவிங்க்ரீம்



CLARION/GS/6/203

நான் விரும்பும் வேட்பாளர்



மாதிரவேளூர் மு. ஸி. உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர், தலைசிறந்த காங்கிரஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஜவகர் என்ற மாணவனை இப்பகுதி வேட்பாளராக உருவாக்க வேண்டும் என்று, ஆறும் வகுப்பிலிருந்து அவனை ஊக்குவித்து வருகிறார். இந்த ஊரும் இதனைச்சுற்றியுள்ள அநேக கிராமங்களும் சீர்காழி தொகுதியைச் சேர்ந்த பின் தங்கிய பகுதிகள், சாலை வசதியோ, மின் வசதியோ ஏனைய வசதிகளோ எவ்வளவோ முயன்றும் கிட்டாத ஒரு சூழ்நிலை. எனவே ஜவகர் படிக்கும் போது எல்லா வகுப்புக்களிலும் முதல் விளையாட்டுத் துறையில் முதல், மேடைப் பேச்சில் முதல், மற்றவர்களுக்கு உதவி செய்வதில் முதல், என்ற அளவில்



அவனைத் தயாரித்தார். மழைக் காலத்தில் சாலைகளுக்கு ஏற்படும் பரிதாப நிலையை ஜவகர் தலைமையில் பல மாணவர்களை வைத்துச் செப்பனிடுவார்.

சாரணப் பயிற்சி பெற்ற ஜவஹர் அக்கம்பக்க கிராமங்களில் உள்ள கோயில் குளங்களைச் சுத்தம் செய்யவும் தூர் எடுக்கவும் எல்லோருக்கும் பணி செய்யவும் இளம் வயதிலேயே பழகி விட்டான். அவன் பள்ளி இறுதி ஆண்டு முடிக்கும் போது மாவட்ட அளவில் சிறந்த பேச்சாளனாகவும், சிறந்த சேவை மனப்பான்மை கொண்டதற்காக மயிலாடுதுறை கழகச்சங்க சிறப்புப் பரிசு பெற்றவனாகவும் விளங்கினான். ஆண்டுதோறும் இலக்கியமன்ற விழாவில் "நான் இப்பகுதி வேட்பாளர் ஆனால்" என்ற தலைப்பில் பேசுவான். இவ்வாறு இளம் உள்ளத்தில் நாடு செழிக்க உழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தை வளர்த்தார் தலைமை ஆசிரியர்.

பள்ளி இறுதி ஆண்டில் பள்ளி முதல் மாணவனாகத் தேர்வு பெற்றதும் மேல்படிப்பிற்குத் தலைமை ஆசிரியரே முயற்சி எடுத்துக் கொண்டார். இப்போது வழக்கறிஞராகப் பயிற்சி பெறும் ஜவஹர் இப்பகுதி வேட்பாளர் ஆனால் அவனை ஊக்குவித்த தலைமை ஆசிரியர் கனவு பூர்த்தி ஆகும்.

அவன் இப்பகுதியில் சாலை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளிடம் வழியாக அணைக்கரைக்குப் பேருந்து வசதியைச் செய்து கொடுப்பான். நூற்றுக்கணக்கான கிராமங்கள் இதனால் பயன் பெறும், ஒவ்வொரு ஊரிலும் மேல்நிலை தொட்டி கட்டி மக்களுக்கு நல்ல தண்ணீர் கொடுப்பான். மின்சாரம் சீராக, சரியாகக் கிராமந்தோறும் விநியோகிக்கப்பட ஏற்பாடு செய்வான். இரண்டு கிராமங்களுக்கு மையமான இடத்தில் மருத்துவமனையையும், தாய், சேய்நல விடுதியையும் திறக்கவும் நல்ல முறையில் பராமரிக்கவும் உழைப்பான். கால்நடை மருத்தகம் அருகில் உள்ள ஊரில் வைக்கவும் முயற்சிகளை மேற்கொள்வான்.


கிராம கூட்டுறவு சங்கம் சிறந்த முறையில் இயங்கவும், அமுதம் அங்காடி சிறந்த முறையில் பணிபுரியவும், கிராம நல ஊழியர்கள் தங்கள் பணிகளைச் சிறந்த முறையில் ஆற்றிடவும் இன்னும் பலவிதங்களிலும் செயல்படுவான்.

ஜவகர் இப்பகுதி வேட்பாளராக ஆக்கப்பட்டால் அவனுடைய இளம் உடலும், உள்ளமும் இப்பகுதி மேம்பட சலியாமல் உழைக்கும் என்பது திண்ணம்

மாதிரவேளூர். ச. சாண்டில்யன்.

நான் விரும்பும் வேட்பாளர்

அண்ணன் போல் பழகும் அமைச்சர்



இதுவரை பொரிகக்காக ஒரு எம்.எல். ஏவைக் கூட அணுகியதில்லை. மந்திரிசபை அணுக நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. வேலை மாற்றம் தொடர்பாக நான் முயற்சி எடுத்துக் கொண்டேன். என் சொந்த ஊர் அறந்தாங்கி. ''அமைச்சர் திருநாவுக்கரசு இருக்கும்போது ஏன் கவலைப்படுறீங்க?'' — அனைவரும் சொன்ன ஆறுதல் இதுதான். நான் வேறு வேலையாகச் சென்னை சென்ற போது, திடீரென்று ஏற்பட்ட ஒரு உந்துதலில் ஆழ்வார்பேட்டையில் அமைச்சரின் வீட்டுக்குச் சென்றேன்.

கெடுபிடி, பந்தா, ஊஹூம்.. சொந்தக்காரர் ஒருவரைப் பார்க்கப் போவது போன்ற உணர்வை, அவர் வீட்டின் வரவேற்பிலேயே உணர்ந்து விட்டேன்.

நான் தி.மு.க.வின் மீதும், கலைஞர் மீதும் அபிமானம் கொண்டவன். அமைச்சர் திருநாவுக்கரசை நான் அதுவரை சந்திக்க முயலாததற்கு அதுவும் ஒரு காரணம்.

என் முறை வந்தது. குறையினைக் கேட்டார். சட்டச் சிக்கல்கள் இல்லை என்பதில் தெளிவு ஏற்பட்டதும் எனக்கு உறுதியளித்தார். என் கண் முன்னாலேயே அதற்கான முயற்சிகள் நடந்தன. நியாயமான கோரிக்கை என்பதால், உடனே அவர் செய்த முயற்சிகள் பயனளித்தது.

இதேபோன்று எங்கள் தொகுதி அறந்தாங்கியில் அமைச்சர் மூலம் பயனடைந்தோர் எத்தனையோ பேர். வரைமுறையை மீறாமல் சட்டத்தின் எல்லைகளைத்தொடாமல் முடியும் என்றால் அதை முடித்தே காண்பிப்பார். எங்கள் குடும்பத்தில் ஒருவராக நாங்கள் அனைவருமே கருதக் கூடியவர் அமைச்சர் திருநாவுக்கரசு ஒருவரே. நான் தி.மு.க.வைச் சேர்ந்தவன் என்றாலும், என் தந்தை காங்கிரஸைச் சேர்ந்தவர் என்றாலும், என் அண்ணன் ஜனதாவை ஆதரிப்பவர் என்றாலும், என் தம்பி கம்யூனிஸச் சிந்தனை உள்ளவன் என்றாலும், நாங்கள் அனைவரும் போடுவோம் வோட்டு அண்ணன் திருநாவுக்கரசு அவர்களுக்கே!

புதுக்கோட்டை ஸ்பின்னிங் மில்ஸ், பாலிதீன் இண்டஸ்ட்ரீ, பாலிடெக்னிக் கல்லூரி, புதிய பல சாலைகள், கிட்டத்தட்ட அனைத்து கிராமங்களுக்கும் பஸ் வசதி, அறந்தாங்கி முஸ்லிம் தெருவில் நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாமலிருந்த கழிவுநீர் வடிகால் வசதி அனைத்தும் அவர் முயன்று முன்நின்று நடத்தி வைத்தவையே. இது போன்ற நற்பணிகள் நிச்சயம் தொடரும் என்பதே என் கருத்து.

தஞ்சாவூர். ரஜித்.




அமெரிக்காவிலிருந்து புதிதாகத் தமிழ் மாத இதழ் ஒன்று வெளியிடப்படுகிறது!

குமரி மாவட்டம் பள்ளியாடியைச் சார்ந்தவர் எம். எம். ராஜ். இவர் அமெரிக்காவில் அச்சகம் ஒன்று நடத்தி வருகிறார். மலையாள மாத இதழ் கடந்த 5 ஆண்டு காலமாக நடத்தப்பட்டு வந்தும் தமிழ் இதழ்தொடங்கப் படவில்லையே.. என ஏங்கி, அமெரிக்கா வாழ் தமிழர்களுக்காக 'குமரி' என்ற மாத இதழைத் தொடங்கியுள்ளார் எம். எம். ராஜ்.

—கருங்கல் ஆர். ஜார்ஜ்.





பிழைத்தது குழந்தை

தூளியில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை எடுக்கப் போனவளுக்குத் தூளியைத் தொட்டதும் ஒரு கடுமையான அதிர்ச்சி ஏற்பட்டது. ஒன்றும் புரியாமல் அலறினேன். அருகில் இருந்த என் மாமியார் உடனே மெயின் சுவிட்சை அணைத்துவிட்டுக் குழந்தையை எடுத்தார். உத்திரத்தில் சென்ற மின்சார ஒயரின் 'இன்ஸுலேஷன்' பாழாகி சின்னாளம்பட்டுப் புடவையின் ஜரிகை வழியே மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்ததை அன்று அவர் உணர்ந்து செயற்படாமலிருந்திருந்தால் விதி விளையாடியிருக்கும்.

கே. ராதா, கும்பகோணம்

சரியாகிப் போன சந்தேகம்

மிக மிக மலிவு விலையில் ஒரு மூட்டை அரிசியை வாங்கிக் கொள்ளுமாறு வற்புறுத்தினாள் அவள். 20 படிதான் இருக்கும் என்று கணித்து அளந்தால் 50, 60 என்று அளக்க அளக்க வளர்ந்து கொண்டே போயிற்று. மேலும் ஒரு பெண் அநாயாசமாக ஒரு மூட்டை அரிசியைத் தூக்கிக் கொண்டு வருவது சாத்தியமில்லை என்றும் உணர்ந்தேன். அவளிடம் அரிசி வாங்க மறுத்து விட்டேன். அன்றே அந்த அரிசியை வாங்கி என் சினேகிதி ஏமாந்தது பின்னர் தெரிந்தது.

எஸ். ராஜி, திருச்சி-10

மனசைக் கல்லாக்கி....

என் குழந்தை பிறக்கும்போதே வலது கால் பாதம் சற்றுத் திரும்பியிருந்தது. பிறந்த 30-ஆம் நாள் பாதம்முதல் முழங்கால் வரை பிளாஸ்திரியால் சுற்றிக் கட்ட வேண்டிய நிலை. அப்போதுதான் கால் சரியாகும் என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டனர். குழந்தை வலி தாளாமல் துடித்ததைக் கண்ட பல பெரியவர்கள் ஊனத்துடன் பிறந்தது அதன் விதி என்றும், பிளாஸ்திரியைப் பிரித்து விட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். அன்று அவர்கள் சொன்னபடி செய்திருந்தால் இன்று என் குழந்தை அழகாக நடப்பதை நான் பார்த்திருக்கவே முடியாது.

த. சத்யா, திருபாதிரிப்புலியூர்.

நிறைமதியாளர்

நாங்கள் அன்றாடம் விதியை மதியால் வென்று கொண்டிருக்கிறோம் சார். எப்படியென்று கேட்கறீங்களா? ரேடியோ, டி.வி. இரண்டிலும் தமிழ் நாடகம் என்று அறிவித்ததுமே ஓடிப்போய் 'சபக்'குன்னு ஆஃப் பண்ணிடுவோம்.

திருமதி கமலா, சேலம்-16

மழலைகள் பணியில் மகிழ்ச்சி

19 வயதில் திருமணமாகி அடுத்தடுத்து இரண்டு குழந்தைகள் பிறந்து விட்டதால்



நல்ல வேலையை விட வேண்டியதாயிற்று. மனந்தளராமல் வீட்டிலேயே ஒரு குழந்தைகள் காப்பகம் திறந்து ஒரு பெண்ணை உதவிக்கு வைத்துக் கொண்டு என் குழந்தைகளுடன் ஊரார் குழந்தைகளையும் ஊட்டி வளர்க்கிறேன்.

சசி, சென்னை-35

மயிரிழையில் தப்பியவர்

ஒரு பஸ் டெர்மினலில் கிளம்பிவிட்ட பஸ்ஸில் தாவி ஏறிய பையன், தவறி முன், பின் சக்கரங்களுக்கிடையே விழுந்து விட்டான். சுற்றி நின்றவர்கள் பேயறைந்தாற்போல் நின்றிருக்க ஒருவர் மட்டும் 'சடா'ரென்று பையனின் தலையைப் பிடித்து வெளியே இழுத்து விட்டார். இன்று நினைத்தாலும் உடல் சிலிர்க்கிறது.

எம் சம்பூர்ணம், பெங்களூர்-10

வாசகர் பங்கு

தன் கையே தனக்குதவி

ஆழமும், இடிபாடும் உள்ள அந்தக் கிணற்றுக்குள் விழுந்த போது அதிர்ஷ்டவசமாக என் கைகள் தாம்புக் கயிற்றைப் பற்றிக் கொண்டிருந்தன. கயிற்றின் மறுமுனை ஒரு தூணில் கட்டப்பட்டிருந்தது. உடலில் ஊமைக் காயம், கைகளில் தோல் வழன்று போய் ரத்தம் கசியும் நிலையிலும் கயிற்றை விடாமல் பிடித்துக் கொண்டு தலையை ஒரு பக்கச் சுவரிலும் காலை மறு பக்கச் சுவரிலும் ஊன்றிக் கொண்டு மேலே ஏறித் தப்பினேன்.

எஸ். செல்லம், கீழ்கரை, தஞ்சாவூர்

கை கொடுத்த பொது அறிவு

அது ஒரு சனிக்கிழமை மாலை. பள்ளியில் புத்தகப் பையை மறந்து விட்டுவிட்டு வந்த தம்பி அதை எடுத்து வரச் சென்றான். அவன் உள்ளே போனது தெரியாமல் கதவுகளை இழுத்துப் பூட்டிவிட்டுப் போய் விட்டார் வாட்ச்மேன். எவ்வளவு கத்தியும் பயனில்லாது போகவே பள்ளியின் வெளிப் பக்கத்தில் இருந்த மின்சார விளக்கின் சுவிட்சைப்போட்டுப்போட்டு அணைக்க ஆரம்பித்தான் தம்பி. எஸ். ஓ. எஸ். செய்கை முறையில் மூன்று முறை வேகமாகவும்,



மூன்று முறை மெதுவாகவும் அணைந்து எரியும் விளக்கைப் பார்த்த வழிப்போக்கர் ஒருவர் வாட்ச்மேனைத் தேடிப் பிடித்துத் தம்பியை விடுவித்தார்.

திருமதி ராஜி, சென்னை-4

அடித்துச் சொன்னதால் தவிர்க்கப் பட்ட ஆபத்து

பம்பாய்க்கு வேலை மாற்றிக் கொண்டு கிளம்பியவர் ஸ்டேஷனுக்குப் போனதும் தான் தெரிந்தது, வண்டி இரண்டு மணி நேரம் தாமதமாகப் புறப்படும் என்று. வண்டி புறப்பட ஒரு மணி நேரம் இருக்கும் சமயம் அவர் வயிற்று வலியால் துடிக்கவும் உடன் இருந்தவர்கள் சோடாவைச் சிபாரிசு செய்தார்கள். ஆனால் என் மைத்துனர் மட்டும் ஒரு மணி நேரத்துக்குள் டாக்டரைப் பார்த்து விட்டுத் திரும்பலாம் என்று வற்புறுத்தவே அருகிலிருந்த டாக்டரிடம் சென்ற போது அவர் உடனே எமர்ஜென்ஸி ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டார்.

லட்சுமி நடராஜன், திருப்பூர்-1

நெஞ்சினில் உறுதி வேண்டும்

ஒன்றரை வயதில் இளம் பிள்ளை வாதம் ஏற்பட்டு சிறிது தூரம் நடக்கவே கஷ்டப் பட்டேன். பி. யூ. சி. பரீட்சைக்குப் பிறகு விடாப்பிடியாகப் பல விழுப்புண்களையும் பொருட்படுத்தாமல் சைக்கிள் விட சற்றுக் கொண்டேன். இன்று தேசிய வங்கியில் வேலை செய்யும் நான் மோபெட்டில் தான் அலுவலகம் சென்று வருகிறேன்.

எஸ். பி. சக்திவேல், சேலம்-4

சமயோசிதம்

மேட்டூரில் ஒரு தொழிற்சாலையின் சில ஆட்கள் நிர்வாகத்தைச் சேர்ந்த எங்கள் குடும்பத்தினரைக் கொலை செய்யும் திட்டத்தோடு நள்ளிரவில் வீட்டுக் கதவுகளை உடைத்தனர். அடுத்த வீட்டு ஆபீஸரின் மகன் சமயோசிதமாய் ஷிஃப்டு முடியும் போது ஒலிக்கும் சங்கை ஒலித்ததும் நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் வெளியே வர, பயந்து ஓட்டம் பிடித்தனர் காலிகள்.

ஆர். ஹேமலதா, சென்னை-41

புதை குழியிலிருந்து தப்பியவர்

ஒரு மழை நாளில் வேலை முடிந்து குறுக்கு வழியே திரும்பிக் கொண்டிருந்த





போது புதை சேற்றில் விழுந்து விட்டேன். முழங்கால் வரை புதைந்து போனாலும் கையிலிருந்த டைரியை விட்டெறிந்தேன். அது விழுந்த இடம் கடினமாக இருந்ததை உணர்ந்தேன். நல்ல காலமாகக் கைக்கு எட்டிய தூரத்திலே விழுந்திருந்த அந்த டைரியின் மேல் கைகளை ஊன்றிக்கொண்டு, மெல்ல மெல்லச் சேற்றிலிருந்து விடுபட்டு வந்தேன்.

வி. பி. சங்கரன், கோவை-9

ஓவியம் கலைந்தது, உயிர் பிழைத்தது

மொட்டை மாடியில் தண்ணீர் தொட்டியின் மேல் அமர்ந்து ஓவியம் தீட்டிக் கொண்டிருந்தேன். கண்காட்சியில் வைப்பதற்காக வரைந்து கொண்டிருந்ததைத் தூரத்திலிருந்து பார்ப்பதற்காகப் பின்னோக்கி நடந்து கொண்டே இருந்தேன். அப்போது எனக்கு காபி எடுத்து வந்த என் தோழி நான் மதில் சுவரின் ஓரத்தை எட்டிவிட்டதைக் கண்டு திகைத்து, வேண்டுமென்றே காபியை படத்தின் மேல் கொட்டி விட்டாள். உடனே நான் பதறிப்போய் முன்னோக்கி ஓடிவரவும் அவள் தன் செயலை விளக்கி என்னைச் சாந்தப்படுத்தினாள்.

ஜே. லதா, பம்பாய்-71

மிரண்டனர் திருடர்

ஒருமுறை கணவர் வெளியூர் போயிருந்த போது இரவு குழந்தைகளுடன் நான் மட்டும் தனித்திருந்தேன். திருடர்கள் வந்து கதவிடித்தார்கள். உடனே நான் 'திருடன் திருடன்' என்று கூவி வீட்டில் இல்லாத ஆண்களின் பெயர்களையெல்லாம் கூப்பிட்டேன். குரலை மாற்றிக் கொண்டு பல மொழிகளில் பேசினேன். திருடர்கள் பயந்து ஓடி விட்டார்கள்.

வத்சலா ரமணன், அவுரங்கபாத்

ரசுபாரிகா வழங்கும் பட்டுப்புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

எஸ். செல்லம்
5A/2098,
ஐயங்குளம், கீழக்கரை,
தஞ்சாவூர்-613 009.

அருள்வாக்கு



ரதோத்ஸவத்தை விட்டுவிட்டு, ஸோஷல் ஸர்விஸுக்கு வரவேண்டும் என்று சொல்வது தப்பு. நமக்கு இரண்டும் வேண்டும். இப்போதெல்லாம் தெய்வ காரியத்தை விட்டுவிட்டு ஸமூக சேவையைச் செய்ய வேண்டும் என்பவர்கள் திருமூலர் திருமந்திரத்தை மேற்கோள் காட்டுகிறார்கள்:

நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக்கோயில்பகவற்கதாமே.


என்ற திருமந்திரத்தை quote செய்கிறார்கள்.

'மக்களுக்குச் செய்கிறதான தர்மங்கள் பகவானுக்குப் பண்ணுகிற பூஜையாகும்' என்று இதற்கு அர்த்தம். ஸ்ரீமத் பாகவதத்திலும் பகவான், லோகத்தையெல்லாம் பகவத் ஸ்வரூபமாகப் பார்த்து ஸேவை செய்வதும் பூஜைதான் என்கிறார்.

இப்படிச் சொன்னதால் பூஜை கூடாது, உத்ஸவம் கூடாது என்று அர்த்தமில்லை. பரோபகாரம் பண்ணி ஜனங்களுக்குச் சாப்பாடும், துணியும் மற்ற சௌகரியங்களும் கிடைக்கிற மாதிரி செய்து விட்டு, அவர்கள் தின்று தின்று என்றைக்கோ ஒருநாள் பரமார்த்த ஸத்யத்தைத் தெரிந்து கொள்ளாமலே சாகிற மாதிரி விட்டு விட்டால் என்ன பிரயோஜனம்? திருமூலரோ, கிருஷ்ணரோ இப்படி விட்டுவிட வேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறவர்கள் அல்ல. சாச்வத பிரயோஜனம் பகவானைக் காட்டிக் கொடுப்பது தான். இந்த சரீரம் உள்ள போதே அவனைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்த உடம்புக்குச் சோறு போட்டு, இதற்கு வியாதி வந்தால் சிகித்ஸை பண்ணி, அறிவை வளர்க்கும்படியான கல்வியைத் தந்து உபகாரம் பண்ணுவதெல்லாம். ஆலய தரிசனம், உத்ஸவாதிகள் முதலியவற்றை நன்றாக அனுபவித்துப்பயன் அடைவதற்குத்தான் மற்ற ஸோஷல் ஸர்விஸ் எல்லாமே. மக்கள் பணியெல்லாம் அந்த மக்களைப் பகவானிடம் சேர்ப்பதற்குத்தான். அதனால் எல்லோருமாகச் சேர்ந்து ஆலயத் திருப்பணி செய்தால், மெய் வருந்தி, ஒரு கோயிலுக்கு மதில் கட்டினால், அதுதான் ஜனங்களுக்கான மஹா பெரிய தரம தானம்.

- ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய ஸ்வாமிகள்

Prompt after-sales service —cuts down-tool time.



In the field for decades, Wolf has the age, the experience, and the understanding of power tool users' needs. We know that your industrial development and growing production needs call for more efficient servicing of your power tools. Our nationwide service network is organised to provide preventive, regular and breakdown maintenance services within easy reach—and to render them promptly.

Wolf
Electric Tools

Manufactured by Rallwolf Limited.
Marketed by Rallis India Limited.
Bombay • Calcutta • Delhi • Madras

Creative Unit 4579

அம்மாவின் நிழல்

கிரீன்கேட்டில் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பொழுதில்கூட ரகுவைப் புறக்கணித்து விட்டு ஓடிவிடலாமா என்று தான் மனத்தில் அலையடித்துக் கொண்டிருந்தது.

எவ்வளவு நேரம் பேசியாகி விட்டது. எவ்வளவு நேரத்தை வீணாக்கியாகிவிட்டது. ரகு தன் பிடிவாதத்தை விட்டபாடில்லை.

இரண்டரை மணிக்கு ஃபோன் வந்தது.

''ஹலோ... நான் ரகு பேசறேன். நேத்து ஒரு ஆர். டி. மெச்சூர் ஆனது. ஆயிரத்தி இநூறு வரைக்கும் திமர்னு தர்றான் பாங்கிலே. இதைக் கொண்டாட வேண்டாமா? இன்னிக்கு மன்மதன்ஸ்லை கொண்டாடிடுவோம்! ஓ. கே.! உன்னை 5 மணிக்கு ஆபீஸ்ல மீட் பண்றேன்...''

''நோ... நோ.. வேண்டாம் ரகு! இன்னிக்கு நான் ஊருக்குப் போகணும். அம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னு தங்கை கடிதாசு போட்டிருக்கா...''

''அதெல்லாம் போகலாம். பார்ட்டி முடிஞ்ச உடனே பஸ் ஏறிடலாம். என் சந்தோஷத்துக்குத் தடை சொல்லாதே... ஓ. கே...''

மனிதர்களுக்குப் பயந்து பயந்து ஒவ்வொரு முறையும் அலைகள் கடலுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. வேலை முடித்து கூலியாட்கள் உடம்பெல்லாம் சிமெண்டும், கரியுமாய், மனமெல்லாம் உற்சாகமும், சிரிப்புமாய் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள் —அவர்களும் எங்களோடு டவுனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். துறைமுகத்தைப் பார்க்க வந்த சில குடும்பங்கள் ஆங்காங்கே!

''ராஜன் என்ன யோசனை. அடுத்த கதைக்குக் கரு கிடைச்சுடுத்தா...'' ரகு கேட்டான்.

''இல்லப்பா...கொஞ்ச நேரம் அம்மாவை பத்தி நெனச்சேன். இன்னமும் ஆசையாசத் தான் இருக்கு. 7.15 டவுன்பஸ் கிளம்பிடலாமா. திங்கள் கிழமை பார்ட்டி வைச்சுக்கலாமே...''

''நோ. நான் எதையாவது நெனைச்சேன்னு அதை அன்னிக்கே முடிச்சுடணும்.''

பிறகு இவனிடம் பேசுவதில் பிரயோசனம் இல்லை என்று பட்டது. குடிக்கவேண்டும் என்ற நினைப்பு வந்த உடனேயே இவர்கள் குடிகாரர்களாகி விடுகிறார்கள்.

கால் மணி நேரம் காத்துக் கொண்டிருந்ததில் மனசுக்குள் எரிச்சல் மெல்ல எட்டிப் பார்த்தது. — ரகு நீ யார்? இந்த ஊருக்கு வேலை கிடைத்து வந்த பிறகு ஒரே அறையில் இருக்கிறோமே கடந்த மூன்று வருஷங்களாக. இதைத் தவிர நமக்குள் என்ன உறவு? சின்ன வயதிலிருந்தே ஹாஸ்டலிலும், ஊரிலும் வீட்டு நினைப்பே இல்லாமல் சுற்றிக் கொண்டிருக்கிற உனக்கு — நிழலாய் இருந்து, அன்பாய் வளர்த்து ஆளாக்கிய என் அம்மாவைப் பற்றி எவ்வளவு தூரம் — புரிந்து கொள்ள முடியும்?

''ராஜன்... லாரில போனா என்ன...?''

''போகலாம்தான் நல்ல யோசனை...!''

வெளியே வருகிற ஒவ்வொரு லாரியாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். க்ரீன்கேட், சி. எஸ். எஃப் இடம் கேட்பாஸைக் காட்டி விட்டுத் தொத்தித் தொத்தி ஏறுகிற க்ளீனரிடம் டவுனுக்கு லாரி போகிறதா என்று நாலைந்து தடவை விசாரித்தாகி விட்டது.

''முத்தையாபுரம்.''

''தெர்மல்.''

கடைசியில் ஒரு லாரியில் இரண்டுபேருக்கும் இடம் கிடைத்தது.

அப்பாவுக்குத் திருச்சியிலிருந்து மதுரைக்கு டிரான்ஸ்பர் ஆன போது மற்றவர்கள் எல்லோரும் பஸ்ஸில் போக, எனக்கு மட்டும் சாமான்கள் சகிதம் லாரியில் பிரயாணம்.

அம்மா லாரியில் ஆபத்து அதிகம் என்று சொன்ன போது நான் பிடிவாதமாக மறுத்து விட்டேன். போய்ச் சேர்ந்ததும் அம்மாவைப் பார்த்துச் சிரித்தேன்.

''நீ நல்லபடியா வரணும்னு மஞ்சத் துணில ஒரு ரூபாயைக் கட்டி வச்சிருந்தேன்'' என்று எடுத்துக் காட்டிய போது குப்பென்று கண்ணில் நீர் முட்டியது.

''அண்ணா... அம்மாவுக்குப் பழையபடி நெஞ்சு வலி வந்திருக்கு. அப்பாவும் நானும் கட்டாயப்படுத்தி டாக்டர் கிட்ட கூட்டிண்டு போனோம். மருந்து, மாத்திரை எல்லாம் தந்து தைரியப்படுத்தியிருக்கார். எதுக்கும் ஒரு தடவை நீ வந்து பார்த்தால் நல்லது. உன்னைப்பார்த்தாலே அம்மாவுக்குத் தெம்பாயிருக்கும்...''

அம்மாவை ஒரு தடவை ஹார்பருக்குக் கூட்டிக் கொண்டு வர வேண்டும். வரிசையாக நிற்கிற கப்பல்களையும், ஒட்டகச் சிவிங்கி மாதிரி கழுத்தைத் திருப்பி மூட்டைகளை இறக்கி ஏற்றுகிற க்ரேன்களையும் பார்த்துப் பார்த்து மாய்ந்து போவாள்.

பீச் ரோடின் கடைசியில் நிறுத்திவிட்டு, ''இறங்கிக் கொள்ளுங்கள்'' என்றான் டிரைவர்.

தலைக்கு ஒரு ரூபாய் வீதம் இரண்டை அவனிடம் கொடுத்தான் ரகு.

''சரிங்க...'' என்றான். லாரி கிளம்பியது.

"எங்கே போவோம். மன்மதன்ஸ் ஆர் சொர்க்கம்..."

"எங்கே வேணும்னாலும் ரகு."


"சரி..."

ரகுவிற்கு அடிக்கடி பார்ட்டி இருக்கும். பேங்கில் புதிதாக ஒருத்தர் வந்தாலோ, மாற்றலாகிப் போனாலோ, கல்யாணமானாலோ, வீடு கட்டினாலோ, இதெல்லாம் போக ஒவ்வொரு மாசமும் ஒவ்வொருத்தராக டர்ன் போட்டு பார்ட்டி இருக்கும்.

பாதி நாள் இரவு ரகு மெஸ்ஸிற்கு வர மாட்டான்.

எப்பொழுதாவது கம்பெனி கிடைக்கவில்லை என்று என்னைக் கட்டாயப் படுத்தி இழுத்துப் போவான்.

என் ரூமிற்கு வந்து பழகிய கொஞ்சநாள் கழித்து அவன் என்னை முதல் தடவையாக பார்ட்டிக்குக் கூப்பிட்ட பொழுது நான் குடிக்க மாட்டேன், பழக்கமில்லை என்று சொன்னது அவனைப் பிரமிக்க வைத்தது.





கண் ஒளி பெற வழி காட்டிடுவீர்!
நேத்ரகல்யாண்
சூப்பர் பம்பர்
சந்த் பரமானந்த் பிளைண்ட் ரிலீ:ப் மிஷன்
உதவி நிதிக்காக!
WIN Rs 7.40 CRORES
60 முதல் பரிசு ரூ 5 லட்சம் வீதம்
குலுக்கல் கடைசி 5 எண்களில்
120 இரண்டாவது பரிசு ரூ 1 லட்சம் வீதம்
குலுக்கல் கடைசி 5 எண்களில்
600 மூன்றாவது பரிசு ரூ. 10,000 வீதம்
குலுக்கல் கடைசி 4 எண்களில்
6,000 4வது பரிசுகள்
ரூ. 500/- வீதம்
(குலுக்கல் கடைசி 3 எண்களில்)
60,000 5வது பரிசுகள்
ரூ. 50/- வீதம்
(குலுக்கல் கடைசி 2 எண்களில்)
6 லட்சம் 6வது பரிசுகள்
ரூ. 20/- வீதம்
(குலுக்கல் கடைசி எண்ணில்)
மொத்த விற்பனையாளர்கள் :
ஜாஸ்மின் & கோ.
புது தில்லி-110 001.
ஆர்கனைஸிங் ஏஜெண்ட் :
15, ஹோட்டல் கான்டினென்டல் அனெக்ஸ்
கன்னாட் பிளேஸ், புது தில்லி-110 001
தொலைபேசி : 310374, 311208
6 வரிசைகள் டிக்கட் ரூ. 20/- மட்டுமே
60% பரிசாக வழங்கப்படுகிறது
குலுக்கல் நாள் 22-11-84
சூப்பர் ஸ்டாக்கிஸ்ட்: ஸ்ரீயா லாட்டரி ஏஜென்ஸிஸ், 160, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-600 005. பாண்டிச்சேரி ஸ்டாக்கிஸ்ட்: M/s D. R. ராஜசேகர்,
பெங்களூர் ஸ்டாக்கிஸ்ட்கள்: M/s மஹாலட்சுமி ஹால், M/s விஷ்ணு ஏஜென்ஸிஸ்,
M/s வாசுதேவ் ராஜ்னி, M/s பாலாஜி ஏஜென்ஸிஸ்,
M/s சுகால் லாட்டரி ஏஜென்ஸிஸ்.

''ஆச்சர்யமாயிருக்கே மிஸ்டர் ராஜன். காலேஜில படிச்சிருக்கீங்க. ஒரு வருஷமா நல்ல சம்பளத்தில வேலை பார்க்கறீங்க. ஒரு ஜாயினிங் பார்ட்டி, மேரேஜ் பார்ட்டி. எதுவுமா நடக்கலே...?''

''நடந்தது... நான் போகலே...''

''ஓ. யு ஹாவ் மிஸ்டு ஸம்திங். வாங்க நான் அந்தக் கணக்கை ஆரம்பிச்சு வைக்க றேன். நீங்க கொஞ்சம் குடிச்சுப் பார்த்து இதுல ஒண்ணும் இல்லேன்னு தெரிஞ்சுக் கணும்.''

என்ன முட்டாள்தனமான வாதம்!

''ரகு இது எனக்கு உடன்பாடான செயல் இல்லே.''

''முதலில் எல்லோருக்கும் அப்படித்தான் இருக்கும். கமான் லெட் அஸ் என்ஜாய்.''

அம்மா!

கிளாஸை எடுத்து முகத்தின் பக்கத்தில் கொண்டு போன போது முதலில் அம்மா வின் முகம் தான் ஞாபகம் வந்தது.

வியாழக்கிழமைகளில் திருஷ்டி சுற்றிப் போட்டு, பரீட்சை நேரங்களில் டீ போட்டுக் கொடுத்து நான் விழித்துப் படித்துக் கொண்டிருக்கிறவரை உறங்காத அம்மா!

ரூப் கார்டன் என்ற பெயரில் பணம் விளையாடி இருக்கிறது.

நிலவுக்குப் பக்கத்தில் இருப்பது போல் ஒரு பிரமை.

ரகுவைப் பார்த்ததும் வழக்கமான ஸ்நேகப் புன்னகையுடன் தயாரானான் சர்வர்.

கொதுவில் இருந்து ஒரு கல்யாணி பீரை யும் ஒரு மேக்டொவல் பாட்டிலையும் எடுத்து வந்து மேஜை மேல் வைத்தான். பக்கத்தில் ஓபனர்.

பிறகு தொட்டுக் கொள்ள காராபூந்தி! கொஞ்ச நேரம் கழித்து பீஸ் மசாலா. பணம்!

''ராஜன்... ஐ திங்க் யூ ஆர் நாட் வரியர். சாப்பிடுங்க. சியர்ஸ். வழக்கமான உங்க ஜோக்ஸ் எதையும், காணலே. கவலைப்படாதீங்க. அம்மாவுக்கு ஒண்ணும் ஆகியிருக்காது!''

அவன் கடைசியாகச் சொன்னது மனசுக் குள் பூவைக் கொட்டியது.

தாங்க்ஸ் ரகு!

கோப்பை காலியானது.

''ராஜன். எங்க மேனேஜரை நீ பார்த் திருக்கே இல்லே. அவனுக்கும் எங்க ஆபீஸ் ஸ்லீப்பருக்கும் ஏதோ இருக்குன்னு நான் நெனைக்கிறேன். என்னன்னு இவனும் எட்ட ரைக்கே வந்துடறான். அவளும் இவன்கிட்ட ரொம்ப உரிமையோடப் பழகறா. இதுல ஏதோ இருக்கு...''

''எதுவும் இல்லே ரகு. பணம். பச்சையா சொல்லப் போனா பணம் தான் எல்லாக் கேடுகளுக்கும் காரணம். இவனுக்கு அது இருக்குங்கற தைரியம். அவளுக்கு அது வேணுங்கற ஆத்திரம். ஸோ, இந்த இரண் டும் சந்திக்கறது இயல்பானது. இது எப்படித் தப்பாகும்?''

''யூ ஆர் ரைட்'' அடுத்த கோப்பை காலி

பலனளித்த பிரார்த்தனை



போட்டி 28

உங்கள் உருக்கமான பிரார்த்த னைக்குக் கடவுள் செவிசாய்த்து உதவிய துண்டா? ரசமான அனுபவங்களை இதர கல்கி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். பிரசுரமானால் பரிசு உண்டு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப் புடவை. இடமே வெற்றிடத்தில் மட்டுமே எழுதவேண் டும். இந்த அரைப்பக்கத்தைக் கத்த ரித்து உறையின் மேல் ''பலனளித்த பிரார்த்தனை'' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

முடிவு தேதி: 26.11.84.

இன்னும் 25 பட்டுப் புடவைகளே பாக்கி. அதில் ஒன்று நிச்சயமாக நமக்கே என்ற ஆர்வத்துடன் வாரம் தவறாமல் போட்டிகளில் பங்குபெறுங்கள்.

என் பெயர்: ....

விலாசம் : ....

....

பட்டுப் புடவை பரிசுத் திட்டம்



வைட்டமின்கள்

தெம்பும்
உடல்
ஆரோக்கியமும்
பெற
சில துளிகளே
தேவை



அம்மா உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கையில் நான் இங்கே சிநேகிதனுக்காகக் கோப்பையுடன் தள்ளாடிக் கொண்டிருக்கிறேன்.

இது எந்த வகை நியாயம்?

கிளம்ப வேண்டியதுதான்—

கேட்டால் சண்டை போட வேண்டியது தான்—

இந்த நட்பை விட அம்மா முக்கியம்—

நாளைக்கு இவனிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ளலாம்.

''ரகு நான் வர்றேன்...''

''இரு. இன்னும் ஒரே ஒரு ரவுண்ட். அப்புறம் சார்லஸ்ல படம் பார்க்கலாம். நாளைக்கு ஊருக்குப் போ. உன்மேல உங்க அம்மாவுக்கு உண்மையான பாசம் இருந்தா இன்னு உன்னைப் பார்க்காம சாக மாட்டான்.''

''ரகு!'' அவன் வார்த்தைகள் தீயாய்ச் சுட்டன.

இவ்வளவு நேரம் மனசுக்குள் பயமாய் இருந்த ஒரு எண்ணம் — ஒரு குடிகாரனின் வாயிலிருந்து — அதுவும் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வரை ஒன்றும் ஆகி விடாது என்று சொன்னவனின் வாயிலிருந்து வந்தவுடன் — என் குடிவெறியும் சேர்ந்து என் மூர்க்கத்தனத்தை விசிறி விட்டது.

''எதுவும் பேசாதே ரகு! பேசினா நான் முரடனா ஆயிடுவேன். நீ எவ்வளவு வேணும்னாலும் குடிச்சுக்கோ, முடிஞ்சதும் ஆட்டோ பிடிச்சு ரூமோ, தியேட்டரோ எங்கே வேணும்னாலும் போ! இப்போ நான் கிளம்பறேன். எனக்கு என் அம்மா முக்கியம்...''

எழுந்திருக்கையில் கொஞ்சம் தள்ளாடியது. கண்களை மூடித் தூங்க வேண்டும்போல் இருந்தது. சரப்பசையுடன் கண்சிவந்து எல்லாம் மங்கலாகத் தெரிந்தது. சைக்கிள் டைனமோ கூட லாரி ஹெட்லைட் மாதிரி இருந்தது.

''ராஜன் இரு. போயிடாதே. ராஜன் இரு...''

''சாரி, ரகு.''

''இவ்வளவுதானா நாம பழகினது. நம்ப ஃபிரண்ட்ஷிப் இவ்வளவுதானா... ராஜன்..''

''சாரி ரகு...''

ஏற்கெனவே ரொம்ப நேரமாகி விட்டது. பார்ட்டி முடிந்ததும் பேசிச் சமாளித்துவிடலாம் என்பது கூட முடியாமல் போய் விட்டது. இவ்வளவு நேரம் தாமதித்ததே முட்டாள்தனம் என்று பட்டது. பாதிவழி போயிருக்கலாம். அம்மா எப்படி இருக்கோ!

பஸ் டிக்கட் போடுவதற்காக நிறுத்தி யிருந்தான். தூரத்தில் லைட்ஹவுஸ் ஒளிக் கற்றை எதையோ தேடித் தேடி அலைந்தது.

—அம்மாவை ஹார்பருக்கு அழைத்து வரவேண்டும்!

நிலவே நீயும் விலகாதே

சுபா

2

அவனைப் பார்த்ததும் பாலாவுக்குக் கண்களில் ஒரு மின்னல் தோன்றி நிலைத்தது.

''வா அனுசூயா'' என்றான். உட்கார்ந்திருந்தவன் எழுந்தான். கையில் இருந்த புத்தகத்தை மடித்து வைத்தான். கூடத்தை ஒட்டியிருக்கிற அறைக்குள் பரபரப்பாய்ப் போய் ஒரு பாயை எடுத்து வந்து விரித்தான்.

''உக்காரு அனுசூயா.''

அனுசூயா லேசான தயக்கத்தோடு உட்கார்ந்தாள்.

''பிரேமா இல்லை?'' என்று கேட்டாள். இல்லாமல் போனால் கூட கொஞ்சம் சந்தோஷமாக இருக்கும் போலிருந்தது.

''இருக்கா. பக்கத்துக் கோயிலுக்குப் போயிருக்கா. ரெண்டு நிமிஷத்தில வந்துடுவா! ஏன் பிரேமா கூடத்தான் பேசணுமா? எங்கூட பேசக் கூடாதா?'' என்று புன்னகைத்துக் கொண்டே கேட்டான் பாலா.

தோளிலிருந்து சட்டை மூடுகிற வரை விடு கூட்டும் பூனைக்குமாறு மாதிரியான நிறம். பனியன் மூடாமல் தெரிந்த மார்புப் பகுதியில் கருகருவென்று சுருண்டிருந்த முடி. சின்ன மோவாய். மோவாயில் தெரிந்த அதிர்ஷ்டக் குழி. மிக லேசாய் இணைந்த புருவங்கள். மேலுதட்டை மூடியும் மூடாமலும் இருந்த மீசை. கருணை பொழிகிற மாதிரி கண்கள். முன் நெற்றியை மூடின முடி.

அதற்கு மேலும் அவனைப் பார்க்க முடியாமல் உட்கார்ந்திருந்த கூடத்தை ஆராய்ந்தாள். ஏற்கெனவே எத்தனையோ முறை பார்த்ததுதான். பக்கச்சுவரில் அங்கங்கே மூட்டைப்பூச்சி முட்டை வைத்துக் குஞ்சு பொரித்ததால் ஏற்பட்ட கருப்பு கறைகள். ஒரு இனக்காலண்டர். ராஜேஸ்வரி படத்துடன் இன்னொரு காலண்டர். ரோஜாவை மார்பில் தாங்கிய அந்தக் காலத்து ஆனந்த விகடன் நேரு படம். மேலே உத்திரத்தில் சேர்ந்திருந்த ஒட்டடை—பழுப்பும் தூசியும் சுமந்த நடு ஹால் ஃபேன். ஊஞ்சலைச் சுமக்கத் தொட்டிலை ஏந்த மாட்டப்பட்ட கொக்கிகள்.

திடீரென இருவர் அந்நியமான பார்வையுடன் வாசலில் நுழைந்து பக்கவாட்டில் இருந்த படிக்கட்டில் ஏறிப் போனார்கள். பார்வை கூடத்திலேயே பதிந்திருந்தது. பாலா மீது. உட்கார்ந்திருந்த அனுசூயா மீது.

''பார்வையைப் பார்த்தீங்களா பாலா?''

''மூணு குடித்தனம் இருக்கு இங்கே. பின் கட்டில ஒரு குடும்பம். எங்களுக்கு நேர் மேலே வீட்டுக்காரர். அந்தப்பக்கம் இன்னொரு ஃபாமிலி. எல்லாருக்கும் இதான் வழி. வேடிக்கை பார்க்காமப் போக மாட்டாங்க. நாங்க மவுண்ட் ரோடுன்னு பெயர் வச்சிருக்கோம் இந்த நடைக்கு'' என்று கூடத்தை ஒட்டியிருந்த நடையைக் காட்டினான் பாலா.

''நான் படிக்க ஏதாவது புஸ்தகம் பாக்கலாமான்னுதான் வந்தேன்... உங்க ரூமுக்குப் போகலாமா?''

''வா பார்க்கலாம்'' என்று எழுந்து கொண்டான் பாலா. சுவரில் மாட்டியிருந்த சாவியை எடுத்துக் கொண்டு நடையைக் கடந்து வாசல் அறைக்குப் போனான்.

''எங்கே ராதா, அப்பால்லாம் காணும்?''

''ரெண்டு பேருமா மார்க்கெட்டுக்குப் போயிருக்காங்க. அது பாவம் ஆறுவது படிக்கறப்பவே அம்மா இல்லாத பொண்ணுன்னு பேர் வாங்கிடிச்சி. அப்பப்ப அம்மா நெனைப்பு வந்து அழுவுது. அதனாலத்தான் வெளிய போயிட்டு வரட்டும்னு வுட்டுட்டேன்'' என்றான் பாலா கதவைத் திறந்து கொண்டே.

உள்ளே குப்பென்று ஊதுவத்தி வாசனையும் புத்தக வாசனையும் சேர்ந்து வீசியது. பாலாவின் அம்மா ஃப்ரேமுக்குள் தலையில் பூ சுமந்து நெற்றியில் பொட்டு வைத்து உதட்டில் புன்னகை தெளிய நின்றிருந்தாள்.

''அம்மாவுக்கும் புருவம் ஒங்களை மாதிரியே பாலா'' என்றான் அனுசூயா.

''அம்மா மாதிரி இன்னொருத்தங்க பொறந்து வரணும் அனுசூயா. எம்மேல எவ்வளவு பிரியத் தெரியுமா? எனக்கு ஏத்த மாதிரி அவங்களே பார்த்துப் பார்த்துச் செய்வாங்க. ராத்திரி பத்துக்கு வந்தாலும் சரி, பதினொண்ணுக்கு வந்தாலும் சரி, எனக்குச் சாப்பாடு போட்டுட்டு அப்புறம் மிச்ச மீதி இருக்கறதைத்தான் அவுங்க சாப்பிடுவாங்க. இப்ப தங்கச்சி கிட்டே அந்த மாதிரில்லாம் உரிமை எடுத்துக்க முடியறதில்லே... ஏதாவது கோவமா ஒரு வார்த்தை பேசினாக் கூட அம்மா இல்லாத பொண்ணைப் போய் இப்படித்

திட்டருனேன்னு அது நெனைச்சிக்குமேன்னு பயம்... அப்பாவும் சின்ன வயசிலிருந்தே ஒதுங்கி ஒதுங்கித்தான் போவாரு... எங்க வீட்ல நான் ஒரு தனி மரம் மாதிரி இருக்கேன்... ஒன்னே மாதிரி யாராவது வந்து பிரியமா ரெண்டு வார்த்தை சொன்னுலே மனசுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குது. யானை பலம் வர மாதிரி இருக்குது...''

அனுசுயா நாற்காலியில் சரிந்தாள். வீட்டுக்கு வீடு வாசல்படி என்று தோன்றியது.

''எங்கதை மட்டும் என்னவாம் பாலா..'' என்று உள்ளே பொங்கிக் கொண்டிருந்ததையெல்லாம் இழுத்து இழுத்து வெளியில் போட்டாள். ''ச்...ச்...ச்ச்...'' என்று கூடக்கூடப் பரிதாபப்பட்டுக் கொண்டேயிருந்தான் பாலா. நடுவில் பிரேமா வந்தது. இரண்டு வார்த்தை பேசியது. காஃபி கலந்து இருவருக்கும் கொடுத்தது. எல்லாமே கனவில் நடந்த மாதிரி இருவருக்குமே மறந்து போயிருந்தது. அவனுக்கு அவள் கூறிய ஆறுதல்களும், பாலா அவளுக்குச் சொன்ன ஆறுதல்களும் தான் நினைவில் நிலைத்தன.

முன்னறையில் பாலா தனக்காகச் சேர்த்து வைத்திருந்த புத்தகங்களில் அவளிடம் இரண்டைப் பொறுக்கிக்கொடுத்த போது மஹா சந்தோஷப்பட்டுக் கொண்டான். அவனுடன் அத்தனை நேரம் பேசி விட்டு, பிரேமாவிடம் இரண்டொரு வார்த்தை பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பிய போது அனுசுயாவிற்குத் தன்னால் கூட இவ்வளவு சந்தோஷப்பட்டுக்கொள்ள முடியுமா என்று வியப்பாக இருந்தது.

''அப்புறம் எப்ப அனுசுயா?'' என்று கேட்டான் வாசல்படியில்.

''இனிமே அடிக்கடி வரேன் பாலா...'' என்றுன், ''ஒங்க ஆஃபீஸ் ஃபோன் நம்பரைக் குடுங்களேன்... இங்க இல்லேன்னு வெளியில எங்க யாவது பார்த்துப் பேசிட்டிருக்கலாம்.''



சட்டென்று தடுமாறிப் போனான் பாலா. சந்தோஷத்துடன் ஃபோன் நம்பரை எழுதிக் கொடுத்தான்.

ஆஃபீஸ் பரபரப்பாய் இருந்தது.

காஷியர் கவுண்டருக்கு எதிரில் எக்கச்சக்கமாய்க் கூட்டம். பொறுமை இழந்த கூட்டம்.

''சனிக்கிழமை அன்னிக்கு பாங்குக்கு வந்துட்டா மட்டும் போதும். ''இங்கக் கெழமைதான் வெளியில அனுப்புவீங்க'' என்று உரத்த குரலில் யாரோ சலித்துக் கொண்டார்கள்.

கூட்டத்தின் பரபரப்பு மானேஜரைத் தொற்றிக் கொள்ள ஹாலில் அவர் அங்கு மிங்குமாய் அலைந்து கொண்டிருந்தார். பரிச்சயமான முகங்களைப் பார்த்துப் புன்னகைத்து இரண்டொரு வார்த்தைகள் பேசி அவர்கள் இன்னும் ஐந்து நிமிடங்கள் பொறுமையாய்க் காத்துக் கொண்டிருக்க வழி தேடிக் கொண்டார்.

ஃபோன் ஒலிக்க ஆரம்பித்தது. ஆஃபீஸில் இருந்த பரபரப்பில் யாருக்கும் எழுந்து சென்று ஃபோனை எடுக்கத் தோன்றவில்லை.

''பாலா... அந்த ஃபோனை எடேன்... ஆர். எம்மா இருந்துடப் போறாரு... அப்புறம் கஸ்டமர்ஸ்கிட்ட வாங்கிக் கட்டிக் கறது பத்தாதுன்னு அங்கேர்ந்து வேற ஊத்தப்பம் வாங்கிக்க வேண்டியிருக்கும்.''

பாலா செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே விட்டு எழுந்தான். ஃபோனை எடுத்தான்.

''ஹலோ...'' என்று எதிரில் பெண்குரல்.

''ஹலோ'' — என்றான் பாலா மென்மையாய். லேசான எதிர்பார்ப்பினால் உடலில் ஓர் அதிர்வு இருந்தது.

''அனு என்ன அனு இது...? நாலுநாள் ஆச்சு நீ ஃபோன் பண்ணி.''

பத்திரிகை ஆசிரியர்: இனிமேல் நீங்க எழுதற நகைச்சுவைக் கதைக்குப்பக்கத்தில் 'நகைச்சுவைக் கதை'ன்னுபெரிசா போட்டுடணும்.

எழுத்தாளர்: ஏன் சார்?

பத்திரிகை ஆசிரியர்: உங்க கதையைப் படிச்சுட்டு ''என் உள்ளம் உருகிக் கண்கள் குளமாயிற்று''ன்னு ஒரு வாசகர் கடிதம் எழுதியிருக்கார் பாருங்க.



''ஸாரி பாலா. இதுக்கு முன்ன ரெகுலராப் பண்ணலே...? திடீர்னு பெரியம்மா பெரியப்பாவோட ஒரு ஊர் போயிட்டு வந்தேன்... கூட அவுங்க பெரிய பொண்ணு ரஞ்சிதம்... நாங்கூட அடிக்கடி சொல்வேனே...''

''ஆமா... எனக்கு இப்ப ரஞ்சிதந்தான் முக்கியம்... அவளையா பாக்கணும்னேன்... எங்க போனே...?''

''சிதம்பரம், சீர்காழின்னு பெரியம்மா, பெரியப்பாவுக்குப் பக்தி ஜாஸ்தி பாலா...''

''சரி போவட்டும்... இன்னிக்குப் பாக்கலாமா?''

''ம்...''

''எங்க?''

''நீங்கதான் சொல்லுங்களேன் பாலா..''

''அஷ்டலக்ஷ்மி கோயிலுக்குப் போகலாமா?''

''பெசன்ட் நகர் வரைக்குமா பாலா?''

''ம்.''

''அங்க என்ன விசேஷம்?''

''கோயில்ல எதுவும் இல்ல அனு. பக்கத்தில பீச் இருக்கில்ல...?''

''ம்.''

''அங்கதான் விசேஷம். நேத்து நைட்டு என் கனவிலே நீ வந்தது போனது எல்லாம் சொல்லணும்னு அங்கதான் போவணும்.''

''எத்தனை மணிக்கு பாலா?''

''மூணரைக்கு வாட்டர் டாங்க் பஸ் ஸ்டாப்... சரியா?''

''ம்.''

''சரியா வந்துடு அனு...''

''சரி... சரி... சரி... வச்சிடட்டுமா?''

''வேணும்...''

''இன்னும் என்ன...?''

''எங்கேர்ந்து பேசறே?''

''பப்ளிக் பூத் பாலா...''

''யாரும் இல்லியே பக்கத்தில?''

''ஊஹூம்.''

''அப்ப ஒரு கிஸ் குடு.''

''ம்ஹூஹூம்.''

''ஏய்... அதானே...?''

''ப்ச்... போதுமா?''

''மத்தது நேர்ல...'' என்றான் பாலா. அந்தப் பக்கம் ஃபோன் க்ளிக் என்றது. வேகமாய் வைத்தால் வலிக்குமோ என்னவோ என்ற எண்ணத்துடன் மெதுவாக ஃபோனை வைத்தான் பாலா. மனத்தில் ஏகப்பட்ட வெண் புறாக்கள் இறக்கை விரித்துப் படபட என்று அடித்துக் கொண்டன.

'நானுமா காதலில் சிக்கி விட்டேன்?'

'நானுந்தான்!'

ஒரு வெட்க முகத்தோடு எழுந்து வந்து, விட்ட வேலையை உற்சாகத்தோடு தொடங்கினான்.

அந்தக் கல் மண்டபம் சின்னதாய் இருந்தது. ஒரு சிறிய தேர் மாதிரி. கருங்கல்லில் கட்டியிருந்தது. சுற்றிலும் துகள் மணலில் கால்கள் புதைந்து புதைந்து நிறையப் பாதக் குழிகள். மண்டபத்தில் இருவர் நிற்க இடமிருந்தது. கடல் மட்டத்திலிருந்து ஒன்றரை ஆள் உயரத்தில்

இருந்த அந்த மையப் பகுதியை அடைவதற்காகக் கட்டப்பட்டிருந்த செங்கல் படிக்கட்டுகள் சிதிலமடைந்து அங்கங்கே பெயர்ந்திருந்தன. பாலா அந்தப் படிக்கட்டுகளில் அலட்சியமாக ஏறினான். கீழே நின்ற அனுசுயாவைப் பார்த்தான்.

''பாத்து ஏறு அனு...''

அனுசுயா நிதானமாய் ஏறினாள். கணுக்காலுக்கு மேலே கொஞ்சம் புடவையை உயர்த்தி இருந்ததில் அஸ்தமன ஆதவனின் செந்நிறக் கதிர்கள் அவள் உடலில் பட்டுச் ஜொலிப்பைச் சிந்தின.

மேலேறி அந்தச் செவ்வகத்தில் நின்றார்கள். அடைப்பு இல்லாத இரண்டு பக்கங்களிலிருந்து கடல் காற்று புகுந்து வெளிப்பட்டது. இருவர் தலையையும் சிலுப்பி விட்டது.

''இந்த எடமா பாலா?''

''ஆமா அனு... இந்த எடந்தான் கனவுல வந்தது'' என்றான் பாலா.

''அப்புறம்?''

''நீ இமேர்னு இடுப்புலேர்ந்து எதையோ எடுக்கற.''

''ம்?''

''பிரிக்கற?''

''ம்?''

''அது ஒரு சவுக்கு!''

''ம்?''

''முதல்ல சுவீர்னு அடிச்சிட்டு வலிக்குதான்னு கேக்கற. வலிக்குதுன்னு சொன்னா ஒம் மனசு கஷ்டப்படுமேன்னு நான் இல்லேன்னு சொல்லிட்டுச் சிரிக்கறேன்...''

''நெஜக் கனவுதானா இது...?''

''ஆமா அனு... கனவுல என்ன பொய்யும் நிஜமும்...? ஒவ்வொரு தடவை அடிக்கறப்பயும் எனக்கு எக்கச்சக்கமா வலிக்குது. கண்ல தண்ணி தானா வருது. ஆனாலும் மூஞ்சியில சிரிப்பை மாத்தாம தாங்கிக்கறேன்...''

''ஸினிமால வர மாதிரி!''

''ப்ச்... சேனுடா... அப்புறம் என்னைத் தாங்க முடியாத நெலமையில நான் கீழ சுருண்டு வுழுந்துடறேன். நீ பதறிப் போற... என்ன ஆச்சு பாலான்னு கேக்கற.. என்னைக் கையைப் பிடிச்சித் தூக்கி நிறுத்தி— என் சட்டையைக் கழட்டற...''

''ம்.''

''முதுகுல சதை பிஞ்சி போயிருக்குது. ரத்தம் காய்ஞ்சி போய் கறுத்து இருக்குது.''

''சொல்லாதீங்க பாலா... ப்ளீஸ்...''

''கேளு அனு... நீ அதப் பார்த்துட்டு ஒன்னு அழுதுக்கிட்டு என்னை அப்படியே கட்டிப் புடிக்கற.''

''போறும் இதுக்கு மேல கனவும் வேணாம், ஒண்ணும் வேணாம் அடல்ட்ஸ் ஒன்லியா இருக்கும்'' என்றாள் அனுசுயா படியிறங்கிக் கொண்டே. பாலா அவளைத் தொடர்ந்தான்.

''இல்ல அனு... இதிலே செக்ஸே இல்ல. கேளேன் கேக்க மாட்டியா?''

''சொல்லுங்க...''

''கட்டிப்பிடிச்சி அப்படியே அழுத்தி கிஸ் பண்ற... நமக்கு நடுவுல ஒரு பேப்பரைக் கூட இந்தப் பக்கத்துல வுட்டு அந்தப் பக்கம் எடுக்க முடியாது. அவ்வளவு நெருக்கம்.''


''ச்சீ... மொதல்ல சவுக்கால அடிக்கிறேனும்... அப்புறம் அழுத்தி கிஸ் பண்றேனும்... அர்த்தமேயில்லாம ஒரு கனவு...''

''இல்ல அனு... எனக்கென்னவோ இதுல அர்த்தம் இருக்கிற மாதிரி தான் படுது'' என்றான் பாலா மண்டபத்திலிருந்து கீழே இறங்கிக் கொண்டே.. கவனிக்காமல் நீட்டிக் கொண்டிருந்த கல் ஒன்றில் காலை வைத்துத் தடுமாறி விழப் போனான். சட்டென்று கையை நீட்டி அவன் தோளை இறுகப்பற்றி நிறுத்தினாள்.

சிலிர்த்துப் போய் அனுசுயாவைப் பார்த்தான்.

''என்ன அர்த்தம் பாலா அந்தக் கனவுக்கு?'' என்று கேட்டாள் அனுசுயா கண்களில் ஒளி மின்னல்களுடன்.

(தொடரும்)


பெரியவருக்கு முன்னால சத்தியம் பண்ணுங்கவாழ்நாள் பூராவும் 'தினம் ராத்திரி டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் கொளுத்துவேன்னு'!
கொசுவை விரட்டும் உறுதி பாக—டார்டாய்ஸ்
சனி, குருவைப் பாக்கிறான்.. கஷ்ட தசைதான். இந்த வருஷம் கொசுத் தொல்லே உங்களுக்கு அதிகமா இருக்கும்.
என்ன பண்ணலாம்? தோஷ சாந்தி, 'ஹோமம்' ஏதாவது...?
மகிழ்ச்சியும், அமைதியும் தர—டார்டாய்ஸ்
என்கிட்ட தான் இந்தக் கோபமெல்லாம் செல்லும்.. கொசுக்கள் கிட்ட செல்லுமா..?!
கொசுக்களை விரட்டி அடிக்க—டார்டாய்ஸ்
திரை எதற்கு? விலக்கி விடேன்!
முதலில் கொசுக்களை விரட்டி விடுங்கள்..!
பாழும் கொசுக்களை விரட்டி அடிக்க எளிய வழி—டார்டாய்ஸ்



வட்டமேஜை

● ஒவ்வொரு வியாழனும் வானொலியில் நேரம் நல்லநேரம் நிகழ்ச்சியில் ரமணனுடைய கம்பீரமான குரலைக் கேட்டு வரும் நான் அவருடைய பேட்டியைப் படித்து மகிழ்ந்தேன்.
கும்பகோணம்–1, ஆர். சுவாமிநாதன்.

● ஜாதிமத பேதமின்றி இறைவனை நினைத்து ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்து பயபக்தியுடன் தொழுதால் இறைவன் அருள் நிச்சயம் கிடைக்கும், அதிசயம் நடக்கும் என்பதற்கு கேத்ஷிவபூர் தர்கா அதிசயக் கல்லே ஒரு சிறந்த உதாரணம்.
லால்குடி. எம். இராஜேந்திரன்

● வாக்மேன் அணிந்து வாகனங்களைச் செலுத்துவது விபத்துக்களுக்குக் காரணமாய் அமைந்து விடுகிறது என்று கூறிவிட்டு பின்பு அட்டைப் பட அழகி அணிந்துள்ள வாக்மேனின் விலையையும் கூறியது அந்த உயிர்க்கொல்லி சாதனத்தினை விளம்பரப் படுத்துவது போலிருந்தது.
கும்பகோணம். பா. கிருஷ்ணதாஸ்.

● 'விசித்திரப் பழக்கம்' — வாசகர்கள் பங்கு கொண்ட போட்டி பலே ஜோர். பல ஊர்களில் நடைபெறுகின்ற விநோதப் பழக்கங்கள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தன.
சென்னை–45. கே. என். கணபதிசுப்ரமணியம்.

● கால் நூற்றாண்டு காலமாகக் குமரி மாவட்டம் முழுவதும் பம்பரமாகச்சுழன்று பொது மக்களுக்குப் பணியாற்றும் ஆ. பாலையாவை குளச்சல் இப்ராஹிம்தகுந்த நேரத்தில் பெருமைப்படுத்தி உள்ளார்.
கருங்கல். ஆர். ஜார்ஜ்.

● தீபாவளிமலர் கண்டு மகிழ்ந்தோம். மிகவும் சிறப்புடையது. மணிமணியான கவிதைகள், கதைகள், கட்டுரைகள் கண்டோம். போற்றுதற்குரிய தயாரிப்பு.
சென்னை–15. நெல்லை ஆ. கணபதி.

● கந்தசஷ்டி வரும் நன்னாளில் பன்னிருகை முருகனை காணச் செய்த ஓவியர் வினுவை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

காஞ்சி முனிவரின் கட்டுரை அருள் பிரசாதம்.

சாண்டில்யனின் 'கவிகாரம்' காரமே இல்லாமல் இனித்தது.

மு. மேத்தா, சௌந்தரா கைலாசம், வைரமுத்து இவர்களின் கவிதைகள் ஒவ்வொன்றும் முக்கனிகளாகத் தித்திக்கச்செய்தன.

'புன்னை வனத்துப் புலி' அமரர் கல்கி இன்னமும் நம்மிடையே இருந்து வருவது போல் ஒரு தெம்பு ஏற்படச் செய்திருக்கிறீர்கள்.

லதா, வினு இவர்களின் பண்டைய சரித்திர வர்ண ஓவியங்களை அப்படியே எடுத்து வைத்து விடலாமா என்ற ஒரு ஆசை.
சென்னை–39. திருமதி. நாராயணராவ்,
திருமதி. மஞ்சுளா பாய்.

● திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர் பேட்டியில் இன்றைய நிலை என்னவென்று அழகாக எடுத்துச் சொல்லி இருக்கிறார். நாடு சுதந்திரம் அடைந்து 37 ஆண்டுகளாகியும், 50 சதவிகிதத்திற்கு மேல் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளார்கள். ஜனநாயகம் தழைத்து செழித்தோங்க வேண்டுமென்று தலைவர்கள் நினைப்பதில்லை.
சென்னை–56. டாக்டர் நாவலர் தாசன்.

● எழுபது கோடி பாரத மக்களின் எண்ணங்களை எடுத்துக் கூறியது ஹிட்லர் சாயையில் ஹிண்டன் தலையங்கம்.
சென்னை–5. எஸ். சம்பத்குமார்.

● கல்கி தீபாவளி மலர் அருமையாக இருந்தது. ஆச்சார்ய சுவாமிகளின் படங்கள் கண்ணைக் கவருகின்றன.
மின்பாறை. வி. வெங்கடராமன்.

● அரசு விழாக்களில், மந்திரியின் பாதங்களுக்கு நர்சரி குழந்தைகள் மூலம் மலர் தூவுகிறார்கள். விழாவில் பல மணி நேர தாமதத்தில் பங்கேற்பது தான் மந்திரிகளுக்குப்பாஷன்! அந்தப் பல மணி நேரமும், கொளுத்தும் வெயிலில் நிறைய குழந்தைகளை நிறுத்தி வைக்கிறார்கள். இது கொடுமை. மந்திரிகள் மகான்களோ, ஞானியோ அல்ல! அவர்கள் பாதங்களுக்கு மலர் தூவுவது அநாகரிகம்.
அத்தனைப்பேட்டை. அண்ணா அன்பழகன்.

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)

மந்திரி பாதங்களுக்கு மலர் தூவ வேணுமா?

சிறப்புப் பேட்டி

தோழர் எம்.கே

சமீபத்தில் 75 வயது நிறைவு பெற்றார் கம்யூனிஸ்ட் தலைவர் திரு எம். கல்யாண சுந்தரம். 50 வருட பொது வாழ்க்கையில் சுதந்திரத்துக்கு முற்பட்ட காலகட்டத்தில் தமக்கேற்பட்ட அனுபவங்களை இங்கு 'கல்கி' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.



1940 ஜனவரி 26.

திருச்சி பொன்மலை சரித்திரத்தில் மறக்க முடியாத நாள்.

காங்கிரஸ் மாநாட்டின் தீர்மானத்தின்படி அறிவிக்கப்பட்டிருந்த சுதந்திர நாள். பொன்மலை ரயில்வே தொழிலாளர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து நகரெங்கும் மூவர்ணக் கொடியை ஏற்றத் திட்டமிட்டிருந்தனர். மூவர்ணக் கொடியை ஏற்றத் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியமான இடம் பொன்மலை ரயில்வே ஒர்க்ஷாப் வாசல்– அதை ஆர்மரி கேட் என்று சொல்வார்கள். ஆனால் ஆயுதப் படையினர் விழிப்புடன் இருந்து அந்த இடத்தில் கொடியேற்றும் முயற்சியினை முறியடித்து விடுகின்றனர். நடு இரவில் வந்த விடுதலை வீரர்கள் அந்த ஆர்மரி கேட்டின் எதிரில் இருந்த உயரமான மரத்தில் ஏறிக் கொடியைக் கட்டி விட்டுச் செல்கின்றனர். பின்னர் பொன்மலை என்று சொல்லப்படும் மலை மீது, நகரின் முக்கிய பகுதிகளான போலீஸ் ஸ்டேஷன், சர்ச்சுகளுக்கு முன்னால் இரவோடு இரவாக மூவண்ணக் கொடிகள் கட்டப்பட்டு விட்டன.

இதைக் கண்டு மக்கள் உள்ளமெல்லாம் தன்னென்று தேசிய உணர்வு நிறைந்தது.

வெள்ளையர் உள்ளமெல்லாம் ஆத்திரத் தீ கொழுந்து விட்டெரிந்தது!

இந்தக் கொடியேற்றும் திட்டம் வெற்றியடைந்ததற்குக் காரணம் 31 வயதே நிரம்பிய தொழிலாளர் தலைவர் எம். கல்யாண சுந்தரம்.

திருச்சி அருகே குளித்தலைக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் பிறந்தவர் எம். கே. ஆனால் வளர்ந்ததென்னவோ திருச்சியில் தான். அப்பாவுக்குச் சுருட்டுக் கம்பெனியில் கணக்கெழுதும் வேலை. வசதியான குடும்பம் என்று சொல்ல முடியாது. கூடப் பிறந்தவர்கள் 6 பேர். அதில் மூவர் குழந்தைகளாகவே இறந்து விட்டார்கள். தேசிய பள்ளியில் படிக்கும் போது, எம். கே.யின் மீது ஆசிரியர்களுக்கு மிகுந்த பிரியம் உண்டு. கஷ்டமான குடும்பச் சூழ்நிலையிலும் எஸ். எஸ். எல். ஸி. வரை படிப்பை முடித்து விட்டு 1928–ல் பொன்மலை ரயில்வே ஒர்க்ஷாப்பில் வேலைக்குச் சேர்ந்தார்.

• • • •

"அரசியலில் நுழைய வேண்டும் என்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது?"

"இந்த காலத்தில், அரசியலில் நுழைபவர்கள் எந்தப் பதவியைப் பிடிக்கலாம், எவ்வளவு சம்பாதிக்கலாம் என்ற திட்டத்தோடு தான் வருகிறார்கள். ஆனால் நான் அரசியலுக்கு வரும்போது, விசாரணை இன்றிக் கைது உண்டு. ஆயுள் தண்டனை உண்டு. தூக்குத் தண்டனையும் உண்டு. 1927–28–ல் சைமன் கமிஷன் இந்தியாவிற்கு வந்த போது காங்கிரஸ் அதை பகிஷ்கரித்தது. ஆனால், நீதிக்கட்சி வரவேற்றுத் தீர்மானம் போட்டது. அந்நியர்களை எதிர்த்து விடுதலை போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த அந்த வேளையில், நீதிக் கட்சியினர் செயல், வெள்ளையருக்கு வால் பிடிக்கும் வேலை, எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அக்கட்சியினர் அணிந்திருக்கும் பட்டு அங்கவஸ்திரங்களும், தலைப்பாகைகளும் எனக்கு எரிச்சலை ஏற்படுத்தின. அதே சமயத்தில் காங்கிரஸார் அணிந்திருந்த எளிமையான கதர் சட்டை, கதர் வேட்டி, அவர்கள் கொண்டிருந்த விடுதலை வேட்கை தியாக உணர்வு ஆகியன என்னைக் கவர்ந்தன."

• • • •

பொன்மலை ரயில்வே தொழிலாளர்களை

ஒன்றுபடுத்தி, தொழிற்சங்கம் அமைத்த திற்கு எம். கே. யின் ஊக்கமும் தூண்டுதலும் தான் காரணங்கள். எம். கே. ரயில்வேயில் சேர்வதற்கு முன்தான் ஒரு பெரிய வேலை நிறுத்தம் நடந்து முடிந்திருந்தது. பிரிட்டிஷ் அதிகாரிகளின் சதியால் தொழிற்சங்கம் சிதறுண்டு போயிருந்தது. பொன்மலை ஒர்க் ஷாப்பின் சூழ்நிலையே எம். கே. யின் சிந்தனையைக் கிளறிவிட்டது. ஆர்மரி கேட் என்று சொல்லப்படும் ஆயுதங்களை வைத்திருக்கும் இடம், கோட்டையைப் போன்று சுற்றுச் சுவர். அதில் துப்பாக்கியுடன் ராணுவம். தொழிலாளர்கள் வேலை செய்யும் இடத்தில் எதற்கு இவ்வளவு பாதுகாப்பு? கண்காணிப்பு? இதற்கு மேலாக தென்னிந்திய ரயில்வே நஷ்டத்தில் ஓடுவதாகச் சொல்லிச் சம்பளத்தில் பத்து சதவிதத்தைப் பிடித்துக் கொண்டார்கள். ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்யும் ஆங்கிலேயருக்கு உயர்ந்த சம்பளம்; அதே வேலையைச் செய்யும் இந்தியருக்குக் குறைந்த சம்பளம். இவையெல்லாம் எம். கே. மனத்தில் வெறுப்பைத் தூண்டுகின்றன. மனத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வும், தேசிய உணர்வும் கொழுந்து விடுகின்றன.

● ● ● ●

''முற்றிலும் சாத்வீகமான முறையில் நடந்த போராட்டத்தால்தான் இந்தியா சுதந்திரம் பெற்றது என்பது சரியா?''

''இதைப் பற்றி எனக்குக் கருத்து வேறுபாடு உண்டு. சிப்பாய் கலகத்திலிருந்து பார்க்க ஆரம்பித்தோமானால், பின்னர், பகத்சிங், வாஞ்சிநாதன், போஸ், என்று ஒரு பக்கத் தலைவர்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தாலும், தீவிரமான கிளர்ச்சிகளாலும் தான் விடுதலை கிடைக்கும் என்று தீர்மானித்தார்கள். ஆனால், காந்திஅவர்கள் சட்டமறுப்பு இயக்கம், உப்பு சத்தியாக்கிரகம் என்று சாத்வீகமான முறைகளில் இறங்கினார். என்னைக் கேட்டால், சாத்வீகமும், பலாத்காரமும் சுதந்திரப்போராட்டத்தில் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இயங்கி, வெற்றியைக் கொணர்ந்தது என்று சொல்லலாம்.''

● ● ● ●

'காங்கிரஸ் இயக்கத்தில் எப்போது சேர்ந்தீர்கள்?''

''1935—ல் நான் ஈரோட்டில் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். 1935 காங்கிரஸ் பொன்விழா ஆண்டு. இளைஞர்களிடம் தேசிய உணர்வு பொங்கியெழுந்த காலம். ரயில்வேயில் சம்பளம் குறைவு. வேலை நேரமும் அதிகம். தொழிலாளர் வர்க்கம் கொதித்துக் கொண்டிருந்தது. இக்கொதிப்பை, எல்லாம், குறிக்கோளோடு, மையப்படுத்திப் போராட வேண்டிய அவசியம்; ஆங்கிலேய எதிர்ப்பு, தேசிய உணர்வு ஆகியவைகளைத் தொழிலாளர் மத்தியில் ஏற்படுத்த வேண்டிய காலக் கட்டாயம்—ஆகியவை என்னை காங்கிரஸில் இணைத்தன. 1937 தேர்தலில் வரி கட்டுபவர்கள், படித்தவர்கள் இவர்களுக்குத் தான் ஓட்டு. அதாவது 14 சதவீதத்துக்குக் குறைவான நபர்களுக்குத் தான் ஓட்டுரிமை இருந்தது. இரயில்வேயில் இருந்த தேசிய உணர்வு மிக்க இளைஞர்கள் காங்கிரஸ் வெற்றிக்காகவும், நீதிக் கட்சியின், வீழ்ச்சிக்கும் பாடுபட்டார்கள். காங்கிரஸ் வெற்றிபெற்றது. ராஜாஜி ஒன்றுபட்ட சென்னை மாநிலத்தின் பிரதம மந்திரி ஆனார். வி. வி. கிரி மந்திரியானது தொழிலாளர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. அவரது உதவியுடன், தொழிற்சங்கம் ஒன்றுபட்டு நன்கு செயல்பட ஆரம்பித்தது.''

● ● ● ●

''காங்கிரஸ்காரராக இருந்த உங்களுக்கு கம்யூனிஸ உணர்வு ஏற்படக் காரணம்?''

''மார்க்ஸையோ, எங்கெல்ஸையோ படித்து கம்யூனிஸ்ட் ஆனவனல்ல நான். என்னுடைய தொழிற்சங்க அனுபவத்தால், ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்களோடு பழகும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால், அந்தக் கால கட்டத்தில், கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்தது. கம்யூனிஸத்தைப் பற்றிய எந்தப் புத்தகத்தையும் விற்பனை செய்ய முடியாது — ஏன் வைத்துக் கொண்டிருப்பதே குற்றம். டாக்டர் கிருஷ்ணசாமி, கே. ஏ. சாரி போன்றவர்களிடம் இருந்த தடை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் புத்தகங்களை வாங்கிப் படித்தேன். பின்னர்

அடுத்த வாரம்



இந்தியாவின் இந்திரா

மாலன் எழுதும் வாழ்க்கை வரலாறு ஆரம்பம்

புகைப்படம்: சுபா

1940-ல் சிறையில் இருந்த போது படித்த பாரதியார் கவிதைகள், சிறுமி இந்திரா விற்கு நேரு எழுதிய கடிதங்கள், ரஷ்யப் புரட்சி பற்றிய புத்தகங்களைப் படிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. என்னை ஒரு கம்யூ னிஸ்ட் ஆக்குவதற்கு இந்தப் புத்தகங்கள் தூண்டுதலாக இருந்தன. மேலும், நிர்வா கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தும்போது ''கம்யூனிஸ்ட் மாதிரி பேசுகிறானே' என்று அதிகாரிகள் சொல்வது என் சிந்தனையைக் கிளறியது. நியாயத்தை, உரிமையை எடுத்துச் சொல்வது கம்யூனிஸம் என்றால் 'நாம் ஏன் கம்யூனிஸ்ட் ஆகக் கூடாது?' என்ற எண்ணமும் ஏற்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் காங்கிரஸ் உறுப்பினராக இருந்து கொண்டே கம்யூ னிஸ்ட் இயக்கத்திலும் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தேன் என்பது தான். இது ராஜாஜிக்கும் நன்கு தெரியும்.''

• • • •

''நீங்கள் முதன் முதலாகக் கைது செய்யப் பட்டது எப்போது?''

''தனி நபர் சத்தியாக்கிரகம் துவங்குவ தாக காந்திஜி அறிவித்திருந்தார். அதற்கு நானும் பெயர் கொடுத்திருந்தேன். ஆனால் காந்திஜியோ, 'வேலையை ராஜினாமா செய்து விட்டுக் கலந்து கொள்ளுங்கள்' என்றார். 'நான் ஏன் வேலையை ராஜினாமா செய்ய வேண்டும்? வேண்டுமானால், கம்பெனியே என்னை டிஸ்மிஸ் செய்யட்டும்' என்று சொன்னேன். இதற்கிடையில், இரண்டாம் உலக யுத்தத்தை ஒட்டி, பொன்மலை ரயில்வே ஒர்க்ஷாப்பை, யுத்த தளவாடங்கள் செய்ய பிரிட்டிஷ் அரசு பயன்படுத்தத் துவங்கியது. தொழிலாளர்களை மிலிட்டரி யூனிட்டில் சேர்த்தனர். 'யுத்த அலவன்ஸ் வேண்டும்', 'தொழிலாளர்களை மிலிட்டரி அணியில் சேர்க்காதே' என்ற கோரிக்கை களை வைத்துப் பொன்மலையிலிருந்து திருச்சி டவுன்ஹால் வரை, ஒரு நீண்ட பேரணி நடத்தினோம். பேரணி மாபெரும் வெற்றி பெற்றது. மோகன் குமாரமங்கலம் அந்தப் பேரவையில் பேசினார். தொழிலாளர்களை எதிர்த்து அடக்குமுறையை அரசு உபயோ கித்தது. தொழிலாளர் வீடுகள் சோதனை விடப்பட்டன. யுத்த எதிர்ப்பு தஸ்தா வேஜுகள் அவர்கள் வீடுகளில் இருந்ததாகப் பொய் வழக்குப் போடப்பட்டது. என்னைக் கைது செய்தார்கள். தனி நபர் சத்தியாக் கிரகத்தில் பங்கேற்க விரும்பினேன். ஆனால் அந்தச் சத்தியாக்கிரகத்துக்கு முன்னரே கைது செய்யப்பட்டுச் சிறை சென்றேன். ஒன்றரை வருடம் தண்டனை. ஆனால் நான்கு வருடம் காவலில் வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்! ரயில்வே வேலையும் போய் விட்டது. பெல்லாரி, அலிப்புரம், வேலூர் சிறைகளில் அடைக்கப்பட்டேன். அப்போது தான் தோழர்கள், பால தண்டாயுதம், ஜீவா, சங்கரையா போன்ற வர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அலிப்புரம் சிறையில், காவ லர்கள் எங்களை மிகவும் துன்புறுத்தியதால்

சரியாக 37 வருடங்களுக்குப் பிறகு தில்லி ராஷ்டிரபதி பவனில் பிரிட்டிஷ் கொடி (யூனியன் ஜாக்) சமீபத்தில் மறுபடியும் பறக்க விடப்பட்டது! ஆச்சர்யமாயிருக்கிறதா? மௌண்ட் பேட்டனின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்கிறார்கள். அதற் காக ராஷ்டிரபதி பவனில் படம் எடுக்க அனுமதி வழங்கப்பட்டிருக் கிறது. பட ஷூட்டிங்குக்காகத்தான் கொடி பறக்க விடப்பட்டது!

நன்றி: 'டைம்ஸ் ஆஃப் இந்தியா.'

''அனீஷ் முரளி.''





ஒரு பெரும் செல்வந்தன் ராம கிருஷ்ணரைப் பாராட்டி, அவரிடம் நல்ல பெயரை வாங்க நினைத்தான். ''சுவாமி, உங்களைப் போலத் துறவி உலகிலேயே யாரும் கிடையாது! ஆண்டவனுக்காக உலக இன்பத் தையே துறந்து விட்டீர்களே!'' என் றான். அதற்கு ராமகிருஷ்ணர், ''நீ என்னை விடப் பெருந்துறவி ஆயிற்றே! உலக சிற்றின்பத்திற்காக பகவானையே துறந்து விட்டாயே!'' என்றார்.

—முரளீதரன்.

அவர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டுமென்று முடிவு செய்தோம். எங்களுடன் இருந்த தோழர்களில் கிருஷ்ணமூர்த்தி என்பவர் நன்கு பாடுவார். அவரை பாரதி பாடல்களைப் பாடச் சொன்னோம். காவலர்களும், ஆர்வத்துடன் கேட்டார்கள். அவர்கள் கவனம் திருப்பப்பட்ட சமயத்தில் அறையின் மேலிருந்த வலைக்கம்பியிலான ஜன்னலை அறுக்கும் முயற்சியில் இறங்கினோம். சில நாட்களில் அது அறுக்கப்பட்டு, அதன் வழியாக நான்கு தோழர்கள் தப்பித்துச் சென்றனர். அப்புறம் தான் காவலர்கள் விழித்துக் கொண்டனர். 1942—ல் என்னை விடுதலை செய்து விட்டனர்.''

● ● ● ●

1942. உலக யுத்தம் உச்சகட்டத்தில் இருந்த நேரம். அந்த ஆண்டு செப்டம்பர் மாதம், ரயில்வே தொழிலாளர்களின் மாபெரும் மாநாடு, பொன்மலையில் நடந்தது.

— தேசிய சர்க்கார் அமைய வேண்டும்.

— யுத்தம் முடிவதற்குள் இந்தியர் கைக்கு ஆட்சிமாற வேண்டும்.

— புதிய அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட வேண்டும்.

— விடுதலை அரசியல் சட்டம் தயாரித்துக் கொடுத்துவிட்டு, வெள்ளையர்கள் வெளியேற வேண்டும் என்ற கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கைகளை வைத்து எம். கே. தொழிலாளர் மத்தியில் பேசினார். எம். கே. வெளியில் இருக்கும் வரை தொழிலாளர்கள் கட்டுக்கடங்க மாட்டார்கள் என்பதாகக் கருதிய வெள்ளை அரசு எம். கே.யை மறுபடி கைது செய்தது.

● ● ● ●

இந்த முறை வேலூர் சிறைவாசம். ஆர். வெங்கட்ராமன், காமா கப்பாராவ் போன்றவர்களோடு நெருங்கிய பழக்கம் உண்டாயிற்று. சிறையிலேயே எம். கே. கம்யூனிஸ்டுகளுக்கு வகுப்பு நடத்துவதை அவர்களும் வந்து கேட்டுவிட்டுப் போவார்கள்.

எம். கே.யைக் கைது செய்தால், தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் அடங்கிப் போகும் என்று எதிர்பார்த்த வெள்ளை அரசு ஏமாற்றமடைந்தது. தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் தொழிலாளர்கள் இறங்கினர்.

எம். கே. தொழிலாளர் மத்தியில் இருந்தால் தான் அமைதி உண்டாகும் என்று உணர்ந்த ஆங்கிலேய அரசு அவரை விடுதலை செய்தது!

பேட்டி: ப்ரியன்

புகைப்படம்: தாமு

ஆட்டோகிராஃப்

நடிகர் நிர்மல்குமார், தனக்கு ஏற்கெனவே திருமணமாகி ஒரு மகனும் இருப்பதை மறைத்து வைத்ததோடல்லாமல், இருபது வருடங்களுக்கு மேலாக அவர்களைத் தள்ளியும் வைத்திருக்கிறார். காரணம்? தன் இமேஜை இழக்கக் கூடாது என்பதற்காக. அப்புறம், கூடவே நடிக்கும் ராதா மீது சபலம் ஏற்பட்டு, அவளை ரகசியமாகத் திருமணம் செய்து கொள்கிறார். (இது தெரிந்தால் மட்டும் இமேஜ் கெடாதோ?) ஆனால் ராதா தன்னுடன் கல்லூரியில் படித்த கண்ணனை நேசிக்கிறாள். அவன் இருக்குமிடம் அமெரிக்கா. கண்ணன் யாருடைய பிள்ளை என்பதை ஊகித்திருப்பீர்கள். தன் மகன் காதலித்த ராதாவையே தானும் கைப்பிடிக்க, மகன் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்து அப்பாவுடன் மோத.... ஸ்ரீதரின் 'எதிர்பாராதது' மாதிரி ஒரு க்ளைமாக்ஸ். கடைசியில் மௌனம் பாக்கம் வெடிவைத்து நாடகாசிரியருக்குக் கைகொடுக்க, கண்ணன், தாய் லட்சுமி எல்லோரும் அதில் உயிர் துறக்க, நிர்மல்குமார், (நீயோ அரசன், நீயே கள்வன்' எனக் கேட்கப்பட்ட பாண்டியன் நெடுஞ்செழியன் மாதிரி) நாற்காலியிலிருந்து வீழ்ந்து உயிர் துறக்க, ராதா பிரமித்து நிற்க, திரை விழுகிறது.

நாடக மந்திர் குழுவில் நடிப்பில் எல்லோருக்கும் பாஸ் மார்க் கொடுக்கலாம் என்றால், கண்ணனாக வரும் ரமேஷுக்குச் சற்றுத் தாராளமாகவே கொடுக்கலாம். ராதா திருமணமான பின்னும் களங்கப்படாதவளாகவே காண்பித்திருக்கும் ஆசிரியர், அவளைத் தன் காதலனுடன் சேர்த்து வைக்கத் துணிச்சல் இல்லாமல், சம்பந்த முதலியார் காலத்து முடிவை நாடியிருக்க வேண்டுமா?

காமெடி டிராக்கின் தரம் மிகவும் குறைவு. சீரியஸான கதையில் மறுபாதியை இப்படியா சீர்குலைப்பது? இயல்பான நகைச்சுவை வசனங்களை எழுதக் கூடிய மணிமோகனின் திறமை எங்கே போயிற்று?

ஆட்டோகிராஃப் என்பது சிம்பாலிக் தலைப்பா என்ன? மாற்றிவிடலாமே?

-சாருகேசி



அந்த நாலு நாட்கள்




சோவியத் பிரதமர் நிக்கோலய் டிக்கோனேவ் பாரதப் பிரதமரைச் சந்தித்துச் சோவியத் ருஷ்யாவின் நல்லாதரவைத் தெரிவிக்கிறார்.



அமைதி காத்து வரிசையில் வருமாறு கூட்டத்தினரை வணங்கிக் கேட்டுக்கொள்கிறார் ராஜீவ்.



பூட்டான் மன்னருடனும் பாலஸ்தீன விடுதலை அணியின் தலைவர் அராஃபட்டுடனும் பிரதமர் ராஜீவ்.



ஜெயவர்த்தன அஞ்சலி செலுத்துகிறார்— வலது கோடி.



பூட்டான் மன்னரின் அஞ்சலி.









நினைவு அலைகள்


- அண்ணல் காந்தியுடன் சிறுமி இந்திரா.
- குழந்தைகள் கலைவிழாவில் சிறுமிக்கு உதவுகிறார் பிரதமர்.
- 1980—மக்களின் தீர்ப்பை ஏற்று மறுபடி பிரதமரானார் — பதவிப் பிரமாணம்.
- பெற்றோருடன் இந்திரா.
- பள்ளிச் சிறுமி.
- மத்தியப் பிரதேச நாடோடி நடனத்தில் தாமும் பங்கேற்கிறார்.
- ரேகன் தம்பதியுடன் அமெரிக்க விஜயத்தின் போது.
- ஈழப்பிரதமர் சேனநாயகா வுடன்.

















- விண்வெளி விஞ்ஞானத்தில் ஆர்வம். 'ஆப்பிள்' விண்கோளைப் பார்வையிடுகிறார்
- லட்சியம் நிறைவேறியது—முதல் மாருதி காரின் வெள்ளோட்டம்.
- விநோபாவுடன்
- பஞ்சாபி சீக்கிய பங்கரா நடனக் குழுவினருடன் சிரித்து மகிழ்கிறார்.
- அண்ணா இரங்கல் கூட்டத்தில், ஆளுநர் உஜ்ஜல்சிங், ராஜாஜி ஆகியோருடன்.
- வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்.
- கலைஞர்களுக்கு எப்போதுமே நல்லாதரவு தந்து வந்தார். படத்தில் ஸ்ரீமதி எம்.எஸ். எஸ்ஸின் பாலாஜி பஞ்சரத்னமாலா இசைத் தட்டை வெளியிடுகிறார்.














- கூட்டுசேரா அணியின் தொடக்க காலத் தலைவர்கள் டிட்டோ, நாஸர் ஆகியோருடன்.
- பங்களாதேஷை உருவாக்கிய இந்திரா, டாக்காவுக்கு விஜயம் செய்தபோது பரிசு பெறுகிறார். வலப்புறம் முஜிபுர்ரஹ்மான்.
- சஞ்சய்யுடன் ஆலோசனை.
- யானைப்பசிக்கு வாழைப்பழம் — ராமேசுவரத்தில்.
- கமது இல்லத்தின் விசாலமான தோட்டத்தில் அறுவடை.
- வ.உ.சி. கபால்தலை வெளியீடு —அருகில் கலைஞர் கருணாநிதி.
- ராஜராஜசோழன் விழாவில் முதல்வர் எம். ஜி. ஆருடன்.

















- பாரதத்தின் பெட்ரோலிய வளம் கடலின் மையத்திலும்கண்டுபிடிக்கப் படுகிறது. கடலைக் கடையும் பணியைத் தொடங்கி வைக்கிறார்.
- டோக்கியோவில் ''சாப் ஸ்டிக்''குகளைப் பயன்படுத்தி உணவருந்துகிறார் அவர்கள் பாணியில்!
- விளையாட்டுக்களிலும் ஆர்வம். ஏஷியாட் நடத்தியவர் இங்கு வாயிட்டுடன் அளவளாவுகிறார்.
- திரைப்பட விழாவில் அயல்நாட்டு நட்சத்திரங்களுடன்.
- பிரிட்டிஷ் பிரதமர் ஹராால்ட் வில்சனுடன்
- எல்லைப்புறத்தில் இமாலயப் பனிச்சிகரங்களில் ராணுவ வீரர்களுக்கு ஊக்கமளிக்கிறார்.
- ருஷ்யாவுடன் நல்லுறவு — பிரஷ்னேவுடன் இந்திரா.
- பங்களாதேசக் கனவை நினைவாக்கித்தந்த அன்னை இந்திரா, அதற்கு உறுதுணையாய் நின்ற முப்படைத் தளபதிகளுடன்.









மறந்து போவதற்கு முன்னால் இருக்கிற மூன்று நல்ல விஷயங்களைச் சொல்லிவிட வேண்டும்.

நம்பர் ஒன்: பெற்ற குழந்தைக்கு இன்னும் கழுத்து கூட நிற்கவில்லை. அதை ஆண்ட்டியிடம் விட்டு விட்டு அதிகார அம்மாவோடு கன்னிப் பெண் மாதிரி ஊர் திரும்ப வேண்டிய கட்டாயம். வாடி வாடி என்று அம்மா கயிறு கட்டாத குறையாய் இழுக்கிறாள். ஒரு பசுவின் பரிதவிப்பு ஊர்வசி முகத்தில். திமிறிக் கொண்டு குழந்தையிடம் ஓட முயற்சி செய்யும் அந்த ஒரு காட்சியில் ஊர்வசி ஜமாய்த்து விட்டார்.

நெக்ஸ்ட்: இன்ஜின் டிரைவர் தே.சீனிவாசனுக்கும் அவர் வாங்கிய பழைய இங்கிலாந்து மாடல் காருக்கும் இருக்கும் பிரியமான உறவு. 'மன்னிச்சுக்கடா, அடுத்த க்ரிஸ்ட்மசுக்கு உன்னையும் அழைச்சிட்டுப் போறேன்' என்று தட்டிக் கொடுத்துக் கொஞ்சும் போது, நிஜமாகவே காருக்கு ஜுரம் அடிக்கிறதோ என்று பிரமை வருகிறது.

மூன்றுவதாய்... மூன்றுவதாய்...

ஆ... படம் முடிந்து விட்டது என்று ஒரு வழியாய் பெல் கொடுக்கிறார்களே, அது!

பின்னே என்னங்க?

மலையாளத்தில் சட்டைக்காரி சூப்பர் ஹிட். ஹிந்தி ஜூலியும் அதே வழி. நம் தமிழுக்கு வருகிற போது... ஊம்ஹூம் சான்ஸே இல்லை.

ஆரம்பிக்கும் முதல் காட்சியிலிருந்து நாலு நிமிஷத்துக்கு ஒரு தடவை ஊர்வசியின் கவுன் மறைக்காத முழங்காலைக் காட்டிக் கொண்டிருந்தால் படம் நகர்ந்து விடும் என்று டைரக்டர் கணக்குப் போட்டிருக்கிறார். இந்த ரீதியில் இன்னும் இரண்டு படம் பண்ணினால் ஜகன்னாதனைப் பேசாமல் டி. வி. ஸ்டேஷனுக்கு மூட்டை கட்டி விடுவார்கள்.

இளையராஜா நாரோடு சேர்ந்த பூ.

தியேட்டர்காரர்களே, உஷார்! இருக்கைகள் கிழிந்தால் ரசிகர்கள் பொறுப்பில்லை!!

ஓ மானே மானே

தலைவலி தாங்காமல் துடித்துக் கொண்டிருந்த ஜெயமன்மதனைப் பார்த்து, "நானெக்கு எங்கே?" என்று மிரட்டியது வேதாளம். ஒரே கோபம் அதற்கு! அதைத் தணிப்பதற்காக, "பத்மஸ்ரீ பத்மபூஷண் நடிகர் திலகம் எம். பி. நடித்த 'வம்ச விளக்கு!'" என்று ஜெயமன்மதனிடமிருந்து நடுங்கிய குரலில் பதில் வந்தது.



வெள்ளித்திரை

போக, தியாகி தாத்தா மட்டும் வசனம் பேசிவிட்டு.... ஹம்மாடியோவ்!

தாத்தா வயசானாலும், நரைத்த விக்கை மாட்டிக் கொண்டு சிவாஜி என்னமாய்க் குஸ்தி போடுகிறார்! வில்லனும் எவர்கிரீன் நம்பியார். சிவாஜியின் கார் என்று நினைத்துக் கொண்டு இன்னொரு காரை வெடிவைத்துத் தான் தூளாக்குகிறார். சிவாஜி சிரித்துவிட்டு, ஒரு பொத்தானை அழுத்த நம்பியார் கார் புகைப் புகையாய் சுருள்கிறது. 'இந்த பட்டாசு வேலையெல்லாம் நம்மகிட்ட வேணாம் பச்சா' என்று சிவாஜி சொல்லும் போது தியேட்டரே கலகலக்கிறது.

நிறைய தெரிந்த முகங்கள் ரயில் சிநேகம் மாதிரி வந்துபோகிறார்கள்.

மூளையைக் கசக்கிக் கொள்கிற ஜாதி இல்லை டைரக்டர் கிருஷ்ணமூர்த்தி. அநாவசிய சிக்கல்கள் இல்லாமல், நினைத்த இடத்தில் நினைத்த நேரத்தில் என்று துப்பாக்கிகளைப் பேசச் சொல்கிறார்.

கங்கை அமரன் மியூசிக். ஏனோ தானோ.

தியேட்டரை விட்டு வெளியே வந்து பார்த்தால், வேதாளம், சிவாஜி+பிரபுவின் எண்பதடி கட் அவுட்டின் உச்சியில் தலையைத் தொங்கப்போட்டு உட்கார்ந்திருந்தது. ''ஹரே பாய், சலோ'' என்று குரல் கொடுத்ததும் காற்றில் மிதந்து காணாமல் போனது. அப்பா! இன்னும் ஒரு வாரத்திற்குத் தொந்தரவு இல்லை.



வம்ச விளக்கு

மூன்று தலைமுறையாய் நாம் பார்த்து வந்திருக்கும் அதே கதை. ஒரு நேர்மையான அப்பா, இன்ஸ்பெக்டர் மகன், வில்லன் கூட்டத்தில் போய் எந்த ஸ்டண்ட்டும் செய்யாமல் சுலபமாய்ச் செத்துப் போகிறார், இன்ஸ்பெக்டர். குழந்தையைப் பெற்ற கையோடு அவர் மனைவி இறந்து போகிறார். பிள்ளையை அநியாயமாய்க் கொன்றவர்களைப் பேரனை வளர்த்துப் பழி வாங்குகிறேன் என்று தாத்தா சபதம் செய்து ஒரு கடத்தல் கும்பலுக்குத் தலைவராகிறார். எதற்கு? பேரன் பிரபு வசதியாய் இருக்க வேண்டும், தன்னுடைய அடையாளம் வெளியே தெரியக் கூடாது என்று கதம்பமாய்க் காரணம் கொடுக்கிறார். அப்புறம் தாத்தா, பேரன் டடாய். கடைசியில் எல்லாம் புரிந்து போக, வில்லன் கும்பலை ஒவ்வொருத்தராய்த் தேடிப்பிடித்து... படம் முடிகிற நேரத்தில் திரையில் துப்பாக்கி இல்லாமல் யாருமே நடமாடுவதில்லை. ஏ-யை பி சுட, பி-யை சி சுட, சி-யை டி சுட என்று சங்கிலி சாவுகள். எல்லோரும் முதல் குண்டிலேயே செத்துப்

வேதாளமும் ஜெயமன்மதனும் 3

4

அரண்ய நடுவில் வஞ்சம்

அம்பு ஒன்று தலையை உரசி, மரத்தின் அடித் தூறில் தரித்து நிற்க.

வர்மனின் அத்தனை உணர்வுகளும் எழுந்து நின்றன.

இரண்டாமவன் அதற்குள் அங்கே வந்திருந்தான். மற்ற இருவரும் சுழன்று போரிடுவதைக் கண்டு எப்போது பாயலாம் என்று வசம் பார்த்துக் கொண்டிருந்தான்.

வர்மன் தனது சீற்றத்தின் நெருப்பு அனைத்தையும் வீசிக் கொட்ட, அவன் வாள் மின்னும் ஒளியே மின் கீற்றல்களாக விளையாடியது. குதிரை பலவிதக் கட்டளைகளுக்குத் தத்தளித்தது.

மோகினி திருக்கோலம்

ஸ்ரீவேணுகோபால



சடக்கெனத் தலையைக் குனிந்தான். குதிரையைத் தட்டினான். பறந்தான். ஆசான் இருக்கும் இடத்தை அடைய வேண்டும் என்று துடிப்பு.

அதற்குள் அம்புகள் காற்றில் சுழிந்து கொண்டு ஓடின. தோள் ஓரமும் கழுத்து ஓரமும் ஓடின. அதன் சப்த அலைகள் அவனை மோதித் தள்ளின.

மராட்டியர்களின் போர் முறையை ஆசான் சொல்லியிருந்தார். சொற்ப அம்புகளே அவர்கள் வைத்திருப்பார்கள்! அதையும் மிகச் சிலரே உபயோகிப்பார்கள். வாளும் கேடயமும் தான் அவர்களின் முக்கிய ஆயுதங்கள். நேர்த் தாக்குதல் ஒன்றே அவர்களது பிரதான கலை!

வர்மன் மரங்களூடே பின்னினான். எதிர்பாரா இடங்களில் குதிரையைத் திருப்பினான். ஓடும் வேகத்தில் அவன் உருவம் ஒரு நிழலாகத் தெரிந்தது.

சிறிது நேரம் பிரயாணித்ததும் ஒரு மேட்டுப் பாங்குள்ள மண் எழுச்சியைப் பார்த்தபோது, கண்கள் தயங்கி நின்றன.

இருபுறங்களிலும் இரு மராட்டியர் உற்பத்தி ஆகி இருந்தார்கள்.

வர்மன் போகும் திசையை அவர்கள் இரு ஓரங்களிலிருந்தும் மூடுவதற்கு வந்தார்கள்.

சட்டென்று யோசித்து நாலா பக்கமும் பார்த்தான் வர்மன். இருவரைத் தவிர யாரும் மறைந்து இருப்பதாகத் தெரியவில்லை. ஆத்திரம் ஒன்று தலைக்குள் வெப்பாகக் கொதித்தது. இதுவரை யாரையும் அவன் தாக்கவில்லை. இனியும் அப்படி இருக்க விருப்பமில்லை.

குதிரையைத் தைரியமுடன் செலுத்தினான். மிக உற்சாகமுடன் அது மேடு ஏறியது. அவன் எதிர்பார்த்தது போல் ஒருவன் அதற்குள் குறுக்கிட்டு விட்டான். நெருங்கும் வரை சும்மா இருந்து விட்டுப் பிறகு வாளைச் சரியாக உருவிக் குதிரையினின்று எம்பித் தாவினான்.

மூர்க்கமான தாக்கு அது! மராட்டி அதைச் சாமர்த்தியமாகச் சமாளிக்க, ஒரு துவந்தப் போர் அங்கே நிகழ்ந்தது.

மராட்டியன் சீக்கிரம் இளைறுவது தெரிந்தது. ஒவ்வொரு அடியாகப் பின்னேறுவதைப் பார்த்ததும் வர்மனுக்கு உற்சாகம் பிறந்தது. கடைசியில் உக்கிரமாக ஒரு பிரயோகம் செய்ய, மராட்டியனது தோளில் உக்கிரமாக விழ, அந்தப் பகைவனின் உடல் தொபீரென்று கீழே சரிந்தது.

அவன் துணைக்கு வந்து கொண்டிருந்த மற்ற மராட்டியன் உடனே குதிரையை மடக்கிக் காட்டுக்குள் புகுந்து ஓட ஆரம்பித்தான்.

அவ்வளவில், தனது முதல் வெற்றியைக்கண்டு அகமகிழ்ந்த வர்மன், 'ஆசானே, வணக்கம்' என்று வாளை மேலே தூக்கிப் போட்டுக் கையில் பிடித்து, ரத்தம் தோய்ந்த அதன் கூர்மையை முத்தமிட்டான்.

பிறகு இளைக்கும் குதிரையுடன் மேடு ஏறி ஆசான் நின்ற இடத்தைத் தேடிப்போக ஆரம்பித்தான்.

வெகுநேரம் தேடியும் இடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

''ஆசான், ஆசான்!'' என்று பலமுறை அழைத்தான் அவன்.

குதிரையைச்செலுத்திசற்றுக் கவலையுடன்நகர்ந்து போனான்.

அந்தக் காட்டு வழி அவனுக்குத் தெரியாது. அவன் போகும் தடமும் சரியல்ல என்றுஅவனுக்குத்தெரியும்.

சிறிது தூரம் அலைந்த பிறகு,ஒரு படர்வான மரத்தடியில்கீழேஇறங்கிஅமர்ந்து கொண்டான்.

குதிரை ஒருமுறை அவனை அன்போடு பார்த்தது.

ஆசான் எங்கே போயிருப்பார்?அவர் நின்ற இடம் இதுதானா? என்று பல யோசனைகள் மனத்தில் ஓட,

அந்தப் பெண் பயத்தில் அலறியகாட்சியும்நினைவுக்கு வந்தது.

அவள் அலறுவிட்டால் அவன் குவித் இருக்க முடியாது.
கடவுள் போல காப்பாற்றினான்.
யார் அவன்?
கலைக்கரையில் அவள் நின்ற திருக் கோலம் தெரிந்தது.
சிற்பமான வடிவம்! ஒரு கொடியின் சாயல்! அவள் கண்களை மறக்க முடியாது. கருகலான கார் கால ஆகாயம் போல இருந்தது.
மனத்தில் அது என்ன விதமான சலனம் உண்டாக்கியது?
இதுவரை அனுபவியாத நூதன உணர்வை உண்டாக்கி விட்டது.
என்ன பரவசமாக இருந்தது!
சிந்து!
என்ன அழகான பெயர்!
அவளது திருநெல்வேலிச் சீமையில் தாமிர வருணிக்குச் சிந்து என்று மற்றொரு பெயர் உண்டு.
அதனால் தான் அங்குள்ள துறையை 'சிந்து புகும் துறை' என்று அழைக்கிறார்கள்.

அந்தத் துறையில் பாயும் நதியின் அழகும், அமைதியும் போல இந்தச் சிந்து விளங்குகிறாள்!
இவள் யார்?
யாருடைய பெண்?
குதிரையில் செல்கிறாளே!
அரச குலப் பெண்ணா?
வர்மன் தனது அங்கியின் பைக்குள் கையை விட்டான்.
அங்கே கனமாக இருந்த அந்தப் பதக் கத்தை வெளியே எடுத்தான்.
வட்ட வடிவமான பதக்கம்.
சற்றுக் களிம்பு ஏறி இருந்தது.
மற்றபடி கனமான தங்கம்!



அதன் முகப்பில் நிறைய வேலைப்பாடு களுடன் பூவேலை இருந்தது.

பார்ப்பதற்கு மனோகர அழகு.

இந்தப் பதக்கத்தில் ஏதாவது விசேஷம் உண்டா?

அந்தப் பெண்மணி இதை ஏன் தன்னிடம் கொடுத்தாள்?

வர்மன் இரும்ப அதைத் தனது பைக்குள் போடவில்லை.

அதற்கு மாறாக, தனது இடுப்பு உத்தரியத்தின் உள்பக்கம் வைத்து மடித்து இறுக்கிக் கொண்டான்.

சிந்தனை வசத்தில் சிறிது நீந்தி விட்டு மெள்ள அவன் நிமிர்ந்த போது, புருவம் நெரிந்து மேலே சென்றது.

சுற்றி வளர்ந்த மரத்து அடர்வுகளில் மர்மமாக ஓர் இயக்கம் இருப்பது புலப்பட்டது.

திடுக்கிட்டு எழுந்தான்.

குதிரை மீது தாவி, ஒரு கையை வாளில் வைத்தான்.

பிறகு உன்னிப்புடன் திசைகளைப்பார்க்க, அதன் சூன்யம் உண்மையில் ஒரு சூன்ய மல்ல என்று தோன்றியது.

மனத்தில் ஒரு . கவுளி அடித்தது.

குதிரையைச் சற்று முன் செலுத்தி, "யார் அங்கே?" என்று கேட்டான்.

மௌனமான அரண்யம் அதை ஒருமுறை பிரதிபலித்தது.

கண்கள் துடிப்புடன் ஜாக்கிரதையாகிவிட "யார் அங்கே? தைரியமுண்டானால் எதிரில் வா!" என்று பிளிறிக் கொண்டு குதிரையை முன்னால் நடத்தினான்.

இருபதடி தொலைவு சென்றதும், திடும் என்று அவன் மீது ஒரு பாம்புச் சுருள் விழுந்தது.


உடனே அண்ணாந்து பார்த்தான்.

மேலே இருந்து ஒரு கயிறு அவன் மீது மாலையாக விழுந்திருந்தது.

யோசிப்பதற்குள் அது இறுக ஆரம்பித்தது.

"நம் அரண்மனை பங்கா இழுப்பவன் இரண்டு நாட்களாக வேலைக்கு வரவில்லையே, என்ன காரணம் அமைச்சரே?"

"அவன் 'ஆப் சிசன் தள்ளுபடி'யில் சொந்தமாக ஒரு சீலிங் ஃபேன் வாங்கி விட்டானாம் மன்னா! அந்தத் தலைக்கனத்தில் அலைகிறான்."



வாளை மேலே தூக்கிக் கயிற்றை வெட்ட முயல, அதற்குள் அவனது உடல் சுருக்கோடு மேலே தூக்கப்பட்டது.

அடுத்த விநாடியே கீழே எறியப்பட்டது.

கோபத்துடன் எழுந்திருக்க முயல, உருவங்களாக முளைத்த மராட்டியர் அவனைச் சூழ்ந்து கொள்வது தெரிந்தது.

அரண்யத்தின் நடுவை வகிர்ந்து சென்ற அந்தப் பாதையின் முடிவில், ஒரு சிறிய நீர்நிலையை அடுத்து அமைந்திருந்தது அந்த மராட்டியர் இருப்பிடம்.

கூடாரங்கள் ஏதும் அங்கில்லை; வெறும் திறந்த வெளிதான்!

அமர்வதற்கோ, நீட்டுவதற்கோ சுற்றிவர மணல் குவியல்கள் இருந்தன.

அவனை ஒரு மரத்தின் தூருடன் கட்டியிருந்தார்கள்.

வர்மன் ஒரு பொறியில் அகப்பட்டவன் போல அங்குமிங்கும் பார்வையை வீசிக் கொண்டிருந்தான்.

அந்த மாலை நேரத்தில் அந்த மராட்டிய வீரர்கள் . விருப்பப்படி சாராயத்தைக் குடித்து விட்டு மிக மோசமான முறையில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சிலர் வடக்கத்தி ராகத்தில் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

ஒருவர் குரல் அந்தப் பாட்டில் சற்று எடுப்பாகக் கேட்க, வர்மன் திடுக்கிட்டு அந்தக் கும்பலை விசேஷமுடன் நோக்கினான்.

அவன் பல் அரைபட்டது.

அங்கே, அந்தச் சேவகர்களுடன் சேர்ந்து ருத்ரபதி ஆசான் குடித்துக் கொண்டிருந்தார்.

அவரது குரல்தான் தனித்துவமாகத் தெரிந்தது.

வர்மன் அவரையே கவனித்துக்கொண்டிருக்க, ஆசான் ஓர் எதேச்சையில் முகத்தைத் திருப்பி அவன் பக்கம் பார்த்துவிட்டார்.

மறுகணம் முகத்தைத் திருப்பிக்கொண்டு வேறுபுறம் நழுவுவது தெரிந்தது.

ஆத்திரம் மீறிவர, 'துரோகி' என்ற வார்த்தை கட்டைத் தொனியாக உதட்டில் சீறியது.

ஆசான் மீதே பார்வையை வைத்திருக்க, அருகில் வந்த மராட்டியனை அவன் கவனிக்கவில்லை.

மிக அருகில் வந்ததும் திடுக்கிட்டுப் பார்க்க,

"தம்பி! உனக்கு விடுதலை வேண்டுமா? வீர மோட்சம் வேண்டுமா?" என்று கேட்டான்.

"ஏன் கேட்பதற்கு நீ யார்?" என்று கோபத்துடன் வர்மன் கேட்க,

"தம்பி! நீ எங்களுக்காக ஒரு காரியம் செய்தால் உன்னை விடுதலை செய்வோம். இல்லா விட்டால் வெறிநாயை வேட்டை ஆடுவது போல் ஆடி உன்னைக் கொன்றுவிடுவோம்" என்று கூறினான் மராட்டியன்.

வார்த்தைகள் சாராயம் தோய்ந்து வந்தன.

(தொடரும்)



விருது பெற்ற வேங்கை

பதினான்கு வயது வரை மழைக்குக் கூடப் பள்ளிக் கூடத்துப் பக்கம் ஒதுங்காதவர் 'மணி' என்று செல்லமாக வீட்டில் அழைக்கப்பட்ட சுப்பிரமணியன். ''படிப்பு என்றால் எடு செருப்பை என்பார் அப்பா..'' என்கிறார் அண்மையில் தமிழக அரசின் திரு. வி. க. விருது பெற்ற எழுத்தாளர் கோவி. மணிசேகரன்.

வெறும் சுப்பிரமணியன், ஓர் அமெச்சூர் நாடகத்தில் கதாநாயகனாக நடித்தபோது அந்தப் பாத்திரத்தின் பெயர் சேகர். செல்லப் பெயரும் பாத்திரப் பெயரும் சேர்ந்து 'மணி சேகரன்' பிறந்த கதை இது. செட்டி நாட்டுப் பாணியில் அப்பாவின் பெயரான கோவிந்தனில் முதல் இரண்டு எழுத்துக்களைச் சேர்த்துக் கொண்டவர் கோவி. மணிசேகரன். ''அதற்கு முன்னால் இப்படி மணிசேகரன் என்கிற பெயரே கிடையாது'' என்று அடித்துக் கூறுகிறார் கோவி.

''இப்போது யார் யாரோ 'மணி சேகரன்' என்று பெயர் வைத்துக் கொள்கிறார்கள்... கேட்டால் உங்கள் மேல் கொண்ட அன்பால் வைத்துக் கொள்கிறேன் என்கிறார்கள்... என்ன செய்ய?'' என்கிறார்.

கொத்தனார் மேஸ்திரியாக இருந்த அந்தத் தந்தை விரும்பியது மகன் தொழில்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான். அச்சுத் தொழில் முதல் தச்சுத்தொழில் வரை எல்லாவற்றையும் கற்றுக்கொண்டார். அப்புறம் புதுச்சேரியிலிருந்த தமக்கையின் கணவர் க. ல. சுப்பிரமணிய முதலியார், தமிழ், ஆங்கிலம் கொஞ்சம் பிரெஞ்சு சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தார். மூன்றே ஆண்டுகளில் மெட்ரிக் தேர்ச்சி பெற்றார். மருமகன் மேலே பி. ஏ., எம். ஏ. என்று படிக்க வேண்டும் என்று மாமா ஆசைப்பட்ட போது அங்கிருந்து கழன்று கொண்டார். (அவருடைய வார்த்தைகளில் 'திமிறிக் கொண்டு வெளியே வந்தேன்'.)

சின்ன வயதில் சங்கீதத்தில் ஆர்வம் உண்டு. புதுச்சேரி படிப்பின்போது கொஞ்சம் சங்கீதமும் கற்றுக் கொண்டார். மெட்ரிக் முடித்த கையோடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்து சங்கீத பூஷணம் பட்டம் பெற்றார். முதல் வகுப்பில் தேறினார். நிறுவனர் பரிசாக ஆயிரம் ரூபாயும் சில நூல்களும் பெற்றார்.

அண்ணாமலையில் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் மாணவர். குருகுலவாசம். கூடவே தமிழும் கிடைத்தது. குருநாதருக்கு வேட்டி துவைப்பது முதல், மேடையில் உடன் பாடுவது வரை எல்லாம் செய்தார். பேராசிரியர் லெப. கரு ராமநாதன் செட்டியார் பொருளுதவி செய்தார்.

அண்ணாமலையில் எதையாவது எழுத வேண்டும் என்கிற அரிப்பு ஏற்பட்டது. அறிஞர் அண்ணாவின் எழுத்துக்களின் செல்வாக்குக்கு ஆட்பட்டது அங்குதான். ''உரை நடை ஆசான் என்று அறிஞர் அண்ணா அவர்களைத்தான் சொல்வேன்'' — என்கிறார் கோவி.

''அந்த நாட்களில் எழுத்தாளனாக ஆக முயன்றது பிரம்மப் பிரயத்தனம்தான். நூறு கதைகள் அனுப்பினால் அவ்வளவும் திரும்பி வரும். எழுத்தாளனாக மூச்சு விட முடிந்தது 1954—இல் தான். 'கலைமன்றம்' வார இதழில் துணையாசிரியனாக அமர்ந்து எழுத்து வேட்கையைத் தீர்த்துக் கொண்டேன். அதில் தான் முதல் சரித்திரநாவல் 'அக்கினிக் கோபம்' வந்தது.

அறிஞர் அண்ணாவை உரைநடை ஆசான் என்று வரித்துக் கொண்ட கோவி தம் சரித்திரக் கதைகளின் ஆசானாக மதித்துப் போற்றுவது பேராசிரியர் கல்கி அவர்களைத் தான். பொன்னியின் செல்வனைப் படித்து முடித்த பிறகு ஏற்பட்ட எழுத்து வெறியில் பிறந்தது தான் அக்கினிக்கோபம்.

இவர் வீட்டில் யாருக்கும், மனைவி உட்படக் 'கோவி' என்கிற எழுத்தாளரைப் பற்றித் தெரியாது! சொல்கிறார்:

''என் மனைவிக்குக் கோவியைத் தெரியும். ஆனால் கோவி. என்கிற எழுத்தாளரைத் தெரியாது. அவளுக்கு பக்திதான் எல்லாம்.

கந்தர் சஷ்டி கவசத்துக்கு வேண்டுமானால் உரை சொல்வான்.

''அடுத்த தலைமுறையில், பேரன் மயூரப் பிரியன்... இவன்தான் என்னுடைய இலக்கிய வாரிசாக வருவான் என்று எதிர்பார்க்கிறேன்...'' (வண்ணப்படம்)

ஆனாலும், மனைவியைப் பற்றிக் கூறுகிற ஒரு வார்த்தை... ''அவள் என் எழுத்துக்களின் ரசிகையாக இல்லாவிட்டாலும், எழுத விட்டவள்... இடையூறு இல்லாமல் பார்த்துக் கொண்டவள். இதைவிட வேறென்ன வேண்டும்?''

எடுத்த காரியம் எதிலுமே தோல்வி கண்டதில்லை என்று மார் தட்டுகிற கோவி, தானே ஒப்புக் கொள்கிற ஒரு தோல்வி சினிமாத்துறை. ஆனாலும் இந்தத் திரைப் படத் துறை தோல்வி, எழுத்துப் பணிக்குப் பல நயங்களைக் கற்பித்தது; வளர்ச்சிக்கு அந்தத் தோல்வியும் மூலகாரணமாக அமைந்தது என்கிறார் கோவி.

சமயபுரத்தாள் என்கிற வார்த்தை காதில் விழுந்தாலே உடம்பெல்லாம் சிலிர்த்துப் போகிறவர் மணிசேகரன். திராவிட இயக்க ஏடுகளில் எழுதிய காலங்களில் முழு நாத்திகராக இருந்தவர் இவர். ஓர் அனுபவம் இவருக்குச் சமயபுரப் பாதையைக் காட்டி விட்டது.

''62—63 வாக்கில், இரண்டு கண்களும் பழுதுபட்டன. பல டாக்டர்கள் முயன்றும் பார்வை வரவில்லை. ஒரு வெள்ளிக்கிழமை—சோறு கேட்டு வாசலில் வந்த ஒரு கிழவி சொன்னாள், 'கண் கொடுப்பாள் சமயபுரத்தாள், கவலைப்படாதே' என்று. மறுநாள் காலையில் அந்த அற்புதம். நிஜமாகவே கண் விழித்தேன். பார்வை தெளிந்தது. அடுத்த நாளே சமயபுரம் போய் அவளுடைய சந்நிதியில் அடைக்கலப்பட்டேன்''

தமிழக அரசு, மற்றும் பல்வேறு அமைப்புக்கள் மூலம் இவர் பெறுகிற பதினோராவது மரியாதை இந்தத் திரு. வி. க. விருது. இதைப் பற்றிச் சொன்னார் கோவி:

''என்னுடைய உரைநடை ஆசானின் பவளவிழா நாளில், என்னுடைய சரித்திரக் கதை ஆசானின் குருநாதர் பெயரால் விளங்கும் இந்த விருதைப் பெறுவது எவ்வளவு சிறப்பானது!''

பேட்டி கட்டுரை: சுப்ர. பாலன்

புகைப்படம், வண்ணப்படம்: உதரா



அப்பா பாவம்
அனுபவம் தவிர
அனைத்தும் இழந்தாச்சு.

அம்மா பாவம்
தாலிக்கொடியும்
அடகு போயாச்சு.

அருமைத் தம்பி
ஆறு மணிக்கே
சினிமா போயாச்சு — நான்

அரளிப்பூவாய்
ஆகிப் போனேன்
சமைஞ்சு நாளாச்சு.

ஆபீஸ் விட்டதும்
வாழ்க்கை என்பது
அடுப்படி என்றாகும்

அடுத்த மாத
ஆவணியோடு
வயதும் ஒன்றேறும்.

ஆரணி காஞ்சிப்
புடவைகளெல்லாம்
கனவினில் வந்தாடும்-ஆனால்

அம்மா உடுத்திக்
கிழித்த புடவை
தாவணி என்றாகும்.

காதலில் கூட
பொருளாதாரக்
கறையின் சாயங்கள்.

காசிலா வீட்டில்
பிறந்த பெண்களின்
கனவிலும் காயங்கள்.

கடற்கரை மறைவில்
திரைப்பட இருளில்
கண்கள் பெரிதென்பான்
பின்னர்

காகள வேறொரு
பெண்ணை மணந்து
காசே பெரிதென்பான்.

எரிகிற நிலவாய்
இன்னும் இப்படி
எத்தனை காலம்தான்

எந்த விரல்கள்
என் மனவீட்டில்
எழுதும் கோலம்தான்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran


KALKI
11.11.84 ரூ.1.50
எழுத்துலகில்
ஒரு வேங்கை
Kodak
கல்கி

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

